Regd. M. 1803 Vol. 6—No. 7.

# லக்ஷ்மி

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | தமிழ் மொழி | 245 |
| 2. | எனது குருநாதர் | 246 |
| 3. | பழமொழிகள் | 251 |
| 4. | மனுஸ்மிருதி | 254 |
| 5. | ஒரு ஜாதகக் கதை | 256 |
| 6. | நட்டாஜி | 258 |
| 7. | மதுவிலக்கு | 260 |
| 8. | வாழ்க்கை நூல் | 262 |
| 9. | காந்தமும் காந்தப்பொருள்களும் | 265 |
| 10. | பத்திராசிரியர் குறிப்புகள் | 267 |
| 11. | மதிப்புரை | 272 |
| 12. | இந்திய மாதருலகம் | 273 |
| 13. | இந்தியப் பத்திரிகைகள் | 276 |
| 14. | வெளிநாட்டு இந்தியர் | 280 |
| 15. | விசேஷக் குறிப்புகள் | 283 |
| 16. | சித்திரப் பத்தி | 284 |


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 AUG 1929
MADRAS

உள்நாடு 2' லக்ஷ்மி ஆபிஸ் சென்னை. வெளிநாடு 2a

## புத்துயிர்!

நாம்புத்தளர்ச்சி. தேக மெலிவு, பலமின்மை, வீரியக் குறைவு இவைகளால் நீங்கள் தளர்வடைந்திருந்தால் இன்றேஒரு புட்டி

## ஜீவாமிருதம் (ரிஜிஸ்டர்ட்)

வாங்கி உபயோகியுங்கள். தேகத்தில் உள்ள எவ்வித வியாதிகளேயும் அறவே நீக்கி, போன பலத்தை மீட்டி, புதிய ஊக்கம் காட்டி, உங்களே உண்மையில் ஒரு புதிய மனிதனுக்கி விடும். இந்த அரிய ஔஷதம் கண்டு பிடிக்கப்பட்டு 30 வருஷங்களாக நல்ல பெயருடன் உலகில் நிலவி வருவதே இதற்குப் பெரியதொரு அத்தாட்சி.

**விலே ரூ. 3—4—0.**

## ஆயுர்வேதாஸ்ரமம்,

151, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

தபால் பெட்டி 287,

சென்னே.

# லக்ஷ்மி

தமிழர் முன்னேற்றம் கருதி வெளிவரும்

## ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

ஸ்தாபகர்—ஸ்ரீ. கே. எஸ். முத்தையா. ஆசிரியர்—கே. எஸ். சுந்தரம்.

| மலர் 6. | 1929ஆ ஏப்ரல்மீ, சுக்கிலஆ சித்திரைமீ | இதழ் 7. |
|---|---|---|

### தமிழ் மொழி.

(ஸ்ரீ. கோமதி யப்பன்)

1. சங்கத் தவிசிருந்து — தங்கமே தங்கம்—தனி
தனியரசு செய்தமொழி — தங்கமே தங்கம்
துங்கத் தமிழ்மொழியே — தங்கமே தங்கம்—எங்குந்
துலங்கிட வேண்டு மடி — தங்கமே தங்கம்

2. பெற்றமொழி பேணுவது — தங்கமே தங்கம்-பெற்ற
பிறப்பிற் பெருங்கடமை — தங்கமே தங்கம்
உற்றவிந்த உண்மையினேத் — தங்கமே தங்கம்—என்றும்
உணர்ந்தே யொழுகவேண்டும் — தங்கமே தங்கம்

3. நாட்டுமொழி நாட்டுதலே — தங்கமே தங்கம்—உயர்
நாகரீக மாகுமடி — தங்கமே தங்கம்
காட்டுவினே யாகுமடி — தங்கமே தங்கம்—சொந்தக்
காந்திமொழி கைவிடுதல் — தங்கமே தங்கம்

4. பள்ளித் தலங்களெலாம் — தங்கமே தங்கம்—இயல்
பாடங்க ளத்தனேயும் — தங்கமே தங்கம்
தெள்ளு தமிழ்மொழியில் — தங்கமே தங்கம்—வெகு
திறமாய்ப் புகட்டவேண்டும் — தங்கமே தங்கம்

5. பரந்த பெருங்கடலாம் — தங்கமே தங்கம்—இந்தப்
பாரின் கலேகளெலாம் — தங்கமே தங்கம்
சுரந்து சுவைத்தமிழில் — தங்கமே தங்கம்—மிகச்
சொகுசா யமைத்திடுவோம் — தங்கமே தங்கம்

(இளந்தமிழன்)

224255

# எனது குருநாதர்.

(ஸ்ரீமாந் வி. பசுபதி.)

விவேகாநந்தரின் கியூயார்க் உபன்யாசத்தைத் தழுவி எழுதப்பட்டது.

கீதையிலே, ஸ்ரீ கிருஷ்ணன் "அறம் தேய்ந்து மறம் வளரும் நாளில் மனித வர்க்கத்தைக் காப்பாற்ற நான் இவ் வுலகிற்கு வருவேன்" என்று சொல்லுகிறார். ஜனங்கள் அதிகரிப்பதினாலோ, அன்றிக் கால மாறுபாட்டினாலோ, இவ்வுலகம், சீர் திருத்தத்தை விழைந்து நிற்கும் பொழுது ஓர் அருஞ் சக்தியானது தோன்றி பெரு மாறுதல்கள் செய்கின்றது. மனிதனின் செய்கைகள் இரண்டு இடங்களிலேயே அடங்கியுள்ளன. ஒன்று உலகாயதம்; மற்றொன்று ஆத்மார்த்தம். எனவே இந்த இரண்டு வழிகளிலும் பெரிய மாறுதல்கள் ஏற்படுகின்றன. தற்காலத்தில் உலகாயதமாகப் பெருஞ் சீர்திருத்தம் மேனாட்டில் ஏற்பட்டுளது. ஆனால் கீழ் நாட்டில் பெரிய ஆத்மார்த்திக மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இன்று, மனிதன் ஆத்மார்த்திக விஷயத்தில் மற்றொரு சீர் திருத்தத்தையும் பெறல் வேண்டும். உடல் ஞானம் பெருத்துள்ள இந் நாளில்—மனிதன் தன் தெய்வத்தன்மையை மறந்துள்ள இந் நாளில்— பணமே பெரிதெனக்கருதி, அதைத் தேடும் ஒரு பொறியாக மாறியுள்ள இந் நாளில்—ஒரு பெரிய சீர் திருத்தம் தேவையே. ஆஹா! ஓர் அற்புத த்வனி கேட்டுவிட்டது. உலகாயத முகிலைத் தூர்த்த ஓர் அரிய சக்தியும் தோன்றியுளது. அச் சக்தியும் இப்பொழுது இயங்கத் தொடங்கி விட்டது. அந்த சக்தி மனிதன் மறந்துபோன சக்தியை அவனிடையில் மறுபடியும் மிளிரச் செய்து வருகிறது. அந்த சக்தியும் கீழ் நாட்டினின்றே உதயமாயுளது.

ஒரு மனிதனே எல்லாப் பொருளையும் வைத்திருக்க வேண்டுமென்று சொல்லுவது வீண். எனினும், நாம் எவ்வளவு குழந்தைத் தன்மையோடிருக்கிறோம்! இந்தப் பிரபஞ்சத்தில், தன் விளையாட்டுப் பொம்மையொன்றே தேடத் தகுந்த பொருள் என்று பச்சைக் குழந்தை தன் அறியாமையால் நினைக்கிறது. அதைப் போலவே உலகாயத சக்திகள் பலவும் தன்னுள்ளே பெற்றிருக்கும் ஒரு ஜாதி,—அவ்வுலகாயத சக்திகளே அபிவிர்த்திக்கு வழியென்றும்; அதுதான் நாகரீகத்துக்கு மார்க்கமென்றும், அவ்வித சக்திகளைப் பெறாத ஜாதி உயிர் வாழ உரிமையுடையதல்ல வென்றும், அவர்கள் வாழ்வே பயனற்றதென்றும் கருதுகிறது. ஆனால் மற்றொரு ஜாதியோ உலகாயத நாகரீகம் மாத்திரமே கோரிய பலனை அளித்து விடாது என்று கருதுகிறது. "ஆதித்யன் கீழேயிருக்கும் அகில மெல்லாம் ஒருவன் அடக்கி யாண்டாலும், ஆத்மஞானம் பெறாதவனாய் அவன் இருப்பானேயாயின் அவன் இவ்வளவு செல்வத்தையும் பெற்றதனாலாய பயனென் கொல்!" என்று உலகத்துக்கு ஒரு காலத்தில் கிழக்கேயிருந்து ஒரு த்வனியானது கெம்பீரமாகத் தோன்றியது. இது கீழ் நாட்டின் தர்மம்; மற்றையது மேல் நாட்டின் தர்மம்.

ஒவ்வொன்றும் அதனதன் வழியில் தன் தன் பெருமையைப் பெற்றிருக்கிறது. ஆகையால் தற்காலம் வரப்போகும் சீர் திருத்தம் இந்த இரண்டு நிலைகளையும் சமரசப்படுத்திச் சீர்திருத்தும். மேனாட்டாருக்குப் புலன்கள் நுகரும் சுகமே பேரின்பமாயிருப்பதுபோல, கீழ்நாட்டாருக்கு ஆத்மாவைப்பற்றி யறிவதும் அதன் ஞானம் பெறுவதும் பேரின்பமாம். கீழ் நாட்டானொருவன் தான் விரும்பும் எப்பொருளையும் தன் ஆத்மாவிலேயே காண்கிறான். வாழ்க்கையை உண்மைப் படுத்துகிற எப்பொருளையும் அவன் அதிலே காண்கிறான். எனவே மேனாட்டான், கீழ் நாட்டானைக் "கனவுகாண்போன்" எனக் கருதுகின்றான். ஆனால் கீழ்நாட்டானோ, தோன்றி நின்று மறையும் அசித்துப் பொருள்களில் மேனாட்டான் வைத்திருக்கும் மோஹத்தைக் கண்டு, இழித்துரைத்துப் பரிகசிப்பான். எனவே, ஒருவரை ஒருவர் "கனவு காண்போன்" எனப் பரஸ்பரம் அழைத்துக் கொள்ளுகின்றனர்.

மனித வர்க்கத்தின் அபிவிர்த்திக்கு, மேனாட்டானின் கொள்கை எவ்வளவு இன்றியமையாததோ, அதைப் போலவே கீழ் நாட்டானின் கொள்கையும் மிக மிக முக்கியமானது. பொ



றிகள் (Machines) எப்பொழுதுமே மனித வர்க்கத்துக்கு இன்பத்தை யளித்ததும் கிடையாது. அளிக்கப் போவதுங் கிடையாது. தன் மனதை யடக்கி யாள்பவனுக்கே இன்பம் என்பது உண்டு. மற்றையோருக்கு இன்பம் எள்ளளவுங் கிடையாது. இறுதியில் ஆழ்ந்து ஆராயுங்கால் பொருள்களின் சக்தி என்ன? கம்பியின் மூலம் மின் சார சக்தியை ஓடச் செய்யும் ஒரு மனிதனை மிகவும் உயர்ந்தவனென்றும், சிறந்த அறிவாளியென்றும் உலகம் ஏன் உன்ன வேண்டும்? அதைவிடப் பத்து லக்ஷம் மடங்கு உயர்வான காரியங்களை பிரகிருதி தேவியானவள் ஒவ்வொரு விநாடியிலும் செய்யச் சக்தி பெற்றவ ளல்லவா! ஆகையால் இயற்கையின் காலில் விழுந்து ஏன் வணங்கக் கூடாது? பிரபஞ்சம் முழுவதையும் நீங்கள் அடக்கி விட்டாலும் அன்றி அதிலுள்ள ஒவ்வொரு அணுவின் மேலும் நீங்கள் ஆதிக்கம் செலுத்தினாலும் அதனாலாய பயனென்கொல்? தன்னைத்தான் வெற்றி கொள்ளாத வரையில், தன்னுள்ளே இன்பம் அடையாத வரையில், இவைகளெல்லாம் இன்பத்தை யளிக்கும் உபகரணங்கள் ஆகமாட்டா. பிரகிருதியை அடக்கியாளவே மனிதன் தோன்றினான் என்பது மெய்யே. ஆனால் மேனாட்டார் "Nature" என்னும் பதத்திற்கு கொள்ளும் பொருள் என்னை? "Nature" என்பது அவர்களுக்குப் புலன்களால் நுகரப்படும் இப்புறப்பொருளன்றோ! நம் கண்ணால் காணும் இப்பிரகிருதி தன் வானளாவிய மலைகளோடும், கரையற்ற ஆழ் ஆழிகளோடும் சிறந்த நதிகளோடும் அளவற்ற சக்திகளோடும் மாறுதல்களோடும் பார்க்க மிகவும் கெம்பீரமாக இருக்கிறதென்பது உண்மையே. ஆயினும் இதை விட உயர்ந்ததும், கெம்பீரமானதுமான சக்தி மனிதனுள்ளே அடங்கியிருக்கிறது. அது சூரிய சந்திர நக்ஷத்திரங்களை விட உயர்வானது. நாம் வசிக்கும் இந்த உலகத்தைவிட உன்னதமானது. நம் உயிர்களுக்கெல்லாம் உயர்வானது. ஆகையினால் அது ஒரு பெரிய 'சாஸ்திர சாகரமாக' விளங்குகிறது. மேனாட்டார் விஞ்ஞான சாஸ்திரங்களிலே தேர்ந்து விளங்குவதுபோல, கீழ் நாட்டாரும் இந்த சாஸ்திரத்திலே நிகரற்று விளங்குகிறார்கள். ஆகையினாலேயே ஆத்மார்த்திக மாறுதல் உலகில் ஏற்படுங்காலத்தில் அது கீழ் நாட்டிலேயே தோன்ற ஆரம்பிக்கின்றது. பொறிகள் (Machines) செய்ய விரும்பும் கீழ் நாட்டானொருவன் மேனாட்டான் அடிகளில் அமர்ந்து கற்க வேண்டும். ஆத்மாவைப்பற்றியும் ஆண்டவனைப்பற்றியும் அறிய விழையும் மேனாட்டானொருவன், கீழ்நாட்டான் அடிகளில் அமர்ந்து கற்க வேண்டும்.

இப்படிப்பட்ட அரிய சக்தியை இந்தியாவில் இயங்கச் செய்த ஒரு "மஹானின்" சரிதையை இன்று நான் உங்களுக்குச் சொல்லப் போகிறேன். இதைச் சொல்லும் முன், இந்தியா வென்பது இன்ன தென்பதையும், அதனுடைய உண்மையையும், முதலாவதாக நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். உலகாயதப் பொருள்கள் மேற்கொண்டிருக்கும் மோஹத்தினால் கண்கள் மறைக்கப்பட்டிருக்கும் ஒரு ஜாதி—தின்பதற்கும், குடிப்பதற்கும், நுகர்வதற்குமே தன் வாழ்வை எல்லாம் அற்பணஞ் செய்திருக்கும் ஒரு ஜாதி—மண்ணும் பொன்னுமே காத்து ரக்ஷிக்கத்தகுந்த உடமை என்ற சித்தாந்தம் கொண்டுள்ள ஒரு ஜாதி—புலன்கள் நுகர்வதே இன்பம் என்று கருதும் ஒரு ஜாதி—பணமே கடவுளெனக் கருதும் ஒரு ஜாதி—கஷ்டமில்லாமல் காலந்தள்ளுவதையே வாழ்க்கையின் லக்ஷியமாகக் கொண்டுள்ள ஒரு ஜாதி—மேல் நோக்கென்பதே இல்லா ஒரு ஜாதி—புலன்கள் கண்டு களிக்கும் பொருளையன்றி மற்றொன்றையும் கண்டறியாத ஒரு ஜாதி—இந்தியாவுக்குச் செல்லுமானால் அது அங்கு காணும் காட்சி என்னை? வறுமை; மூட நம்பிக்கை; அந்தகாரம்; துன்பம்; ஏன்? ஏனென்றால் அழகிய ஆடைகள் உடுத்துவதும் புஸ்தகப்படிப்பைப் பெறுவதும், தங்கள் சமூகத்தாரிடையில் மரியாதையோடு பழகுவதும், ஆகிய இவைகளே மனிதனடைந்த அபிவிர்த்திக்கு அறிகுறிகள் என்று பொருள் கொள்ளுகிறார்கள். ஆனால் இந்தியாவோ தன்னுடைய அபிவிர்த்தியை வேறு வழியில் நடத்திச் சென்றது.

அன்னிய ஜாதியாரை வெற்றிகொள்ள எண்ணங்கொண்டு தங்கள் தேசத்தின் எல்லையைக் கடந்து செல்லாதவர்களும், அன்னியருக்குச் சொந்தமான பொருள்களில் ஆசை கொள்ளாதவர்களும், தங்கள் தேசம் செழிப்புடைய தேசமாயிருந்ததைத் தவிர வேறு குற்றம் அறியாதவரும், தங்களுடைய நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து ஏராளமான செல்வத்தைக் குவித்து, அதை அன்னியர் கண்டு

அழுக்காறற்று, தேசத்தைப் பாழ்ப் படுத்த ஆளான மக்கள் நிறைந்த ஒரு ஜாதியை, மனித வர்க்கத்தின் சரித்திரத்திலே இந்தியா ஒன்றிலே தான் நீங்கள் காண முடியும். அன்னியர் தங்களைக் கொள்ளை கொண்டதற்கும், தங்களைக் காட்டு மிராண்டிகள் என்று அழைப்பதற்கும் அவர்கள் வருத்த மடைவதில்லை. ஆனால் அவர்கள் அதற்குப் பதிலாக மனித சக்தியின் மாட்சியையும், உண்மையான புருஷனின் சக்தியை மறைக்கும் திரையையும் கிழித்தெறிந்து, உலகிற்கு அறிவுச் சுடர் கொளுத்த முற்படுகிறார்கள். ஏனென்றால் அவர்களுக்குக் கனவு இன்னதென்று தெரியும். இந்த உலகத்திற்குப் பின் உண்மை இருக்கிறதென்பதும் அவர்களுக்குத் தெரியும். மரணத்தால் அழிக்க முடியாததும், உஷ்ணத்தால் உலர்த்த முடியாததும், தண்ணீரால் நனைக்க முடியாததும், நெருப்பால் எரிக்க முடியாததும், காமத்தால் கறைப்படுத்த முடியாததும், குற்றத்தால் அழிக்க முடியாததும், பாபத்தால் பங்கப்படுத்த முடியாததுமான மனிதனின் "தெய்வத் தன்மை" இந்த உலகாயத சக்திக்குப் பின்னால் திகழ்ந்து கொண்டிருக்கிறதென்பதை அவர்கள் அறிவார்கள். மேனாட்டாருக்கு புலன்களால் அறியப்படும் பொருள்கள் எவ்வளவு உண்மையோ, அதைப் போலவே கீழ்நாட்டாருக்கு அந்தர்முகமாயிருக்கக் கூடிய இந்த மனிதனின் சக்தியும் உண்மையே. நீங்கள் குண்டுவாயில் அச்சமின்றி ஆனந்தத்துடன் குதித்து விடுவது போலும், நீங்கள் தேசபக்தியின் பெயரால் உங்களுடைய உயிரைத்துரும்பென மதித்து தேசத்திற்காக அற்பணம் செய்வது போலும், அவர்களும் கடவுளின் நாமத்தால் அவ்வித ஊக்கங் காட்டுகிறார்கள். இவ் வுலகமும் அதிலுள்ள பொருள்களும் பொய் யென்றும், கனவென்றும் கருதும் ஒருவன், தனது உடையையும் உடமையையும் உதறி யெறிந்து, தனது கருத்தை மெய்ப்பிக்கிறான். இம்மனிதன் ஓர் ஆற்றங்கரையி லமர்ந்து, உயிர் அழிவற்றது என்று உணரும் பொழுது, இவ்வுடலைத் துரும்பென மதித்துத் துறக்கச் சித்தமாயிருக்கிறான். இங்கு தான் அவர்களது வீரம் செறிந்து நிற்கிறது. மரணத்தை யவர்கள் சகோதரனாக மதித்து எதிர்கொண்டழைக்கிறார்கள். ஏனென்றால், அவர்களுக்குச் சாவில்லை என்பதை அவர்கள் உணர்ந்து தெரிந்திருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான வருஷங்களாய் ஒடுக்கப்பட்டும், அன்னியர் படையெடுப்பால் ஆழ்த்தப்பட்டும், கொடுங்கோன்மையால் மிதிக்கப்பட்டும், வந்த அவர்களை அழிக்காமல் காத்த சக்தி இதிலேதான் உளது. அந்த ஜாதி இன்று உயிருடன் ஒளிர்கிறது. அந்த ஜாதி அன்னியர் கையில் அகப்பட்டு அந்தகாரத்தில் மூழ்கியிருந்த காலத்திலுங் கூட சிறந்த ஆத்ம ஞானிகளை உற்பத்தி செய்வதில் அது பின் வாங்கியதே கிடையாது. விஞ்ஞான சாஸ்திரத்திலும், அரசியலிலும் அரிய வீரர்களை மேனாடு உற்பத்தி செய்வது போல், ஆசியாவும் அரிய ஆத்ம ஞானிகளை உலகிற்கு அளித்து வருகிறது.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலே மேனாட்டின் செல்வாக்கானது இந்தியாவிலே நுழைக்கப்பட்ட காலத்திலே, வெற்றியுற்ற மேனாட்டார், கையில் வாளேந்தி மஹரிஷிகளின் மக்களெல்லாம் காட்டு மிராண்டிகள் என்று காட்ட வந்த காலத்திலே, கனவு காணும் ஜாதியார் என்று சொல்ல வந்த சமயத்திலே, அவர்கள் "சமயம்" கட்டுக் கதைகள் நிறைந்ததைத் தவிர வேறொன்றுமில்லை என்று உரைத்த போதிலே, அவர்களுடைய கடவுளும் ஆத்மாவும் அர்த்தமற்ற சொற்கள் என்று சொன்ன வேளையிலே, ஆயிரக்கணக்கான வருஷங்களாய்ச் செய்து வந்த போரும், ஆயிரக்கணக்கான வருஷங்களாய்ச் செய்துவந்த முடிவற்ற துறவுகளும் வீணே என்று எடுத்துக் காட்டவந்த நிலையிலே, சர்வகலா சாலைகளில் கல்வி பயலும் மாணவர்கள் மனதிலே சில நூதன பிரச்னைகள் எழுந்து வாட்டத்தொடங்கி விட்டன. இது வரையில் நடத்திய தேசிய வாழ்வெல்லாம் வீண் என்றும், மேனாட்டுப் பாங்கில் நூதனமாய் நடையுடை பாவனைகளை மாற்றிக் கொள்வது தான் நியாய மென்றும் அவர்கள் நினைக்கலானார்கள். பழைய நூல்களைக் கிழித்து, தத்துவ சாஸ்திரங்களைக் கொளுத்தி, மதப் பிரசாரகர்களை வெருட்டி, தேவாலயங்களைத் தகர்த்து நூதன வழியில் காலங்கழிக்க வேண்டுமென்றும் அவர்கள் எண்ணினார்கள். மேனாட்டு முறையில் நடத்தப்பட்ட பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் தங்கள் குழவிப் பருவத்திலிருந்து இக்கொள்கையையே குடித்து மதிமயங்கி இருந்தபடியால், இவ்வித ஐயங்கள் அவர்கள் மனதில் தோன்றியதில் ஆச்சரியம் என்னுளது!



ஆனால் குருட்டு நம்பிக்கையை விடுத்து, சத்தியத்தைத் தேடுவதற்குப் பதிலாக, 'மேனாடு என்ன கூறுகிறது' என்று தேட ஆரம்பித்து விட்டார்கள். 'புரோகிதர்கள் போக வேண்டும்; வேதங்களை நெருப்பிலிட வேண்டும்.' ஏனென்றால் மேனாடு அப்படிச் சொல்லியது. இவ்விதக் கோளாறுகளிலிருந்து ஏற்பட்ட உணர்ச்சியின் காரணமாக ஒரு பெருஞ் சீர்திருத்தம் இந்தியாவில் எழுந்தது.

நீங்கள் உண்மையான சீர்திருத்தக்காரர் ஆக விரும்பினால் மூன்று காரியங்கள் மிகவும் அவசியம். முதலாவது உணர்ச்சி: நீங்கள் உண்மையில் உங்களுடைய சகோதரர்களுக்காக உணர்கின்றீர்களா? உலகத்தில் இவ்வளவு துக்கமும், அறியாமையும், குருட்டு நம்பிக்கையும் இருக்கின்றனவென்பதற்காக நீங்கள் உண்மையில் இரங்குகின்றீர்களா? மனிதர்கள் எல்லோரும் உங்களுடைய உடன் பிறந்தார் என உன்னுகின்றீர்களா? இவ்வித எண்ணங்கள் உங்களுடைய சரீரம் முழுவதும் இயங்குகின்றதா? இவை உங்களுடைய ரத்தத்துடன் கலந்து ஓடுகிறதா? இவைகளை நினைத்தவுடன் உங்களுக்கு மயிர்க் குச்செறிகிறதா? அவை உங்களுடைய நாடி நரம்புகள் மூலம் செல்கின்றனவா? அவ்வெண்ணத்தின் பொருட்டு உங்களுக்கு அநுதாபம் இருக்கிறதா? அப்படி யிருந்தால் அது முதற்படி. அடுத்தாற்போல் அதற்கு ஏதாவது பிராயச்சித்தம் கண்டு பிடித்தோமா என்று நீங்கள் கருதவேண்டும். பழைய கொள்கைகளெல்லாம் குருட்டு நம்பிக்கைகளாகவே யிருக்கலாம் ஆனால் இக்குருட்டு நம்பிக்கைக் குவியல்களெல்லாம் பொன்னுருண்டைகள். களிம்பை வேருக்கி, அப்பொன்னை மாத்திரம் காத்து வைத்துக் கொள்ள நீங்கள் வழியைக் கண்டு பிடித்தீர்களா? நீங்கள் அதைச் செய்தால் அது இரண்டாவது படியாகும். இன்னும் ஒரு சங்கதி அவசியம். உங்களுடைய நோக்கமென்ன? பொன்னுக்கோ, பொருளுக்கோ, கீர்த்திக்கோ அன்றி அதிகாரத்துக்கோ நீங்கள் ஆசை கொள்ளவில்லை என்பதில் உங்களுக்கு நிச்சயமுண்டா? உலக முழுவதும் ஒன்று சேர்ந்து உங்களை நசுக்கிவிடப் பார்த்தாலும் உங்கள் கொள்கைக்காகவே நீங்கள் இருப்பதும், இறப்பது மென்பதில் உங்களுக்கு உண்மையில் நம்பிக்கை யுண்டா? உங்களுக்கு வேண்டுவது இன்னதென்றும், இன்ன தர்மங்களை நீங்கள் நடத்தவேண்டு மென்றும், உயிர்க்கிறுதி நேர்ந்த காலத்தும் அக்கடமைகளையே நடத்தவேண்டு மென்பதிலும் நீங்கள் நிச்சயமாயிருக்கிறீர்களா? ஜீவன் இருக்கிற வரையில் விடாமற் முயற்சிப்பதென்றும், இறுதியில் அடிக்கும் "நாடி" வரை தொண்டே செய்வதென்ற தீர்மானம் உங்களுக்குண்டா? அப்படியானால்தான் நீங்கள் உண்மையில் "சீர்திருத்தக்காரர்." நீங்கள் "குரு." நீங்கள் "நாதர்." ஆனால் மனிதன் பொறுமையற்றவன்; தீர்க்கதரிசன மற்றவன். காத்திருக்க அவனுக்குப் பொறுமை கிடையாது. பார்க்கப் பலமுங் கிடையாது. அவன் ஆள விரும்புகிறான்; அவன் பலனை அப்பொழுதே விரும்புகிறான். ஏன்? பலனை அவனே யடைய விரும்புகிறான். உண்மையில் அவனுக்கு மற்றவர்களைப் பற்றிக் கவலையில்லை. 'கடமைக்காகவே கடமை' என்பதை அவன் கேட்கவும் விரும்புவதில்லை. 'வேலை செய்வது உன் கடமையே யன்றி பலனை எதிர் பார்ப்பது உன் கடமை அல்ல' என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகிறார். பலனை ஏன் இப்படிப் பற்றிக் கொள்ளவேண்டும்? நம்முடையது கடமை. பலன்கள், அவைகளைப்பற்றி அவைகளே கவலை எடுத்துக் கொள்ளட்டும். ஆனால் மனிதனுக்குப் பொறுமை கிடையாது. எவ்விதத் திட்டத்தையும் அவன் எடுத்து மேற் போட்டுக் கொள்ளுகிறான். சீர்திருத்தக்காரர், என்று சொல்லிக் கொள்வோரிற் பலரை இந்த வர்க்கத்திற் சேர்த்து விடலாம்.

நான் சொன்னதுபோல் இந்தியாவைச் சூழ்ந்து கொண்ட உலகாயத வெள்ளம் மஹரிஷிகளுடைய உபதேசங்களை எல்லாம் அடித்துப் போய்விடும் என்ற காலத்திலே இப்பெருஞ் சீர் திருத்தம் தோன்றியது. ஆனால் அந்த ஜாதியானது இதுபோன்ற ஆயிரக்கணக்கான துன்பங்களை அடைந்திருக்கிறது. அவைகளோடு ஒப்பிடுங்கால் இது அற்பமே. துன்பத்தின் மேல் துன்பமாக பாரத வருஷத்தின் கரைகளைச் சூழ்ந்து வருத்தின. கத்திகள் மின்ன லொளியன்ன மின்னின. "அல்லாவுக்கு ஜே" என்ற சப்தமானது ஆகாயத்தைப் பிளந்தது. இந்த வெள்ளம் மறைந்தது. ஆனால் தேசிய வாழ்வில் மாறுதலுண்டாக்காமலே மறைந்தது. இந்திய ஜாதியைக் கொல்ல முடியாது. மரண மின்றி அது மிளிர்கிறது. அந்த ஜனங்கள் தங்களுடைய ஆத்ம ஞான

தை விடாத வரை அழிவின்றியே நிற்பார்கள். அவர்கள் பிச்சைக் காரர்களா யிருக்கலாம். வறுமையால் வருந்தலாம். முக்காலும் அவர்கள் அவ்விதமாகவே யிருக்கலாம். ஆனால் அவர்கள் அவர்களுடைய ஈச்வரனை விடாம லிருக்கட்டும். அவர்கள் தாங்கள் மஹரிஷிகளுடைய மக்கள் என்பதை மறக்காம லிருக்கட்டும். இங்கிலாந்திலே மத்திய காலத்திலே யிருந்த கீர்த்தி பெற்ற பெருங் கொள்ளைக் கார பிரபுவின் வம்சத்தைச் சார்ந்தவன் என்று தெருவில் திரிபவனும், மேனாட்டில் பெருமையுடன் புகல்வதுபோல், இந்தியாவில் சக்ர வர்த்தியாய் இருக்கும் ஒருவன் கூட, மரவுரி தரித்து, வனத்தில் வதிந்து, காய்கனியுண்டு, கடவுளைக்கண்டு மகிழும் பிச்சைக்கார மஹரிஷி ஒருவருடைய கால்வழியில் வந்தவன் என்று சொல்லிக் கொள்வதிலேயே பெருமையடைகிறான். அப்படிப்பட்ட கால்வழியை நாடுவதையே நாம் விரும்புகிறோம். புனிதத் தன்மையானது அவ்வழியில் பெருமைப் படுத்தப்படுகிறவரையில் இந்தியா சாகாது. 19-வது நூற்றாண்டு என்ற சஞ்சிகையிலே, கொஞ்ச காலத்துக்கு முன்னே "உண்மை மகாத்மா" என்ற தலைப்பின் கீழ் மாக்ஸ் முல்லரால் எழுதப்பட்ட ஒரு வியாசத்தை உங்களில் அநேகர் படித்திருக்கலாம்.

ராம கிருஷ்ணரின் ஜீவிய சரித்திரம் மகிழ்வைத் தரவல்லது. ஏனென்றால் எதை அவர் உலகத்துக்கு உபதேசித்தாரோ அதையே தம் வாழ்க்கையில் நடத்திக் காட்டினார். இந்தியாவினின்றும் முற்றிலும் வேறுபட்டதான மேனாட்டில் வசிக்கும் உங்களுக்கு நான் சொல்லுவது ஏதோ கட்டுக் கதையோ அன்றிக் கற்பனா சக்தியினின்றும் அரும்பியதோ என்ற ஐயம் உண்டாகலாம்.

பல்வேறு சீர் திருத்தங்கள் ஆரம்பிக்கப் பட்டும் நடத்தப் பட்டும் வந்த காலத்திலே, 1836—ம் ஆண்டு பிப்ருவரி-மீ 18-ம் தேதியிலே, வங்கநாட்டிலுள்ள ஒரு குக் கிராமத்திலே, அந்தணர் மரபைச் சேர்ந்த பெற்றோர்களுக்கு ஓர் அருங் குழந்தை பிறந்தது. தாயும் தந்தையும் மிகவும் வைதீகமானவர்கள். உண்மையான வைதீக பிராம்மணரின் வாழ்க்கை துறவற வாழ்க்கையே. அவன் செய்யக் கூடிய காரியங்கள் சிலவே. அன்றியும் அவன் எந்த லௌகிக காரியங்களிலும் தலை யிடுதல் கூடாது. அவன் எல்லோரிடத்திலிருந்தும் கொடையைப் பெறுவ தென்பதும் கூடாது. அவ்விதமான ஜீவியம் எவ்வளவு துன்பத்தைக் கொடுக்கு மென்பதை நீங்களே சிந்தியுங்கள். பிராம்மணர்களைப் பற்றியும், அவர்களுடைய தொழிலின் வெற்றியைப் பற்றியும் நீங்கள் அனேகம் தடவை கேள்விப் பட்டிருக்கிறீர்கள். ஆனால் இந்த ஆச்சரியப் படத்தக்க சிறு கூட்டம் தன்னைச் சுற்றியிருக்கும் பலரை ஆள்வதற்குக் காரணமாயுள்ள சக்தி என்னை? என்று நீங்கள் உசாவி யிருக்க மாட்டீர்கள். தேசத்திலே எல்லா வகுப்பாரையும் விட அவர்களே மிகவும் ஏழைகள். அவர்கள் சக்திக்குக் காரணம் அவர்களது துறவே. அவர்கள் செல்வத்தை ஆச்ரயிப்பதில்லை. பிரபஞ்சத்திலே குருமார்கள் பதவி வஹிக்கும் இனத்தில் இவர்களே மிகவும் ஏழையானவர்கள். ஆகையினாலேயே அவர்கள் வல்லமை யுடையவர்கள். இந்த வறுமையிலுங் கூட ஒரு அந்தணனின் மனைவி தெரு வழியே செல்லும் ஒரு ஏழைக்கு ஏதேனும் தின்பதற்கு அளிக்காம லிருக்க மாட்டாள். இந்தியாவிலே இது தான் "மாதாவின்" உயர்ந்த தர்மமாகக் (கடமையாக) கருதப்படுகிறது. ஆகையினாலேயே கடவுளுக்குச் சமமாக தாயார் இந்தியாவிலே கருதப் படுகிறாள். நமது கதாநாயகரின் தாயார் இவ் வர்க்கத்தைச் சேர்ந்தவரே.

—தொடரும்

**திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியார்.**

**எந்த சந்தர்ப்பத்தில் காங்கிரஸ், சுய மரியாதை இயக்கத்திற்கு விரோதமாகத் தோன்றுகிறதோ அந்த சந்தர்ப்பத்தில் நான் காங்கிரஸை விட்டு விலகி விடுவேன்.**

# பழமொழிகள்.

(திரு. B. S. குமாரஸ்வாமிப் பிள்ளை எழுதியது.)

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(திருவள்ளுவர்.)

1\. ஒரு பாஷையும், ஒரு சமுதாயமும் அபிவிர்த்தி யடைய வேண்டுமாயின், பிற பாஷையிலுள்ள நன்னெறிகளையும், இதர சமுதாயத்தார், இதர சமயத்தார் சிறந்ததெனக் கொண்டாடும் தூயநெறி, சன்மார்க்கம் இவைகளையும் மிகுந்த நுண்ணறிவோடு ஆராய்ச்சி செய்து, அவைகளில் உத்தமம் எனக்காணப் படும் வழக்கங்களையும் நெறிகளையும் நாம் தழுவி நிற்போமாயின் அது சாலவும் நன்று. புராதீன பாஷைகளில் நமது தாய் பாஷையாகின்ற 'தமிழ் பாஷை' மிகச் சிறப்புற்றதெனினும், தமிழகம் தூய நெறி வேந்தர், பிரபல சங்கங்கள், சங்கத் தமர்ந்த கவிஞர்கள், சாஸ்திர நிபுணர்கள், நிரம்பப்பெற்று அநேக நூறாண்டுகள் மிகுந்த செல்வத்துடனும் சிறந்த நாகரிகத்துடனும் ஒளிவீசுகின்றதாயினும், இதர பாஷைகளிலுள்ள இசைச் சொற்கள் மருவப்படாத காரணம் பற்றி நமது பாஷை நன்றாய் வளர்க்கப்படவில்லை யென்றே கூறல் வேண்டும். அக் காரணம் பற்றியே நமது தேசியக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரவர்கள் பின் வருமாறு கூறுகின்றார்கள் :—

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.

ஆனதினால் நமது பஷையே சிறந்தது. அதில் வேறு பாஷைகளில் உள்ள சொற்கள் கலத்தல் அதன் இனிமையை அகற்று மென வீண்வாதம் புரியாமல் தமிழ் பாஷையில் அகப்படாத சொற்களை இதர பாஷைகளிலிருந்து கோர்த்தும், காணப்படாத நூல்கள், தத்துவங்கள், சாஸ்திரங்கள், இவைகளை அன்னிய பாஷைகளினின்று மொழி பெயர்த்தும் சமய நெறி பற்றி ஏற்படும் கண்டனங்கள், பிடிவாதம் பொய்க் கவலை இவற்றை அறவே அகற்றியும் நமது பாஷாபிமானம் ஒன்றையே நமது இறைஞானமாய்க் கொள்வோம். அக் கருத்துப் பற்றியே, சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் கீர்த்தியும் புகழும் நிரம்பப் பெற்ற அந்தணர் கபிலர் பாடியிருக்கின்ற அகவற்பா :

"இறப்பும் ஒன்றே, பிறப்பும் ஒன்றே
வழிபடு தெய்வமும் ஒன்றே..........
..................................
சிறப்புஞ் சீலமும் அல்லது
பிறப்பு நலர் தருமோ பேதைமீரே"

கருத்தைக் கருதுவோம்.

2\. கிறிஸ்து சமயத்தில் மிகவும் கியாதி பெற்றவரான சாலோமன் என்பவர், என்றும் வெகு சிலாக்கியமான விவேகம் நிரம்பப் பெற்ற மூதறிவாளர்களில் ஒருவரெனக் கருதப்படுகின்றார். அவர் சுமார் 3000 (மூவாயிரம்) பழ மொழிகள் பகர்ந்துள்ளா ரென்றும், அவையனைத்தும் பொருளும் பயனும் நிரம்பியதெனவும் கூறப்படுகின்றது. சுருக்கமாக கூர்ம புத்தியுடன் மனதில் பதிந்து நன்னெறி போதிப்பதான வாக்கியமே, பழ மொழியின் இலக்கணமாகும். அவர்கள் கூறியுள்ள பழமொழிகள் பலதிறப் பட்டன வாயினும் (i) அறிவை வளர்த்து, இகபர இன்பங்களைப் போதிப்பிக்கின்றவைகள் (ii) அறிவீனம் பழி பாவங்களை அகற்றித் தூய நெறி தூண்டும் வசனங்கள் (iii) இயற்கை நலன் செயற்கை நலன் இவைகளை ஏகோபிப்பவைகள், இவைகளே நமது தற்போ தாராய்ச்சியைச் சேர்ந்தன. இனி, சில பழ மொழிகளை ஆராய்ச்சி செய்வோம்.

3\. அறிவைக் காண்பவனே ஆத்மாவைக் காண்பவன். பொன், வெள்ளி, இரத்தினம் இவையனைத்திலும் சிறந்தது அறிவே. மகத்துவமும் செல்வமுந் தருவது அறிவே. அறிவைப் பற்றியவன் என்றும் அழியா ஆனந்தத்தில் மூழ்குவான்.

இக் கருத்தனைத்தையும் ஒரே குறள் வாக்கியத்தில் நமது திருவள்ளுவ நாயனார் அமைத்துளதும் காண்க:

அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்.

4\. உன்னுடைய உடைமையை அயலார்க்கு என்றும் உதவுவாய். அயலார்க்கு தீங்கை உன்னவும் ஒண்ணாது. உனக்குத் தீங்கிழைத்தவர்க்கும் என்றும் நன்மையே புரிவாய்.

இதன் சார்பாக குறளிற் காண்கின்ற உள்ளறிவையும் ஆராய்ந்தறிக.

இன்னா செய்தார்க்கு மினியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

5. ஏ! சோம்பேறி ! சிற்றெறும்பைப் பார்! எறும்பின் முயற்சியினின்றும் நன்முயற்சி பயின்று கொள். எறும்புகள் வேனிற் காலத்திற்குத் தனக்கு வேண்டிய ஆகாரத்தை அறுப்புக் காலத்தே தேடிக் கொள்கின்றன. தூக்கத்தி னின்றும் எழுந்து நின் தரித்திரத்தை அகற்றுவாய்.

வள்ளுவர் மெய்க்குறளிலும் இக்கருத்துத் தோன்ற,

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்."

என்று கூறியதும் சாலச் சிறந்ததே.

6 நற்குணம் நிறைந்த ஒரு பெண்ணை யாரால், காண்பது ? ஏனெனில் அவள் ரத்தினங்கள் எல்லாவற்றிலும் விலை யுயர்ந்தவள் : அவள் இயல்பான குணங்களென்ன ? தன் புருஷன் வாழ்நாள் அனைத்தும் அவனுக்கு வாழ்க்கைத் துணைவியாயிருந்து தீமையை அகற்றி என்றும் நன்மையே புரிபவள். அவள் ஏழைகட்கு இரங்குவாள் ; இரப்போர்க்குக் கொடுப்பாள். குளிருக்குப் பயங்கொள்ளாள். அதிகாலையில் எழுந்திருப்பாள். சோம்பல் தன்னைத்தொடாது, என்றும் முயற்சியுட னிருப்பாள். அவளது மனோ தைரியமும் அடக்கமும் அவளுடைய சிறந்த அணி ஆடைகள். ஞானம் நிரம்பிய வார்த்தைகளே பேசுவாள். கருணையே அவள் நாவினியில் காண்போம். பெருமையை விரும்பாள் ; சரீர சுகத்தை விரும்பாள் ; சௌந்தரியத்தைச் சிறந்த தென்று கூறமாட்டாள்.

இவையுடன் வாழ்க்கைத் துணை நலத்தினை மிக்க சிறப்பாக கூறியிருக்கின்ற வள்ளுவர் குறளையும் இனிதா யமைக்கற்பாலது.

பெற்றாற் பெறிற் பெறுவர் பெண்டிர்
—பெருஞ் சிறப்பும்

புத்தேளிர் வாழுமுலகு.

பெண்கள், தமது மனோ ரம்மியத்தினாலும் நன் முயற்சியினாலும், பதிவிரதா நிலையினின்றும் பிறழாது தம்மை யெய்திய கணவரை வழி படுவாராயின், அம்மகளிர் வானோர்களினால் பெருஞ் சிறப்பினைப் பெறுவரென்பது கருத்து.

7. யாராவது மூடத்தனமாய் உனக்குக் கோபம் மூட்டினால் அன்றி உன் மனத்தே தீய கோபம் தானே யெழுந்தால், உடன் தானே கையைக்கொண்டு வாயை மூடிவிடு. ஏனெனில், பாலைத் திரைத்தால் வெண்ணெய் திரண்டு விடும் நாசியைத் திரைத்தால் இரத்தம் திரளும். ஆகவே கோபம் பொங்கினால் பாவமுந் திரண்டிடும்.

வெகுளாமையின்கீழ் கூறப்பட்ட குறட்பாக்கள் அனைத்தும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கன வாயினும், உதாரணமாய் ஒரு குறள் மொழியினையே கூறுவோம்.

நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்தின்
பகையு முளவோ பிற.

உலகத்தில் மக்களுக்கு வேண்டற்பாலதான முகத்தின் கண் நகைப்பும், மனதிற்குள் தாமரை பூத்ததுபோன்ற சந்தோஷமும் நாம் எதிர்பார்த்திருக்க,கோபம் இவ்விரண்டையும்தேய்த்தழிக்க வல்லதாயின், அக் கோபத்தைப் பார்க்கிலும் தீங்கைச் செய்வதான ஒரு பொருளும் உலகத்தில் காணுவதற் கியலுமோ?

8, துன்மார்க்கத்திலே பழகி வருகின்ற தனவந்தர்களைப் பார்க்கிலும் நன்மார்க்கத்தை விடாமற் காக்கின்ற ஏழையே சிறந்தவன். பிறரைத் துன்பப் படுத்தும் துன்மார்க்கம் தானே படுகுழியில் அமைந்துவிடும் ; ஆனால் நன்மார்க்கம் நாளடைவில் தலை சிறந்து விளங்கும்.

மக்களனைவரும் எக்காலத்தும் பிற வுயிர்களுக்கு இன்னாமை விளைவிக்காமல் அவருக்கினியவையே இயற்றுவித்தல் சான்றோர் கடனென வற்புறுத்துகின்ற வள்ளலார்:—

தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென் கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்

என்ற குறளில் அமைத்ததான கருத்துரையை ஆராய்ந்தறிவோம். பிறர் தன்னுயிர்க்கு இயற்றுவதான இன்னாதன அனுபவித்து அவ்வினலின் தீமையை நன் குணர்ந்தோர் தானும் வேறு நபர்களுக்கு அவ்வாறே துன்பம் விளைவித்தலின் காரணம் யாது காரணத்தாலோ அறிகிலோம். பகுத்தறிவுணர்ச்சி மானிடர் யாவர்க்கும் ஒன்றே. நாம் அடையுந் துன்பத்தையும் மகிழ்ச்சியையும் பிறரும் அவ்வாறே உணர்ந்திடுவார்கள் என்ற இயற்கை இயல்பை அறிந்திடாதவர்களும் மானிட ராவாரலோ!



9 துன்பம் யார்க் கதிகம்? விசனம் யார்க் கதிகம் ? யாருக்குத் தர்க்கங்கள் அதிகம் ? யார் மிதமின்றிப் பேசுகின்றார்கள் ? காரணமின்றிக் காரியங்கள் ஏற்படுவது யாருக்கு ? யாருக்கு நோயின்றி கண் சிவக்கின்றது ? கட்காதல் கொண்டொழுகும் கயவரிடத்தே இவை யனைத்தும் பொருந்துகின்றன. நாக சர்ப்பம்போல் தீண்டி, வீரியப் பாம்புபோல் சரீரத்தை நாளடைவில் விழுங்குகின்ற அக்கட் குடியையும் விரும்பும் பாவிகள் பிழைப்பரோ ?

மேற்கூறிய கருத்தை நமது வள்ளுவர் எவ்வாறமைத்துளார் —

துஞ்சினார் செத்தாரின் வேறல்லார் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்.

உறங்கினார் உயிரிழந்து பிணமானவருக்கு ஒப்பானவர் என உபமான மாகக் கூறுவது அறிவின்மையே. அவ்வாறே கள்ளுண்பார் நஞ்சுண்பாரின் வேறுதலுடைய ரேனும் எக்காலத்தும் அறிவின்மையால் வேறெனப்படார். ஏனெனில் நஞ்சினுங் கொடியதான கட்குடியைப் பயில் பவர் தனக்கும் தன்னைச் சார்ந்தோர்க்கும் தன் சந்ததி கட்கும் தீவினையாகின்ற தினையை விதைத்து, ஆற்றொணாத துயரத்தை முடிவில் எய்துகின்றனர். நஞ்சுண்பவன் தன்னை மட்டுமே மாய்த்துக் கொள்கின்றான். கட்குடியனோ தனக்கும் தன் பின் வாழாநின்ற தமது மக்கட்கும் கொடிய விஷத்தைப் பயிரிடுகிறான்.

10 உண்மையை உயர்ந்த விலை கொடுத்து வாங்கிக் கொள் : அவ்வாறே அறிவையும், கல்வியையும் நன் முறையையும் கற்றிடுவாய் : ஆனால் இவைகளை நீ விலைக்கு விற்காதே. உன்னுடைய ஒழுக்கத்தையும் அறிவையும் பார்த்து நின் தந்தை சந்தோஷங் கொள்வார். ஞானம் நிரம்பிய மகனைப் பெற்ற தந்தைக்கு எப்பொழுதும் சந்தோஷம் நிரம்பி யிருக்கும். முப்பால் மொழி மூழ்கி மகிழ்வார்க்கும் யாம் ஒரு உதாரணம் எடுத்துக் கூறுவது மிகையன்றே!

மகன் தந்தைக் காற்று முதவி யிவன் தந்தை
என் னோற்றான் கொல் லெனுஞ் சொல்

கல்வியுடையோனாகிய ஓர் தந்தைக்கு மகன் செய்யவேண்டும் கைம்மாறு என்னவெனின் தன்னறிவும் ஒழுக்கமுங் கண்டு மகிழ்ந்தோர், 'இப்புதல்வனைப் பெறுதற்கு இவன் தந்தை யிருந்த அரிய தவஞ்செய்திருக்க வேண்டும்' என்னுஞ் சொல்லை நிகழ்த்தவதே யாகும்.

11 இனிமையான சொற்கள் தேனைப் போல் இனிமை தருகின்றன. ஆத்மாவிற்கும் எலும்புக்கும் இனிமை யளிக்கின்றன. ஒரு வார்த்தையினால் அறிவுடையான் சீர்திருத்தம் அடைகின்றான் ; ஆனால் 100 அடி அடித்தாலும் மூடன் திருந்தமாட்டான்.

நாலடியார் துறவின்கீழ் காணப்படும் அறிவுரை காண்க:

விளக்குப்புக விருண் மாய்ந்தாங் கொருவன்
றவத்தின் முன்னில்லாதாம் பாவம்—விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு
தீர்விடத்து நிற்குமாந் தீது

* அடியிற் கூறும் குறளின் பெருமையும் உற்றுநோக்குமின்.

*நயனீன்று நன்றிபயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப் பிரியாச் சொல்"

இனி நாம் முக்கிய நோக்கத்துடன் எடுத்துக் கொண்ட சாலோமன் பழமொழிகள் சிலவற்றைக்கூறி இச்சிறு வியாசத்தை முடிப்போம்.

(i) வாயை அடக்கி வைத்திருப்பவன் தன் உயிரைக் காப்பாற்றுகின்றான். அன்றேல், நாசத்திற்கு வழி யுண்டாக்குகின்றான்.

(ii) புறங்கூறுபவன் எந்த இரகசியங்களையும் வெளியிற் கூறிவிடுவான் : ஆனால் நம்பிக்கை யுடையோன் இரகசியங்களைத் தானே மறைத்துக் கொள்வான்.

(iii) நன்னெறி யுடையோனைத் துன்பம் அணுகாது; தீநெறி யுடையோனை தீமை தொலைக்கும்.

(iv) கடவுளால் வெறுக்கப்படுகிற ஏழு பாவங்களையும் அகற்றுபவன் அறிவுடையோன். அவையாவன :—பெருமை யுடைய கண்பார்வை, பொய் பேசும் நாக்கு, கொலை புரியுங் கை,தீச்செயலை யுன்னும் இதயம், தீமை புரிவான் றொடர்ந்தேகும் கால்கள், பொய்ச் சான்று புகல்கின்ற புன்மையர், சகோதரர்களுக்குள் சண்டை மூட்டும் தீயோன்.

(v) பிறர் மனை இச்சிப்பவன் தன் ஆத்மாவைக் கெடுக்கின்றான். காயம் பெறுகின்றான். மானம் இழக்கின்றான். பழிக்குப்பழியும் தானே தொடர்ந்திடும். மான மிழந்தவன் மதியை இழந்தோன், எவ்விதக் கைம்மாறும் அவனை ஈடேற்றாது.

(vi) உன் வாயைத் திறந்தால் நியாயத்துக்கு வாதாடவேண்டும். ஏழைக்கும் இரப்பவர்க்கும் மன்றாடு.

(vii) நாளையத்தினம் பார்த்துக் கொள்வோம் என்று பெருமை பாராட்டாதே. நாளையதினத்தில் நடக்கப்போவது இன்னதென உனக்குத் தெரியாது.

# மனுஸ்மிருதி.

(ஸ்ரீ. காவ்யகண்ட கணபதி சாஸ்திரிகள் எழுதியது.)

ஒரு காலத்தில் உயர்ந்த ஸ்தானத்திலிருந்து தற்காலம் தீவிரமாக விமர்சிக்கப்படுகிற மனுஸ்மிருதியைப்பற்றி ஒரு சிறு வியாஸம் எழுத விரும்புகிறேன். இந்த ஸ்மிருதியை ஆதி முதற் கொண்டு கடைசி வரையில் சோதித்துப் பார்த்தால் இரண்டு கிரந்தங்கள் ஒன்ருய்ச் சேர்க்கப்பட்டதாக நன்கு விளங்கும்.

## நிதர்சனங்கள்.

முதல் அத்தியாயத்தில் 5—28 சுலோகங்களுள் ஒரு விதமான சிருஷ்டிக்கிரமம் சொல்லப்பட்டது. 31-50, இந்த சுலோகங்களில் வேறு விதமான சிருஷ்டிக்கிரமம் சொல்லப்பட்டது. இவ்விரண்டுக்கும் பொருத்தம் இல்லை. ஒன்றில் சிருஷ்டிக்கிறவன் ஈசுவரன். மற்றொன்றில் மனுவும், அவருடைய பிள்ளைகளும். இரண்டாவது அத்தியாயம் 238—ஆவது சுலோகத்தில் சூத்திரனிடத்திலிருந்து கூட நல்ல வித்தையைப் பிராம்மணன் கற்றுக் கொள்ளலாம்; பஞ்சமனிடத்தி லிருந்து கூட நல்ல தர்மத்தைக் கற்றுக்கொள்ளலாம்; கீழ் குலத்திலிருந்துகூட நல்லஸ்திரீயை கலியாணம் செய்து கொள்ளலாம் என்றிருக்க, இதற்கு விரோதமாக சூத்திரனுக்கு வாசிப்பே கூடாதென்றும், (வாசிப்பே இல்லாதவனிட மிருந்து நல்ல வித்தையை கிரஹிப்பதெப்படி ?) பஞ்சமனுக்கு ஒரு கருமமு மில்லையென்றும், (கர்ம ஹீனனிட மிருந்து தர்மத்தைக் கற்றுக் கொள்வதெப்படி?) கீழ் ஜாதிப்பெண்களை கலியாணம் செய்து கொண்டால் பதிதனுகப் போய் விடுவானென்றும் வேறிடங்களில் சொல்லியிருக்கின்றன. மூன்ருவது அத்தியாயத்தில் 13வது சுலோகத்தில் பிராம்மணன் சூத்திர ஸ்திரீயை கலியாணம் செய்து கொள்வது அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. 14 முதல் 19 சுலோகம் வரையில் இதே ஸ்மிருதியில் மேலே சொல்லப்பட்ட அபிப்பிராயம் தீவிரமாகக் கண்டிக்கப் படுகிறது. 23 ஆவது சுலோகத்தில் காந்தர்வம் உள்பட ஆறு வகை விவாகங்கள் பிராமணனுக்குக் கூடுமென்று சொல்லி, 24 ஆவது சுலோகத்தில் பிராமணனுக்கு விவாகங்கள் நான்கே உண்டு என மூன்

வது அத்தியாயம் 2 ஆவது சுலோகத்தில், ஸ்திரீகளுக்கு ஒரு விதமான சுதந்திரமும் புருஷன் கொடுக்கக் கூடாது என்று 'சொல்லப்பட்டிருக்கிறது. 11—ஆம் சுலோகத்தில் பணம் மொத்தம் வைத்துக் கொள்ளும் விஷயத்திலும் செலவு செய்யும் விஷயத்திலும் ஸ்திரீ (பார்யா) க்கே சுதந்திரமுண்டு எனப்பட்டது. 14—21 வரையிலும் ஸ்திரீகள் அதிகமாக தூஷிக்கப் பட்டிருக்கிருர்கள். அவர்கள் ஸகஜமாகவே துஷ்டர்கள் எனப்பட்டிருக்கிருர்கள். 22-24, இந்த மூன்று சுலோகங்களிலும் ஸ்திரீ பர்த்தாவின் குணத்தை அனுஸரிப்பாளென்றும், அதனால் அவளுடைய குணதோஷங்களுக்கு பர்த்தாவே உத்தரவாதி யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 35-வது சுலோகத்தில் பீஜமே முக்கியமென்று சொல்லப்பட்டது. 52-ல் க்ஷேத்திரமே பெரிதென்று சொல்லப்பட்டது. 11-63 வரையில் நியோகம் அங்கீகரிக்கப்பட்டது. 64 முதல் 66 வரையில் நியோகம் தீவிரமாகக் கண்டிக்கப்பட்டது. 90-ம் சுலோகத்தில் கன்னிகையின் தான காலம் ருதுவின் பின் மூன்று வருஷங்களென்றும், அதன் பின் காந்தர்வ காலமென்றும் சொல்லப்பட்டிருக்க, 94-ல் கன்னிகைக்குப் பன்னிரண்டாம் வருஷம் அல்லது எட்டாம் வருஷம் தானகாலமென சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பரஸ்பர விரோதங்களுக்குத் திருஷ்டாந்தங்கள் இந்த ஸ்மிருதியில் பலவாகக் காணப்படும். முக்கியமான இன்னொரு நிதர்சனத்தைக் காட்டி இந்த விஷயத்தை முடிப்போம். 10-ம் அத்தியாயம் 65 ஆம் சுலோகத்தில் சூத்திரன் பிராமணன் ஆவதற்கும், பிராமணன் சூத்திரன் ஆவதற்கும் ஸம்பவங்கள் இருப்பதாக அங்கீகரித்திருக்க, வேறு இடங்களில் பிறப்பு ஜாதி வாதம் திடப்படுத்தப் படுகிறது. ஒன்றுக்கொன்று விரோதமான இந்த விஷயங்களைப் பார்க்கும் போது, ஆதியில் இருந்த மனு ஸ்மிருதிக்குள், பிற்காலத்தில் ஒரு பிற்போக்கானவன் ஒரு தீர்க்கமான அனுபந்தத்தை சேர்த்திருப்பான் என்று நிச்சயமாக ஊகிக்கலாம். கீதா சப்த சதியும், மனு சப்த சதியும், துர்க்கா சப்த சதியும்



கொடுக்கிற ஒரு சுலோகம் கர்ண பரம்பரையாகச் சொல்வதுண்டு. அந்த அசல் எழுநூறுகளும் தற்காலத்தில் 2000த்துக்கு மேற்பட்ட சுலோகங்களோடு காணப்படுகிறது. அசலைக் காட்டிலும் அனுபந்தமே பெரிதாகி விட்டது

இந்த ஸ்மிருதியில் ஆதி சுவாயம்புவ மனுவினுல் சொல்லப்பட்ட தர்மங்களை அவருடைய பத்துப் பிள்ளைகளுள் ஒருவராகிய பிருகுவானவர் எழுதினதாசக் காணப்படுகிறது. 12 ஆவது அத்தியாயம் 123 ஆம் சுலோகத்தில் "அந்த மனுவே அக்னி, அவரே பிரஜாபதி, அவரே இந்திரன், அவரே மஹா பிராணன், அவரே சாசுவதப் பிரம்மம்" என்று சொல்லப்பட்டது. அதனுல் இந்த மனுவானவர் ஒரு சாரித்திரீக மனிதர் இல்லையென்றும், அவருடைய பத்துப்பிள்ளைகள்கூட சாரித்திரீக மனிதர் இல்லை என்றும் வெளிப்படையாகத் தெரிகிறது. மனச்சாக்ஷி என்று சொல்லப்படுகிற ஆத்மாவே மனு ஆவர். பத்து இந்திரியங்கள் அவருடைய பத்து பிள்ளைகள். அதில் வாக் என்னும் இந்திரியமே பிருகு ஆகுவர். மனச்சாக்ஷி சொல்கிறபடி வாக் இந்த ஸ்மிருதியை ரசித்தது என்பது தாத்பரியம். ஸ்மிருதி என்ருல் மனச்சாக்ஷி சொல்கிற அபிப்பிராயமேயாகும். இது இரண்டாவது அத்தியாயம் முதல் சுலோகத்தில் நன்ருகக் காட்டப்பட்டுள்ளது. 6 வது சுலோகத்திலுல் கூட வற்புறுத்தப்பட்டது. ஆதி மனுஸ்மிருதி கவியானவர் தன் பெயரைச் சொல்லிக் கொள்ளாமல், மனச்சாக்ஷி வாக்குகளுடைய குப்தமான பெயர்களால் ஸ்மிருதியை ரசித்தார். அவருடைய காலம் புராணங்களெல்லாம் ரசிக்கப்பட்ட குப்தர்களுடைய காலத்தைக் காட்டிலும் அதிகம் முன்னதாகவே இருக்க வேண்டும். யுகங்களைப்பற்றி புராணங்களில் பிராமணம் 43 லக்ஷத்து சொச்சம் வருஷங்களென்று சொல்லியிருக்க, மனுஸ்மிருதியில் 12000 தான் சொல்லப்படுகிறது. வராக மிஹிரனுக்கு முன்னுக இருந்த மயன் என்கிற சூரிய சித்தாந்த ஆசிரியருக்குக் கூட மனுஸ்மிருதி முற்பட்டதே. முன் சொல்லப்பட்டதே காரணமாம். சந்திர குப்த சக்ரவர்த்தியின் குருவாகிய சாணக்யனுக்குப் பிறகே இந்த கிரந்தம் தோன்றிற்றென்று சொல்லலாம். அவர் தன் அர்த்த சாஸ்திரத்தில் சொன்ன சில விஷயங்களை மனுஸ்மிருதி எடுத்துக் கொண்டதாக சரித்திரக்காரர்கள் அபிப்பிராயப் படுகிருர்கள். அனுபந்தம் சேர்க்கப்பட்ட காலம் குப்தர்களுடைய காலம் என்று சொல்லலாம்.

இக்ஷ்வாகு வம்சம் என்று சொல்லப் படுகிற க்ஷத்திரிய வம்சத்துக்கு மூல புருஷராகிய வைவஸ்வத மனுவுக்கும் இந்த ஸ்மிருதிக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. அந்த வைவஸ்வத மனுவானவர் ருக்வேத காலத்தவர். ருக்வேதம் எட்டாம் மண்டலத்தில், அவர் ரசித்த சில சூக்தங்கள் காணப்படுகின்றன. அதில் ஒரு ஸூக்தத்தில் சில தர்மங்கள் சொல்லப்பட்டன தம்பதிகள் அன்னியோன்ய மாகப் பிரேமையுடன் இருந்து கடவுளை ஆராதிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிருர்.

ஹம்ஸம், நீரும் பாலும் சேர்ந்ததி லிருந்து பாலை கிரஹித்து நீரை நீக்குவதுபோல் தற்கால மனுஸ்மிருதியி லிருந்து ஆதி மனுஸ்மிருதி சுலோகங்களைப் பிரித்தெடுத்து, அனுபந்தத்தை புத்திசாலிகள் நீக்குவார்களாக. சத்துருவினுல் பிடித்துக் கொள்ளப்பட்ட தனி மனிதனை விடுதலை செய்வதற்காக இருவரையும் சேர்த்துக் கொல்வது உபாயமாகாது. ஆதி மனுஸ்மிருதி ஒரு பிரசஸ்தமான ஹிந்து தர்ம சாஸ்திரமென்று சொல்ல எனக்கு ஐயமில்லை. அது தமிழ் நாட்டு அரசர்களால் கூட ஆதரிக்கப்பட்டதற்கு மனு முறை கண்ட சோழனே நிதர்சனம்.

வியாபாரிக் கழகு - - - - - - - - - - - - - விளம்பரம் செய்தல்.

# ஓர் ஜாதகக் கதை.

ஸ்ரீமதி. ஸரஸ்வதி அம்மாள் எழுதியது.

முன்னொரு காலத்தில் போதிசத்துவர் ஒரு மருத மரத்தின் ஜன்மமெடுத்து ஓர் தாமரைக் குளத்தினருகே நிற்கலாயினர்.

அந்தக் குளத்தில் மீன்கள் ஏராளமாயிருந்தன. வேனிற்காலம் முதிர்ந்து வெப்பம் மிகுதியாயதினால் அக் குளத்தில் நீர் வற்றத் தொடங்கிற்று. சிறிதுநாளில் நீர் மிகக் குறையவும் அக் குளத்தில் வசித்த மீன்களைக் கண்ணுற்று ஒரு நாரை "இந்தக் குளத்திலிருக்கும் மீன்களை நான் எப்படியாவது ஏமாற்றிப் புசித்துவிடவேண்டும்" என்றெண்ணி குளத்தினருகே சென்றுட்கார்ந்து தன்னெண்ணத்தை எவ்விதம் நிறைவேற்றலாமென்று பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்தது.

இப்படி நாரை விசாரத்திலாழ்ந்திருப்பதை மீன்கள் நோக்கி,

"ஏன் ஐயா! நீர் இங்கு தங்கி விசாரப்பட்டுக்கொண்டிருக்கின்றீர்" என்று கேட்டன.

"நான் உங்களைப்பற்றியே 'விசாரப்பட்டுக்கொண்டிருக்கின்றேன்" என்று மறுமொழி கூறிற்று நாரை.

"எங்களைப்பற்றி நீர் என்ன விசாரித்துக்கொண்டிருக்கின்றீர்" என்று மீன்கள் மறுபடியும் கேட்டன.

உடனே நாரை, மீன்களைப் பரிவுடன் நோக்கி, "நண்பர்களே! இந்தக் குளத்தில் நீர் வறண்டுவிட்டது. உங்களுக்குப் போதிய உணவு கிடைப்பதும் அரிதாய்விட்டது. வேனிற்காலக் கொடுமையோ இவ் வருடத்தில் சகிக்கமுடியாமலிருக்கின்றது. ஐயோ! பாவம்! இத் தருணம் நீங்கள் என்னசெய்யப் போகிறீர்களென்ற அநுதாபமே என் உள்ளத்தை வருத்துகின்றது" என்றது.

"ஆம், ஆம், நீர் சொல்வது முற்று முண்மையே. நாங்கள் என் செய்யவிருக்கிறது" என்று மீன்கள் தம் மனவாட்டத்தைக் கூற,

நாரை ஆத்திரத்தோடு அவற்றை நோக்கி, உங்களுக்குச் சம்மதமானால் உங்களில் ஒவ்வொருவனையும் என் வாயால்கௌவி எடுத்துக்கொண்டு பறந்து இதோ சிறிது தூரத்திலிருக்கும நீர் நிறைந்த ஓர் அழகிய தாமரைத் தடாகத்திற் கொண்டு விட்டுவிடுகிறேன்" என்று கூறிற்று.

"இந்த உலகம் தொடங்கிய காலமுதல் மீன்களைக் காப்பாற்றிய நாரை ஒன்றுண்டென நாங்கள் அறிந்ததுமில்லை, கேட்டதுமில்லை. எங்களை ஒவ்வொருவனாக உண்டுவிட நீர் கருதிய சூட்சியே இது" என்றுரைத்தன மீன்கள்.

"நான் அப்படிச் செய்கிறவனல்ல. என்னை நீர் நம்பினால் உங்களை நான் புசிக்கவே மாட்டேன். நான் சொல்லுகிறபடி குளமொன்றிருப்பதாக நீர் நம்பவில்லையானால் உங்களிலொருவனை என்னுடன் அனுப்பித் தெரிந்துகொள்ளுங்கள்" என்று நாரை பரிவுடன் கூற,

அதனை நம்பி மீன்களெல்லாம்கூடி யாலோசித்து, தம் கூட்டத்திலுள்ள கிழ மீனொன்றை நாரையோடுசென்று பார்த்துவர அனுப்பின. அக் கிழ மீனோ குருடாயிருந்தபோதிலும் நீரிலும் நிலத்திலும் ஏற்படும் எவ்வித அபாயத்திற்கும் ஏற்ற சூட்சி செய்யத்தக்கதாகவுமிருந்தது.

அம் மீனை நாரை எடுத்துக்கொண்டு போய் தாமரைக் குளத்தில் விட்டு, அதன் அழகனைத்தையும் கண்ணுறச் செய்து திரும்பவும் கொண்டுவந்து பழைய குளத்து மீன்களினிடையே விட்டது. விட்டதும் புதுக் குளத்தின் பெருமைகளை எல்லாம் கிழமீன் தன் தோழருக்கு விரிவாயெடுத்துப் புகழ்ந்து கூறிற்று.

இதனைக் கேட்டதும் மீன்களெல்லாம் குதூகலித்து "நன்று, நன்று நாரையாரே! நீர் சொன்னபடியே எங்களை அக் குளத்திற் கொண்டு சேர்ப்பீராக" என்று ஒன்று சேர்ந்தொலித்தன.

உடனே நாரை அந்தக் குருட்டுக் கிழமீனை தூக்கிக்கொண்டு போய் அப் புதுக் குளத்தினருகே நிற்கும் மருதமரத்தின் கிளையொன்றில் உட்கார்ந்தது. உட்கார்ந்ததும் அம் மீனை மரக்கவடொன்றினுள்ளே செறித்துக் கொன்று



உயிர்போக்கி அதன் தசைப்பற்றையெல்லாம் உண்டபின் முட்கூட்டை மரத்தடியில் எறிந்துவிட்டது.

உடன் அங்கிருந்து புறப்பட்டு பழைய குளத்திற்கு வந்து,

"உங்கள் தோழனை அக் குளத்திற்கொண்டு விட்டுவிட்டேன். உங்களில் யாராவது ஒருவன் இப்பொழுது என்னுடன் வரலாமென்று கூவிற்று.

இவ்விதமாக அக் குளத்திலுள்ள மீன்களெல்லாவற்றையும் ஒன்றொன்றாகக் கொண்டு சென்று கொன்று தின்றுவிட்டது. பழைய குளத்தில் தான் விழுங்கத்தக்க மீன் ஒன்றுமில்லாதாயிற்று.

ஆனால் ஒரு நண்டு மாத்திரம் மீந்திருந்தது; அதனையும் எடுத்துக்கொண்டுபோய் விழுங்கக் கருதி நாரை அதனை நோக்கி,

ஓ! எனது நண்பனாகிய நண்டே! இங்கிருந்த மீன்களை எல்லாம் ஓர் அழகிய தடாகத்திடைக் கொண்டுபோய் விடுத்தேன். நீயும் வருவாயானால் உன்னையும் அங்கெடுத்துக் கொண்டுபோய்விட்டுவிடுவேனென்று கூறிற்று.

"என்னை எங்ஙனம் எடுத்துக்கொண்டு போவாய்" என்று நண்டு கேட்டது.

"என் நீண்ட வாய்க் கொடுக்கியில் உன்னைக் கௌவி எடுத்துக்கொண்டு செல்லுவேனென்றது நாரை.

"அப்படி நீ என்னையெடுத்துச் சென்றால் நான் கீழே வீழ்ந்துபோவேன்; ஆகையால் உன் கூட வர எனக் கிஷ்டமில்லை" யென்றது நண்டு.

"நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம்; நான் உன்னைக் கெட்டியாய்ப் பிடித்துக் கீழே விழாதபடி கொண்டு செல்லுவேனென்று நாரை ஆறுதல் விளம்பிற்று. உடனே நண்டு தனக்குள்ளே ஆலோசித்ததாவது: "இந்தத் திருடன் மீன்களைக் குளத்தில் விட்டிருக்கவே மாட்டான்; தின்றேயிருப்பன். என்னைக் குளத்தில் விடுவானேயானால் மிகவும் நலந்தான். அவன் அங்ஙனம் செய்யாமல் என்னைத் தின்னக் கருதினால் அவன் கழுத்தை என் இடுக்கியால் அறுத்து அவனைக் கொன்று விடுவேன்". இவ்விதம் ஆலோசனை செய்துகொண்டு நாரையை நோக்கி,

"நண்பனே! இதனை நன்கு கவனிப்பாயாக. நீ என்னைக் கீழ் விழாவண்ணம் இறுகப் பிடித்துச் செல்வது முடியாத காரியம். எங்களுக்கோர் இடுக்கியுண்டென் றறிவாயல்லவா? அவ் விடுக்கியைக் கொண்டு உன் கழுத்தை நான் பிடித்துக் கொள்ளும்படி நீ சம்மதிப்பாயானால் நான் உன் கூட வர தயாராயிருக்கிறேன்" என்றுரைத்தது நண்டு.

நண்டின் சூழ்ச்சியை அறியாத அந்த நாரை உடன் அதற்கு சம்மதித்தது; சம்மதித்ததும் நாரையின் கழுத்தை ஒரு கொல்லன் இடுக்கி கொண்டு பிடித்தமாதிரி தன்னிடுக்கியால் கெட்டியாய் அழுத்திப் பிடித்துக்கொண்டு, "புறப்படத் தயாராய்விட்டேன்; என்னை எடுத்துச் செல் லென்றது நண்டு.

நாரை உடனே நண்டை எடுத்துக்கொண்டு பறந்துபோய் புதுக் குளத்தைக் காட்டிவிட்டு தன்னிருப்பிடமாகிய மருதமரத்திற் சென்றுகுந்திற்று.

"அண்ணா! அதோ குளமிருக்க, என்னை ஏன் இந்த மரத்திற்கு எடுத்துக்கொண்டு வந்தீர்" என்று நண்டு ஆவலோடு கேட்டது.

"ஆம், ஆம், அதுதான்" என்றது நாரை. 'பிரியமுள்ள அண்ணா' வென்று என்னை இப்பொழுது அழைக்கின்றாயல்லவா? நான் உன்னை வீணாக இவ்வளவு தூரம் சுமந்தெடுத்துச் செல்கின்ற ஓர் அடிமைப் பயலா? அதோ இந்த மரத்தடியில் குவிந்து கிடக்கும் மீன்முள் திரளைப்பார். அம் மீன்கள் எல்லாவற்றையும் நானே தின்றுவிட்டேன். அதுபோலவே உன்னையும் தின்றுவிட எண்ணியிருக்கிறேன்" என்று நாரை முழங்கியுரைத்தது.

அதற்கு நண்டு "ஆ! ஆ! அந்த மீன்களெல்லாம் தம் மடமையால் மாண்டுபோயின. அதுபோல் என்னையும் நீ விழுங்க நான் சம்மதிப்பேனோ பேதாய்! மாறாக உன்னையே நான் கொன்று வீழ்த்தி விடுவேன். உன்னுடைய அறியாமையினால் எனது சூழ்ச்சியின் போக்கை நீ கண்டுகொள்ளவில்லை. இறக்க வேண்டுமேல் நாமிருவரும் இறந்துபோக வேண்டுமே தவிர நீ மட்டிலும் பிழைத்துக்கொள்ள வழியொன்றுமில்லை. இதோ! உன் கழுத்தைக் கொய்து விடுகிறேனென்று கூறி தன்னிடுக்கியால் நாரையின் கழுத்தைச் செவ்வனே பிடித்துப் பலமாய் ஒரு நெருக்கு நெருக்கிற்று.

இந்தக் கண்டப் பிடியால் நாரைக்கு மூச்சு முட்டவும் "ஐயோ! என துயிர்போலும் நண்பனே! உன்னைக் கொல்லுவதாக நான் எண்ணவே இல்லை. நான் வேடிக்கையாக வல்லவோ பேசினேன்? என் கழுத்தின் பிடியைவிட்டு என்னுயிரைக் காப்பாற்று" என்று கண்ணீர் வடித் திரந்தது.

"அங்ஙனமாயின் இந்த மாத்தில் நின்றும் என்னை எடுத்துக் குளத்திற்கொண்டு விட்டு விடு என்று நண்டு மறுமொழி யுரைக்க,

உடனே நாரை பறந்துசென்று குளத்தினருகேயுள்ள சேற்றில் நண்டை வைக்கத் தொடங்கிற்று. குளத்தினுள்ளே பாய்வதற்கு முன் ருனே நாரையின் கழுத்தை கத்திகொண்டு அரிந்தவண்ணம் இரு துண்டமாக அரிந்து வீழ்த்திவிட்டு நண்டு நீருட் சாடிற்று.

மருதமரத்திற் குடிகொண்டிருந்த தெய்வம் இவ் விசேடத்தைக் கண்ணுற்று ஆனந்தம் பொங்கி,

"கண்டகர் சிறுகாலை தழைக்கினும்
அண்டுவார் தமக்காய முடிவென
நண்டிடுக்கியில் நாரையர் பட்டதே
எண்டிசைக்கு மிசைக்கு மினிதரோ"

என்று பாடி ஆரவாரித்தது.

———

# நட்டாஜி

அல்லது

## சிவாஜியின் சேனைத் தலைவன்.

(மயிலை. சீனி. வேங்கடசாமி யவர்கள் எழுதியது)

215-ம் பக்கத் தொடர்ச்சி.

### 18-ம் அத்தியாயம்

### தேசீயச் சேனை.

அடுத்த நாள் விடியற்காலை சிவாஜி, நட்டாஜியுடன் தாணு நகரத்துக்குப் போகப் புறப்பட்டார். இவர்களோடு போர்ச்சுகேசிய வர்த்தகனும் சென்றான். தாணு நகரம், அக்காலத்தில் மேற்குக்கடற்கரையிலிருந்த ஒரு போர்ச்சுகேசிய வர்த்தகஸ்தலம். இவ்விடத்திலுள்ள போர்ச்சுகேசிய வர்த்தகனுடைய பண்டகசாலையில்தான் பீரங்கிகள், துப்பாக்கிகள், பட்டாக்கத்திகள், கேடயங்கள் வெடிமருந்துகள் முதலிய போர்க்களச் சாமான்கள் விற்பனைக்காகக்கொண்டு வரப்பட்டுள்ளன. இவ்வாயுதங்களைப் பார்வை யிடுவதற்காகவே இப்போது சிவாஜியும் நட்டாஜியும் வர்த்தகனுடன் அங்கு போகிறார்கள். தோர்ணு கோட்டையிலிருந்து தாணு நகரத்துக்குச் செல்லும் இவர்கள், முல்ஷி கிராமத்தின் வழியாகக் கோரிகாட் கோட்டைக்குப் போய் அங்கிருந்து பெர்சிக் கோட்டைக்குச் செல்லும் ராஜபாதை வழியாகப்போக வேண்டும். ஆனால் தோர்ணு கோட்டை யிலிருந்து கோரிகாட் கோட்டைக்குப்போகும் இவர்கள் வசதியற்ற காடு முரடான பாதை வழியாக இப்போது சவாரி செய்கிறார்கள். வெகு நேரம் சிரமத்தோடு சவாரி செய்து கடைசியாக கோரிகாட் கோட்டை போய்ச் சேர்ந்தார்கள். இக் கோட்டையில் சற்று நேரம் இளைப்பாறிய பிறகு, மறுபடியும் பிரயாணப்பட்டு அம்பாவணி கணவாயில் புகுந்து, மிகவும் காடுமுரடான அந்த பாகத்தைக் கஷ்டத்துடன் சவாரி செய்து கடந்து சென்று, கடைசியாய், பம்பாயிலிருந்து பூனுவுக்குச் செல்லும் இராஜபாதையில் உள்ள சௌக்கிராமத்தை யடைந்தார்கள். இச்சௌக்கிராமம் நட்டாஜியின் பிறப்பிடம் என்பதை நமது வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். இக்கிராமத்தை யடைந்ததும் இராத்திரி வேளையாய்விட்டது. ஆகவே, நமது கதாநாயகர்களாகிய தேசீயத் தலைவர் இருவரும் ஐரோப்பிய வர்த்தகனுடன் இவ்விடத்தில் தங்கினார்கள். நட்டாஜி, தன் பெற்றோர்களைக்கண்டு பணிந்து, தான் ஊரை விட்டுச்சென்றது முதல் இதுவரையில் நடந்த விஷயங்களை யெல்லாம் அவர்களுக்குச் சொன்னான். இவைகளை யெல்லாம் கேட்ட பெற்றோர், தங்கள் மகன் சுயராஜ்யத்திற்காகவும் சுய மரியாதைக்காகவும் வீரப்போர் செய்வதற்காக மகிழ்ந்து, அவனை வாழ்த்தி ஆசி கூறினார்கள். அன்று மத்தியானம் கோரிகாட் கோட்டையில் சிவாஜி தங்கியிருந்தபோது, சில தூதர்களை அழைத்து, தேசீயச் சேனையில் சேர்ந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் அடுத்த நாள் காலையில் பெர்சிக் கோட்டையண்டை வந்து சிவாஜியைச் சந்திக்க வேண்டும் என்று நாடெங்கும் விளம்பரம் செய்யும்படி அனுப்பியிருந்தார். இச் செய்தி காட்டுத்தீ போல நாடெங்கும் பரவி விட்டது. இச்செய்தியைக் கேட்ட வுடனே, ஏற்கனவே சுயராஜ்ய உணர்ச்சி ஏற்பட்டுள்ள மாராட்டியர்களுக்கு அடங்கா மகிழ்ச்சி உண்டாய் விட்டது. இவ்வித சந்தர்ப்பத்தை யவர்கள் நெடுநாள் எதிர்பார்த்திருந்தார்கள் ஆகவே, இச் செய்தி விளம்பரப் படுத்தப்பட்ட வுடனே, ஏராளமான மனிதர்கள் அப்பொழுதே புறப்பட்டுக் கூட்டங்கூட்டமாகக் குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லத் தொடங்கினார்கள். மற்றும் சில ஜனங்கள், சிவாஜி, சௌக்கிராமத்தின் பக்கமாய்ச் சென்றதைக் கேள்விப்பட்டு அவரைக்காணும் ஆவலுடன் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். ஆ! இவர்களின் தேசாபிமானம் என்னே? தங்கள் இரத்தத்தைச் சிந்தி, வேண்டுமானால் தங்கள் உயிரையும் தத்தஞ்செய்து தங்கள் சுயமரியாதையையும் சுய ஆட்சியையும் நிலை நிறுத்தி, தங்கள் பிற்காலச் சந்ததியாரின் நன்மைக்காகப் போராட முன் வந்துள்ள இவ்வீரர்களை எவ்வாறு புகழ்வது? ஆ! கடவுளே! பிறந்தால் இத்தகைய தேசாபிமானிகளாய்ப் பிறக்கவேண்டும்! அழுக்கு மூட்டைகளைக் கழுதைகள் சுமந்து கொண்டிருப்பதுபோல, சுதந்தரத்தையும் சுயமரியாதையையும் இழந்து நடைப்பிணம் போல், உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதை விட சுதந்திரத்திற்காகவும் சுய மரியாதைக் காகவும் போர் செய்து உயிர் விடுவது எவ்வளவு மேன்மையா யிருக்கிறது!

அடுத்த நாள் காலையில் சிவாஜியும் நட்டாஜியும் வர்த்தகனுடன் பிரயாணம் தொடங்கினார்கள். சௌக்கிராமத்திலிருந்து இராஜபாதை வழியே சென்று பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ள பான்வல் என்னும் இடத்தை யடைந்தார்கள். இவ்விடத்தை யடைந்ததும், தம்மைப் பின் தொடர்ந்து வந்த தேசீய வீரர்களைப் பெர்சிக் கோட்டைக்குப் போகும்படி அனுப்பிவிட்டு, நமது தேசீயத் தலைவர்கள் மரக்கலமேறி தாணு நகரத்திற்குச் சென்றார்கள். அந்நகரம் சென்றதும் போர்ச்சுகேசிய வர்த்தகன் அவர்களைத் தன்னுடைய வர்த்தகஸ்தலத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் ஆயுதங்களைக் காட்டினான். சிவாஜி, துப்பாக்கி பீரங்கி பட்டாகத்தி, கேடயம் முதலிய எல்லா ஆயுதங்களையும் சாவதானமாய்ப் பார்வையிட்டார். வர்த்தகன் சொல்லியது போலவே அவை யாவும் நல்ல சாமான்களாகவே இருப்பதைக் கண்டு திருப்தி யடைந்தார். ஆனால், சிவாஜி, திருப்தி யடைந்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை. ஏனென்றால், ஆயுதங்களை வாங்க ஆவலுள்ளவராகக் காட்டிக் கொண்டால், தந்திரசாலியான வர்த்தகன் விலையை இன்னும் அதிகப்படுத்தி விடுவான் என்று அவருக்குத் தெரியும். ஆகவே, அவர் ஆயுதங்களைப் பற்றிச் சில குற்றங்குறைகளைச் சொல்லி வாங்குவதற்கு அரை மனதுள்ளவர் போல் பேசி விலையைக் குறைக்கும்படிச் சொன்னார். ஆனால், வியாபார தோரணையில் கை தேர்ந்த வர்த்தகன், தன் ஆயுதங்களைப் புகழ்ந்து உயர்வாகப் பேசி வேறு எந்தக் கம்பெனியிலும் இவ்வளவு உயர்ந்த பொருள் கிடைக்காதென்றும் இவை யாவும் கைதேர்ந்த தொழிலாளிகளால் அனுபவ சாலிகளின் மேற்பார்வையில் செய்யப்பட்டன வென்றும் சொல்லி விலையைக் குறைக்க முடியாதென்று வாதித்தான். கடைசியாக வர்த்தகன் சொன்ன விலையாகிய ஒன்றரை லக்ஷ ரூபாய்க்கே ஆயுதங்களின் விலை முடிவு செய்யப்பட்டது. வர்த்தகன் விரும்பியபடியே, இவ்விலைக்கு ஈடாக, கல்லிழைத்த பதக்கத்தையும் விலையுயர்ந்த இருபது வைரக்கற்களையும் சிவாஜி கொடுத்தார். அடுத்த மாதத்தில் இன்னும் ஒரு கப்பல், ஆயுதங்களைக் கொண்டு வருமென்றும், வந்த வுடன் அவருக்குச் செய்தி சொல்லி யனுப்புவதாகவும் வர்த்

தகன் சிவாஜிக்குச் சொன்னான். இவ் வியாபார விஷயம் முடிந்தவுடன், வர்த்தகனும் அந்நகரத் தலைவனும் சிவாஜி நட்டாஜி இருவரையும் அழைத்துக் கொண்டு அந்நகரத்தைச் சுற்றிக் காட்டினார்கள். வர்த்தகச் சாலைகளையும், சில தொழிற் சாலைகளையும், இன்னும் முக்கியமான சில இடங்களையும் பார்த்த பிறகு, இவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கட்டிடத்தில் வந்து தங்கி அன்றிரவைக் கழித்தார்கள்.

அடுத்த நாள் விடியற்காலையில் இருவரும் எழுந்து, ஆயுதங்களைப் பெர்லிக் கோட்டைக் கருகிலுள்ள கால்வா என்னுமிடத்தில் படகுகளில் ஏற்றி அனுப்பும்படி ஏற்பாடு செய்துவிட்டு, தங்கள் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் தேசியச் சேனாவீரர்கள் தங்கியிருக்கும் பெர்லிகோட்டைக்கு மரக்கலமேறி சென்றார்கள். அவ்விடத்தில் சென்றதும், சுமார் பதினாயிரம் பேர் அடங்கிய அவ்வீரர்கள் "ஜே" முழக்கம் செய்து குதாகலத்துடன் இவர்களை வரவேற்கிறார்கள்: இப்புதிய தேசிய வீரர்களைத்தவிர, வேறு 500 குதிரை வீரர்களும் சிவாஜியின் கட்டளைப்படி அவ்விடம் வந்திருந்தார்கள்.

இப்புதிய தேசியச் சேனையைச் சேர்ந்த காலாட்படை வீரர்களுக்குச் சிவாஜி கேடயமும் வாளும் கொடுத்தார். இவ் வாயுதங்களைப் பெற்றுக்கொண்ட இவர்கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. எல்லோரும் தங்கள் தங்கள் கத்திகளைக் கேடயத்தில் தட்டி செய்த "ஆர்ப்பாட்டத்தையும் அமக்களத்தையும" சொல்லி முடியாது. இவ்விதம் இவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டத்திலிருந்து, தங்கள் தாய் நாட்டிற்காக தங்கள் இரத்தத்தைச் சிந்த இவர்கள் எவ்வளவு ஆவலாயிருக்கிறார்கள் என்பது நன்கு விளங்கிற்று.

துப்பாக்கிப்படையைச் சேர்ந்த வீரர்களுக்குத் துப்பாக்கிகளைக் கொடுத்தபோது, அவர்கள் செய்த ஆர்ப்பாட்டம் இன்னும் அதிகமாயிருந்தது. இப்படை வீரர்கள் எல்லோரும், எதிரிகளோடு சண்டை செய்ய எப்போது சமயம் வாய்க்கப்போகிறதோ என்று ஆவலோடு எதிர் பார்த்திருக்கிறார்கள். பிறகு, சிவாஜி, சில வீரர்களிடம் பீரங்கிகளை ஒப்புவித்து, அவைகளைப் படகுகளில் ஏற்றிக் கலியாணி ஆற்றின் வழியே, பீஜப்பூர் அரசாங்கத்தின் முக்கிய பட்டினங்களில் ஒன்றாகிய கல்யாணி நகரத்தின் பக்கமாகக் கொண்டு போகும்படி கட்டளையிட்டார். (தொடரும்.)

---

# மது விலக்கு

## பல நாடுகளில் தோல்வி.

1914-ம் வருஷத்திலிருந்து குடியை பகிஷ்கரித்து ஒழித்துவிடவேண்டுமென்று சுமார் 13 நாடுகளும், மாகாணங்களும் முயற்சித்து வந்தன. ஆனால் அவற்றின் முயற்சி யாவும் பயனில்லாது ஒழிந்தனவென்பதைக் கீழ்க் காணும் புள்ளி விவரங்களால் தெரிந்து கொள்ளலாம்.

மதுவிலக்கில் ருஷிய தேசம் 1914-ம் வருஷத்தில் ஈடுபட்டது. ஆனால் தங்கள் முயற்சி வீணானதைக் கண்டு 1922-ம் வருஷத்தில் கைவிட்டது. சென்ற மகா யுத்தத்துக்கு முன் அங்கு குடி எவ்வளவி லிருந்ததோ அவ்வளவிலேயே தற்போது மிருந்து வருகிறது.

1914-ம் ஆண்டில் எஸ்தோனியா நாடு மது விலக்கு இயக்கத்தைக் கைக்கொண்டு 1920-ம் வருஷத்தில் கை விட்டது.

1915-ம் வருஷத்தில் ஐஸ்லண்டு குடியை பகிஷ்கரிக்க சட்டஞ்செய்து, 1922-ம் வருஷத்தில் அச்சட்டங்களையே ரத்துசெய்தன.

கானடா தேசத்தின் ஆல்பர்ட்டா மாகாணம் 1915-ம் வருஷத்தில் மதுவிலக்குச் சட்டமுண்டு பண்ணியது. 58,000 ஓட்டுகள் சாதகமாகவும், 37,000 ஓட்டுகள் பாதகமாகவும் கிடைத்தது. சட்டமும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. 1923-ம் வருஷத்தில் 96,000—64,000 ஓட்டுகளால் சட்டம் நிராகரிக்கப்பட்டு குடிப் பகிஷ்காரமும் ஒழிந்தது.



கானடா பிரதேசத்தின் மற்றொரு மாகாணமாகிய ஒண்டாரியோவிலும் குடியைப் பகிஷ்கரிக்க 1916-ம் வருஷத்தில், முன் வந்தார்கள். இது ஒழிந்தபாடில்லை. ஆகவே, குடி ஸ்தாபனங்களை அரசாங்கத்தார் கைப்பற்றி நடத்தி வருகிறார்கள்.

1916-ம் வருஷத்தில் கானடா நாட்டின் பிறிதொரு மாகாணமாகிய மனிடோபோ, குடியை ஒழிக்கச் சட்ட மியற்றியது. 24000 அதிகப்படி ஓட்டுகளால் சட்டம் நிறைவேறியது. ஆனால் 1923-ம் வருஷத்தில் 40,000த் திற்கு மேலதிகமான ஓட்டுகளால் அச் சட்டங்கள் எடுபட்டன. குடி முன்போலவே இருந்து வருகிறது.

நார்வே தேசத்திலும் 1916-ம் வருஷம் மதுவிலக்குச்சாதகமாக சட்டங்கள் வந்தன. 1926ம் வருஷத்திலிருந்து ஸ்தாபனங்கள், அந் நாட்டு அரசாங்கத்தாரின் மேல்பார்வையிலிருந்து வருகிறது. குடி முன்பு இருந்ததை விட குறைந்திருப்பதாகத் தெரியவில்லை.

நியூபவுண்டுலாந்தும் நார்வே தேசத்தைப் போலவே மதுவை விலக்கச் சட்டங்கள் இயற்றின. தங்கள் முயற்சி வீணானதைக் கண்ட அரசாங்கத்தாரே 1821-ல் மது உற்பத்தி செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்.

கானடாதேசத்தைச் சார்ந்த சால்காச்சுவான் பிரதேசத்தில் 1917-ம் வருஷத்தில் குடியை பகிஷ்கரிக்க ஓட்டு எடுக்கப்பட்டது. சாதகமாக 95,000 ஓட்டுகளும் பாதகமாக 23,000 ஓட்டுகளும் கிடைத்தன. ஆனால் 1921-ல் குடி பழைய நிலைமையிலேயே இருக்கக் கண்டு, அரசாங்கத்தார் சொந்தமாகவே ஒரு மதுக்கடை திறந்து மது விற்பனைசெய்து வருகிறார்கள்.

பிரிட்டிஷ் கொலம்பியா, 1917-ல் மதுவை பகிஷ்கரித்தது. பொது ஜனங்கள் அரசாங்கத்திற்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்தனர். 1921-ல் பொதுஓட்டு எடுத்தகாலத்தில் 75,000—29,225 ஓட்டுகளால் குடி பகிஷ்காரத்தை நிறுத்தினர்.

கானடாவிலுள்ள கியூபெக் தேசத்திலும் இப் பகிஷ்கார இயக்கம் 1919-ம் வருஷத்தில் ஆரம்பித்தார்கள். 1921-லிருந்து குடி வியாபாரத்தில் அரசாங்கத்தாரே தலையிட்டு வேலை செய்து வருகிறார்கள்.

1920-ல் துருக்கி தேசம் மது விலக்கைக் கைக்கொண்டது 1921-ல் அவ் வியக்கத்தை அடியோடு கைவிட்டது.

கானடாவிலுள்ள புரன்ஸ்விக்கில் 1920-ம் வருஷத்தில் 20,000 பெரும் பான்மையான ஓட்டுகளால் மதுக்கடைகள் மூடப்பட்டன. ஆனால் 1927-ல் அக் கடைகள் யாவும் மீண்டும் திறக்கப்பட்டு, முன்போலவே மது விற்பனை செய்து வருகிறார்கள்.

1927-ம் வருஷத்தில் டென்மார்க்கில் குடிப் பகிஷ்காரக் கிளர்ச்சி ஏற்பட்டது. அதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஒரு ராயல் கமிஷன் நியமித்தார்கள். கமிஷன் குடிப் பகிஷ்காரத்துக்கு பாதகமாக சிபார்சு செய்ததால் மதுக் கடைகளுக்கு, முன்போலவே லைசென்ஸ் கொடுத்து வருகிறார்கள்.

ஆஸ்திரேலியாவைச் சார்ந்த சவுத்வேல்ஸில் 1918-ம் வருஷத்தில் குடி நிறுத்தப்பட்டது. ஆனால், 492, 565 பொதுஜன பெரும்பான்மையான ஓட்டுகளால் குடியை மீண்டும் அரசாங்கத்தார் ஆதரிக்கிறார்கள்.

1928-ல் நியூஜிலண்டில் மதுவிலக்குச் சட்ட மேற்படுத்தினர். 144,325 அதிகப்படி ஓட்டுகளால் சட்டம் நிராகரிக்கப்பட்டது.

இந்தியாவிலுள்ள போபால் சமஸ்தானத்தில் 1921-ல் குடியைப் பகிஷ்கரித்தனர். 5 வருஷம் 8 மாதங்களில் சமஸ்தானத்துக்கு சுமார் 17 லட்சம் ரூபாய் நஷ்டமேற்பட்டது. ஆகவே, 1927-ல் மதுவிலக்கு நிறுத்தப்பட்டது.

பூனைக்கால் ஜான்சன் குடி பகிஷ்கார இயக்கத்தி லீடுபட்டு உழைத்து வருகிறார். இதற்கெல்லாம் அவர் தகுந்த பதிலளிப்பாரா?

# வாழ்க்கை நூல்.

ஸ்ரீமான் K. N. சிவராஜ பிள்ளை யவர்கள் B.A.,

---

## 5. இளமை.

### இளமை இயல்.

1. காலைநாள் காட்டும் இயற்கைக் கவினென்ப
வாலைப் பருவ மகிழ்.

2. குழலோடு வாசம் குளிராட வீசும்
இளமை இளமரக் கா.

3. பகையாது வாழ்க்கைகொளச் சையுறையே
எய்யா இளமை இனிப்பு. போலும்

4 இன்பப் பகர்வ் விளமையே ; பிற்காலம்
துன்பம் தொடர்ந்து சுடும்.

### இளமைப் பருவ விளையாட்டு.

5. விளையாட்டும் பிள்ளைக் களையாட்டோ? வீழும்
முளைகாட்டும் வாழ்க்கை முதிர்வு.

### இளமையும் கல்வியும்.

6. இளமையே வித்தற் கிசைபருவம் ; எகின்
முதுமை தருமோ முளை ?

7. இளமையிற் கற்கிலன் போலும், நரைத்த
வளமையிற் கற்க மதித்து.

8. முப்பதிலும் மூடனே யாயின் மடங்கெட
எய்ப்பதிற் சூழ்வ தெது?

9. ஆறிலும் ஐம்பதிலும் ஆளப் படாவறிவு
நூறில் நுழைவ திலை.

### இளமையும் இயற்கை புத்தியும்.

10. மாண்ட முதியன் மதிகொண்டு ; ஆண்டில்
இளைஞனே யாயினு மென்?

### இளமையின் சிறப்பு.

11. இளமை இயற்றருமை என்னென்பேம் ? எல்
பழமை*யும் பாரிக்கும் பார். லாப்

12. அரும்பல் வினைப்பின் வினைவேண்டின் யாண்டும்
விரும்பிர் விடலை வினை.

13. கள்ளிற் கடிய மதர்ப்பே கனியிளமை
யுள்ளி லுதிக்கும் உறைப்பு.

14. புத்திகொளார் தாமுஞ் சிறூர்பால், புகும்வினைக்
சத்திகொள்வ ரன்னூர்த் தலை. குச்

14. தூக்கி நிறுக்கா ரெனினுஞ் சிறுவரே
ஊக்கும் உளுற்று முளர்.

16. முதுமைவாய் வென்றி முழங்கும்; இளமை
கதுவுமே தோல்விக் களிப்பு.

### இளமையும் முதுமையும்.

17. முன்னோரை மூட ரெனமுடிப்பார் முன்னூரோ
பின்னோர்வாய்த் தாங்கேட்கும் பெற்றி?

18. இளையார்வாய் தூற்று மிளியென்னே ! பின்
இளையாரோ கூறு மிவர் ? னுள்

19. இளைஞர்பாற் கூச்சம் † இனிதாம் ; வயது
விளைஞர்*பால் வேண்டா வசை.

### இளமையும் மரணமும்.

20. இளமை இனிதழையா வின்று இறப்பாம்
பழமும் மறைக்கப் படும்.

21. இழவென்றே ஒன்றுளதோ என்பர் இனிய
மழவொன்று காலத்தவர்.

---

* பழமை : Old Tradition and History.

† கூச்சம் Shyness. * வயது விளைஞர்: முதியர்.



## 6. முதுமை.

### இளமையில் மரணம்.

1. குனியுமுன் வீழ்வாழ்வு நோகே; குணந்தான்
கனியுமுன் பற்றிய காய்.

### முதுமையும் மரணமும்.

2. மேவும் பொறிகரணம் வீய, முதுமைப்பின்
சாவஞ்ச லென்னே தகைத்து?

3. மாவச்சம் மாவேற மாய்தல்போல், மாடுரச்
சாவச்சம் தானே கெடும்.

### வாழ்க்கைப் பயனே முதுமை.

4. நோய்போல் முதுமை விலக்க நுணங்கலேன் ?
காய்போல் வராதோ கனி ?

### முதுமைச் சிறப்பு.

5. ஓங்கும் வயதோ டொருமதிப்பும்; ஒன்றுதே
ஏங்கும் இளமை யிருந்து.

6. பொறுமை இளமைதராப் பூவாம் ; அதுவோ
முதுமைப் பருவ முகிழ்.

7. காலத்தா லாகக் கவின்சிதைய உள்ளமோ
சீலத்தாற் சேரும் சிறப்பு.

8. முதுகுமைக் கூனே முடங்கைகா லேனு
முதுமைக் குலகறிவே முன்பு.

9. முதுக்குறை வென்றூர் அறிவை, எதிர
மடத்தில் மடமை வகுத்து.

10. உள்ளத் தொளியை உவக்கீரோ ஓடிவிடும்
கள்ளக் கவினைக் கடந்து ?

11. மெய்யெழிற்குக் கூற்றுமே காலம்; அது வேறாய்
மொய்யறிவிற் சூட்டு முடி.

12. மெய்யூக்கம் தந்த விலையெல்லாம் வேண்ட
பெய்யாக்க மென்றுபிடி. றிவு

13. உள்மாட வாழ்வுள் ளொளியறிவை வாயிற்கண்
நின்மார் § பெறுவ திலர்.

### அறிவில்லா முதுமை.

14. ஆண்டு வளர்ந்தென் அறிவின்றி? நோயடாப்
பூண்டு வளர்ந்தென் புகழ்?

15. அறிவிட்டு யாக்கை முதிர்வா ரடைவு
குருவிவிட்டுக் கூடு கொளல்.

16. நரைகாட்டி நாட்டலாம் மேன்மையெனின்,
மரங்காட்டும் வெண்மை மலர்ந்து. பூளை

### முதுமையின் குற்றம்.

17. முதுவாய் முறுமுறுப்பா லென்பயன்? ஆங்காங்
கதுவாய்த் தழைக்கும் அயல்.

18. இளையர் முதுமை இனிதெனலாம் ; மறறூர்
இளமை யதனின் இனிது. (Cato)

19. பொறிக்குள் வலைதரும் புள்சிறூர், மற்றவ்
வெறிக்குள் முதியர் விழார் (Cicero)

20. பொறிக்கேட்டாற் புக்க குறையென்னே?
மாந்தர்
நெறிக்கேட்டை நீக்கும் நிலைத்து. (Cicero)

21. விடுக்கும் வினைமுதுமை யென்பார்சொல்
அல்லைத்
தொடுக்க அறியார்வீண் சொல் (Cicero)

---

§ இளைஞர்.

---

### ஸ்ரீ ஹென்ரி போர்டு.

பழைய சம்பிரதாயமென்பதால் ஒரு வழக்கம் நேர்மையா யிருக்கவேண்டுமென் பது மில்லை. பழையது நடைமுறைக்கு ஏற்றதாயிருப்பின், அது நேர்மையான தென்று அனுபவத்தில் விளங்குகிறது. கருத்துக்களும் யோசனைகளும் மிகவும் உயர்ந்தவை தான். ஆயினும் அவை நடைமுறையில் பயன்படத் தக்கவையாகச் செய்வது தான் முக்கியம்''

# காந்தமும் காந்தப் பொருள்களும்

## நடைக்கடலில் அவற்றின் உபயோகம்.

ஸ்ரீ. ஏ. ஸ்ரீநிவாசாசாரியார்

காந்தம் என்னும் பெயருடைய பொருள் இரும்பினை இழுக்கும் சக்தி வாய்ந்தது என்பது தற்காலத்தும் முற்காலத்தும் மாந்தரிற் பெரும்பாலார் அறிந்த விஷயம். இரும்பினாற் செய்த ஊசியினை இழுக்குமாதலின், அதற்கு "ஊசிக்காந்தம்" என்னும் பெயரும் உண்டு. காந்தத்திற்கும் இரும்பிற்கும் இடையே மெல்லிய காகிதமேனும் கண்ணாடித் துண்டேனும் இருப்பினும், அதன் சக்தி அப் பொருளின் வழியே ஊடுருவிச்சென்று இரும்பினை இழுக்கும். இவ்வாறு இழுப்பது, காந்தத்தின் வல்லமையையும், இரும்புத் துண்டின் கனத்தையும், இரண்டிற்கும் உள்ள தூரத்தையும் பொறுத்தது. காந்தத்திற்கு இன்னொரு குணமும் உண்டு. காந்த ஊசி யொன்றை மத்தியில் நூலிற் கட்டித் தொங்கவிட்டால், அது வடக்கும் தெற்குமாய் நிற்கும்; வேறு திசைகளை நோக்கித் திருப்பி வைத்தோமாயினும், தடை நீங்கினவுடன், அங்கும் இங்கும் மாறி மாறியோடி இறுதியில் முன்னிருந்த நிலையை அடையும்; அதாவது வடக்கும் தெற்குமாய் நிற்கும். காற்றினாலோ வேறு காரணத்தாலோ சலனம் அடையினும் சிறிது நேரம் அங்குமிங்கும் ஆடி வட்டமிட்டு, பின் அதே திசையை நோக்கி நின்றுவிடும். இது அநேகர்க்குத் தெரிந்த விஷயமாயினும், இதன் காரணம் வெகு காலம் வரை உலகினர்க்குப் புலப்படா தொழிந்தது. அதைப்பற்றிச் சிந்தித்தவர் ஒருவருமிலராயினர்.

காந்தத்தின் சக்தியைப் பற்றியும் அச் சக்தி வாய்ந்த பொருளைப் பற்றியும் செவ்வையாக முறைப்படி ஆராய்ச்சி செய்து நூதன விஷயங்களை முந்துறக் கண்ட முதல்வர், இங்கிலாந்து தேசத்திற் பிறந்து வைத்தியத் தொழிலிற் புகழ்பெற்ற டாக்டர் கில்பர்ட்டு என்பார். இற்றைக்கு முன்னூற்றிருபது வருடங்கட்கு முன்னரேயே அவர் இரும்புச் சுரங்கங்களிற் சில காலமாகத் தோண்டியெடுக்கப்படும் பொருள்களின் குணங்களைப் பரிசோதித்து வந்து கொண்டிருந்தார். அயக்காந்தம் என்றும் காந்தக் கல் என்றும் அழைக்கப்பட்டு வரும் பொருள் ஒன்றே காந்தச் சக்தியுடைய பொருள் என்று அறிந்தார். இவ் வியற்கைக் காந்தத்தைத் தவிர செயற்கைக் காந்தம் உண்டாக்கலாம் என்பதைக் கண்டுபிடித்தவரும் அவரே.

ஓர் இரும்புத் துண்டிற்குக் காந்தத்தை ஊட்ட இரண்டு வழிகள் உண்டு. ஒன்று இரும்புத் துண்டை, காந்த ஊசி எந்த முகமாய்த் திரும்பி நிற்குமோ, அந்தத் திசையை நோக்கி வைத்துக்கொண்டு, அதைக் காய்ச்சி அதன்மீது சம்மட்டியால் அடித்தால், அதற்குக் காந்தம் என்னும் சக்தி உண்டாகி விடுகிறது. அது செயற்கைக் காந்தம்; இயற்கைக் காந்தத்தின் குணங்கள் அதற்கு ஏற்பட்டு விடுகின்றன. இரண்டாவது, உருக்கினாற் செய்த தட்டையான நீண்ட துண்டு ஒன்றின் மீது, காந்தத்தைக் கொண்டு ஒரு நுனியிலிருந்து மற்றொரு நுனிவரை ஒரே முகமாய்ப் பலதரம் தேய்த்துக்கொண்டு வந்தால் அந்த உருக்கு காந்தமாகும். உருக்கினாற் செய்த ஊசிக்குக் காந்தத்தை ஊட்டுவோமானால், அதுவும் காந்த ஊசியாய்விடும். அப்போது அது சாதாரண இரும்புத் துண்டையும் இரும்புத் தூளையும் இழுக்கும் வல்லமையுடையதாகும்.

காந்தம் என்னும் சக்தி வாய்ந்துள்ள பொருள்களைக் காந்தப் பொருள்கள் என்ற பெயரால் அழைப்போம். இத்தகைய காந்தப் பொருள்களின் குணநிசயங்களைச் சோதனை மூலமாய் நிரூபித்துக் காட்டியவர் வைத்தியர் கில்பர்ட் என்பவரே. காந்தப் பொருள் ஒன்றில், எல்லாவிடத்திலும் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடி வரைக்கும் காந்த சக்தி ஒரே மாதிரியாயிருப்பதில்லை. இரண்டு கோடிகளிலும் காந்த சக்தி அதிகரித்தும் நடு மத்தியில் மிகக் குறைந்தும் இருக்கின்றது. கோடிகளிலிருந்து மத்தியை நோக்கி வரவரச் சக்தி குறைந்து வருகிறது. சக்தி குவிந்து நிறைந்திருக்கும் இரண்டு கோடிகளுக்கும் முனைகள் என்று பெயர். காந்தமாக ஆக்கப்பட்ட ஒவ்வொரு இரும்புத் துண்டுக்கும் இயற்கைக் காந்தத்திற்கும் முனைகள் இரண்டு உண்டு.



காந்தப் பொருள் ஒன்றை மத்தியில் கட்டித் தொங்கவிடும்போது அதன் முனைகள் இரண்டும் வடக்கும் தெற்குமாய் நிற்கும். வடக்கு முகமாய்த் திரும்பி நிற்கும் முனை வடமுனை எனப்படும். அதற்கு எதிர் திசை நோக்கும் முனை தென்முனை எனப்படும்.

மேற் கூறிய சோதனைகளைச் செய்து வருங்கால், உருண்டையான ஓர் இரும்புக் குண்டைக் காந்தப் பொருளாக்கும்போது அதற்கு மற்ற இருவகைக் காந்தப் பொருள்களைப்போல் எல்லாத் தன்மைகளும் அமையுமா, அல்லது புதிய தன்மைகள் ஏதாவது ஏற்படுமாவென்ற சங்கை பிறந்தது. ஓர் இரும்புக் குண்டின் மேல் காந்தத்தைப் பன்முறை தேய்த்துக் காந்தச் சக்தியை அதற்கு அளித்தார். பின் சிறு காந்த ஊசி யொன்றை யெடுத்து இந்தக் குண்டின் அருகே பற்பல இடங்களில் கொண்டு வந்தார். அதாவது காந்த ஊசியின் மத்தியில் கயிற்றைக் கட்டிப் பிடித்துக்கொண்டு ஊசியைச் சமீபத்தில் கொணர்ந்தார். உருண்டை காந்தத்தின் முனைகளை நோக்கியே காந்த ஊசியும் நின்றது. முனைகளுக்கு அப்பால் வரவர அதாவது மத்தியை நோக்கி வரவர அதன் நிலை மாறிக்கொண்டே வந்தது. பூமியின் மேற்பாகத்தில் ஒரு காந்த ஊசியைக் கயிற்றில் கட்டித் தொங்கவிட்டால் அந்த ஊசி பூமியில் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான நிலைமையில், அதாவது ஒரே திக்கை நோக்கியும், மேலும் கீழும் சிறிதும் செல்லாமலும் இருப்பதில்லை. பொதுவாய் வடக்கும் தெற்குமாய் நிற்குமாயினும், இடத்திற்குத் தக்கபடி வேறுபாடுகள் அதனிடத்துக் காணப்படும். இந்த உண்மையைக் கில்பர்ட்டு அறிந்திருந்தார். இரும்புக் குண்டுக் காந்தத்தின் மேற்பாகத்தில் சிறிய காந்த ஊசி நிற்கும் நிலையையும் பூமியின் மேற்பாகத்தில் காந்த ஊசி பற்பல இடங்களில் நிற்கும் நிலையையும் ஒப்பிட்டு நோக்கும்போது இரண்டிற்கும் வேறுபாடுகள் காணப்படவில்லை. அவர் செய்த பரிசோதனையில் இரும்புக் குண்டை பூமியாகவும், சிறிய ஊசியைப் பெரிய காந்த ஊசியாகவும் வைத்துக் கொண்டோமானால், எவ்வண்ணம் பூமியிற் பற்பல இடங்களில் காந்த ஊசி சாய்ந்திருக்குமோ அவ்வண்ணமே இடங்களுக்கு ஏற்பச் சாய்ந்திருப்பதைக் கண்டார். ஆஹா! அங்ஙனமாயின், பூமியும் ஒரு பெருங் காந்தப் பொருளாய் இருக்கக்கூடும் என்னும் எண்ணம் அவரது மனதில் பளீரென்று தோன்றிற்று. அதுவரை அந்த எண்ணம் ஒருவர் மனதிலும் எழவில்லை. அப் புதிய எண்ணம் தோன்று முன், மாந்தர் பலவாறான தவறான அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தனர். ஆகாயத்தின் கண் 'மினுக்கு' 'மினுக்கு' என்று ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் நக்ஷத்திரங்களில் ஏதாவது ஒன்றில் காந்த மலை இருக்கலாம் என்றும் சிலர் கருதி வந்தனர். கில்பர்ட்டு என்பவர் பழைய அபிப்பிராயங்கள் தவறுடையன என்பதைத் தெளிவாய் நிரூபித்துக் காட்டித் தம் அபிப்பிராயத்தை சோதனைகள் மூலமாய் நிலை நாட்டினார். பூகோளம் ஒரு காந்தப் பொருள். அதற்கு வடமுனை தென்முனை என்னும் இரண்டு முனைகள் எவ்விதக் காந்தப் பொருளுக்கும் இருப்பதுபோல உண்டு; பூமி பெருங் காந்தமாயிருப்பதினாலேயே காந்த ஊசி வடக்கும் தெற்குமாய் நிற்கின்றது. இதுவே அவர் நாட்டிய உண்மையான கொள்கை.

ஒரு சாதாரண இரும் பூசியை வடக்கும் தெற்குமாய் வைத்து மத்தியிலிருந்து கட்டித் தொங்கவிட்டால், நம்மூரில் அது மட்டமாய் இருபுறமும் சமமாய் நிற்கும். ஆனால் கயிற்றைச் சிறிது முறுக்கினால் ஊசி வேறு திசையை நோக்கித் திரும்பி நிற்கும். முன்போல் வடக்கும் தெற்குமான நிலையில் தொங்கிக்கொண்டு இருக்கும்போது அதற்குக் காந்தத்தை ஊட்டிவிடுவோம். அதாவது காந்தம் என்னும் பொருளை அதன்மேல் தேய்த்து விடுவோம். அப்போது அது இருபுறமும் சமமாய் நுனிகள் ஒன்றிற்கொன்று ஏறறத் தாழ்வின்றி நிற்குமோ என்றால் அவ்வாறு நிற்பதில்லை. காந்தத்தின் வடமுனை நமது ஊரிலும் நமக்கு வடக்கேயுள்ள ஊர்களிலும் சிறிது கீழ் நோக்கித் தாழ்ந்தும் தென்முனை மேல்நோக்கி உயர்ந்தும் நிற்பதாகக் காணப்படுகிறது. பூமியின் வட துருவம் அல்லது தென் துருவம் என்னும் கோடிகளுக்குச் செல்லும்போது காந்த ஊசி கீழும் மேலுமாய்ச் செங்குத்தாய் நிற்கின்றது. காந்த ஊசியின் மத்தியில் சிறிது துவாரமிட்டு, அத் துவாரத்தின் வழியாய் அதனிலும் சிறிய ஒரு கம்பியைப் புகுத்தி, கம்பியின் நுனிகளை இரு பக்கங்களிலும் இரண்டு உயரமான மரக் கம்புகளில் ஒரே உயரத்தில் புதைத்து விடுவோம்; பின், ஊசியின் நுனிகள் வடக்கும் தெற்குமாய் இருக்கும்படி மரக் கம்புகளைக் கிழக்கிலும், மேற்கிலும் வைத்து விடுவோம்.

இந் நிலையில் ஊசியைச் சக்கரம்போல் கம்பியின் மீது செங்குத்தாய்ச் சுழலும்படிச் செய்யக் கூடுமல்லவா? இத்தகைய காந்த ஊசியை வட துருவத்திற்குக் கொண்டு சென்றால், அது கீழும் மேலுமாய்ச் செங்குத்தாய் அவ் விடத்தில் நிற்கிறது; சில ஆண்டுகட்கு முன்னர் வட துருவத்தைக் கண்டு பிடிக்கவேண்டும் என்னும் பேரவாவோடும் அத் திசையை நோக்கி யாத்திரையாய்ச் சென்ற சில தீரர்கள் இக் கருவியைக் கொண்டு செல்லும்போது, ஓர் இடத்தில் காந்த ஊசி செங்குத்தாய் நின்றதைக் கண்டே, அவ்விடம் வட துருவம் என்று நிச்சயித்தனர். அவ்விடத்தில் காந்தத்தின் வட முனை கீழும், தென்முனை மேலுமாய் நிற்கின்றது. தென் துருவத்தில் தென்முனை கீழும், வடமுனை மேலுமாய் நிற்கின்றது. இத் துருவங்களினின்றும் விலகிப் பூமியின்மத்தியை நோக்கி வரும்போது, செங்குத்தாய் நின்ற காந்த ஊசி சிறிது சிறிதாய்ச் சாய்ந்துவரும். அதாவது வட துருவத்திற்குப் பக்கத்திலிருந்து தென் துருவத்தைநோக்கிவரும்போது வடமுனை வரவர உயர்ந்தும் தென் முனை வரவர தாழ்ந்தும் வரும்; பூமியின் மத்திய பாகத்தில், அதாவது இரண்டு துருவங்கட்கும் மத்தியிலுள்ள பாகத்திற்கு வரும்போது, காந்த ஊசியின் இரண்டு முனைகளும் சம உயரமாய் மட்டமாய் நிற்கும். அந்த மத்திய ரேகையை விட்டுத் தெற்கே வருவோமாயின், வடமுனை உயர்ந்தும் தென் முனை தாழ்ந்தும் வரும்; வடமுனை ஏற ஏறத் தென்முனை வரவர இறங்கிக்கொண்டே வரும்; கடைசியில் தென் துருவத்திற்கு வரும்போது தென்முனை கீழும், வடமுனை உயரவும் ஆகச் செங்குத்தாய் நிற்கும். ஆதலால் மேற் கூறிய காந்த ஊசியின் நிலையைக்கொண்டே நாம் இருப்பது பூமிக்கு மத்தியில் உள்ள ரேகையிலா, அல்லது பூமியின் வடபாகத்திலா, தென் பாகத்திலா என்பதை அறியக் கூடும். வடமுனையும், தென் முனையும் சமமாய் மட்டமாய் இராது; வடமுனை கீழ் இறங்கி யிருந்தால், பூமியின் வடபாகத்தில் இருக்கிறோம் என்பதும், தென் முனை கீழ் இறங்கியிருந்தால் பூமியின் தென் பாகத்தில் இருக்கிறோம் என்பதும் ஏற்படுமல்லவா? வடமுனை அல்லது தென் முனையின் இறக்கம் பூமத்திய ரேகையினின்றும் வடக்கே அல்லது தெற்கே செல்லும் தூரத்திற்கு தக்கபடி அமைவதினால், அவ் இறக்கத்தினின்றும் அத் தூரத்தைக் கணக்கிடக்கூடும். ஆகவே, இவ் ஊசியின் முனைகளின் இறக்கத்தை அளந்து, அக் கருவி வைக்கப்பட்டிருக்கும் இடம் பூமியின் மத்தியிலிருந்து (துருவத்தை நோக்கி அளந்தால்) இவ்வளவு தூரத்திலுள்ளது என்பதைக் கண்டுபிடித்து விடலாம்.

காந்த ஊசி வடக்கேயே நோக்குமாதலின், அதையே திசையறி கருவியின் கண் உபயோகித்திருக்கிறார்கள். திக்கும், திசையும் அறியாது நடுக் கடலில் தனியே சஞ்சரிக்கும் மரக்கலத் தலைவர்களுக்குத், தாங்கள் செல்லும் திசை இன்னது என்பதை அறிவிப்பது காந்த ஊசியே. அதன் மூலமாய் வடக்கும், தெற்கும் தெரிந்து கொள்ளலா மாதலின், மற்ற திசைகளை எளிதில் உணரலாம். முற்காலங்களில் இக் கருவியில்லாத காலத்து நக்ஷத்திரங்களின் நிலையைக் கொண்டே கப்பல் ஓட்டுவது வழக்கமா யிருந்தது. அந் நாளில் வானம் இருண்டு நக்ஷத்திரங்கள் மறைபடும் பக்ஷத்தில், மாலுமிகள் மனத்தளர் வுறுவார்கள். இக் காலத்திலோ, பௌதிக சாஸ்திர ஞானத்தினால் அகத்தேயுள்ள அறிவின் ஒளியால், புறத்தேயுள்ள இருளையும் வென்று செல்லுகிறார்கள். மாலுமியின் அறையிலுள்ள கருவிகளுள் முக்கியமானவை திசையறி கருவியும், இறக்கத்தை காட்டும் காந்த ஊசியும். திசையறி கருவியின் உதவியால் நினைத்த திசையைநோக்கிச் செல்லுமாறு, அறையிலிருந்த வண்ணமே கப்பலைத் திருப்ப இயலும். எந்த நிமிடத்தும், இந்த திசையை நோக்கிக் கப்பல் செல்கின்றது என்பதை நிச்சயிக்கக் கூடும். முற் கூறி வந்த மேலுங் கீழும் இயங்கும் காந்த ஊசியால், ஒரு முனையின் இறக்கத்தைக் கொண்டு, துருவத்தினின்றும் இவ்வளவு தூரத்தில் இருக்கிறது கப்பல் என, நிதானிக்கக் கூடும். ஆகவே, மாலுமி தன் அறையிலிருந்து தனது இரு கருவிகளையும், சில பூகோளப் படங்களையும் பார்த்துக்கொண்டே, தான் இருக்கும் இடத்தை நிதானித்து அறியவும் தனக்கு வேண்டிய திசையை நோக்கிக்கப்பலைச்செலுத்தவும் வல்லவனாவான். இம்மாதிரியான நன்மைகள் அனைத்திற்கும் காரணமாய் இருந்தது காந்தம் என்னும் சக்தியே.

—ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்.



# பத்திராசிரியர் குறிப்புகள்

**வாழ்த்து :—** ஆ. தெக்கூர் ஸ்ரீமாந். ராம. சுப. அருணகிரி செட்டியாருக்கும், சென்னை சட்டசபை உபதலைவர் டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாளின் வளப்புப் புதல்வி ஸ்ரீமதி. சுந்தரியம்மாளுக்கும் சென்ற மாதம் 31வ ஞாயிற்றுக் கிழமை காலை 9-மணிக்கு சென்னை பிரம்ம சமாஜக் கட்டிடத்தில் பிரம்மசமாஜ விதிப்படி விவாகம் நடைபெற்றது. இத்தகைய கலப்பு விவாகங்கள் சமூக ஒற்றுமைக்கும் தேசீய முன்னேற்றத்திற்கும் மிகவுந் தேவையானதாகும். இத்தகைய கலப்பு விவாக விஷயத்தில் வட இந்தியா எவ்வளவோ முன்னேறிச் செல்லுகிறது. வைதீகப் பித்தர்கள் நிறைந்த தென்னாட்டில் மட்டுமே கலப்புவிவாகம் அபூர்வமாக இருக்கிறது. ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்கள் புத்திரர் குமார ராஜா M.A. முத்தையா செட்டியாரவர்கள் B.A.; சா. ம. சித. ஜம்புலிங்கம் செட்டியாரவர்கள் அ. மு. மு. வெள்ளையப்ப செட்டியாரவர்கள், கே. ராம. நாதன் செட்டியாரவர்கள் B.A.B.L. க. வீ. அழ. ராம சேது செட்டியாரவர்கள், க. வீ. அழ. ராம. அழகப்ப செட்டியாரவர்கள், பூலாங்குறிச்சி வ. சொ. ராம. வள்ளியப்ப செட்டியாரவர்கள், ஷையூர் ராம. ப. ராம. மாணிக்கஞ் செட்டியாரவர்கள், பிச்சப்பா சுப்பிரமணியன் அவர்கள், கல்லல் மு. மு. சிதம்பரஞ் செட்டியாரவர்கள், பள்ளத்தூர் மு. அ. அருணாசலம் செட்டியாரவர்கள், செய்யூர். எம். ஆர். எம். ராமசாமி செட்டியாரவர்கள், காரைக்குடி தி. அரு. அ. ராம. அண்ணாமலைச் செட்டியாரவர்கள், பள்ளத்தூர். க. கு. காசி செட்டியாரவர்கள், மெ. செ. ச. மெய்யப்ப செட்டியாரவர்கள் முதலிய நகர வணிகப் பிரமுகர்கள், அந்த விவாக சமயத்தில் பிரசன்னமாயிருந்து ஆசீர் வதித்தது போற்றத் தக்கதாகும். சமூகத் தலைவர்கள் கலப்பு விவாகங்களுக்கு அநுகூலமாயிருந்தால் மேலும் இத்தகைய விவாகங்கள் நடத்தல் கூடும். வைதீக எதிர்ப்புகளையும் மதியாமல் இந்தச் சீர்திருத்த விவாகம் நடத்திய ஸ்ரீ அருணகிரியையும் ஸ்ரீமதி சுந்தரியையும் நாம் மனமார வாழ்த்துகிறோம்.



மணமகனும் மணமகளும்.

* *

**மனுஸ்மிருதி :—** விசால ஹிருதயரும் பண்டித சிரோமணியுமான காவியகண்ட கணபதி சாஸ்திரியவர்கள் மனுஸ்மிருதியைப் பற்றி எழுதிய ஒரு வியாசத்தை 234-வது பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். புண்ணியநதியான கங்கையில் அதன் உற்பத்திஸ்தானம் முதல்

சங்கமம் வரை எண்ணிறந்த சாக்கடைகள் வந்து விழுந்து அசுத்தப் படுவதுபோல், மிகப் புராதனமான உத்தம ஹிந்து மத நூல்களிலும் அநேக இடைச் சொருகுகள் புகுந்து களங்கப்படுத்தி விட்டன. எனவே நமது புராணேதிகாசங்களில் கூறப்படும் விஷயங்களை நம்மவர்கள் நம்பத் தயங்குகின்றனர். ஒன்றுக்கொன்று முரண்பாடான விஷயங்கள் நமது நூல்களில் நிறைந்திருப்பதால் சாமானிய மக்கள் மயக்கம் கொள்கின்றனர். ஆகவே நமது நூல்களிலுள்ள பதர்களை நீக்கி மணிகளைத் திரட்டிக் காட்டுவது பண்டித சிரோமணிகளின் முதற் கடமையாகும். அவ்வாறின்றி நூல்களில் கூறப்படுபவைகளெல்லாம் தேவ வார்த்தைகளென்று குரங்குப் பிடிவாதம் செய்வதும், வியாக்யானங்கள் கூறுவதும், தத்துவார்த்தங்கள் காட்டுவதும் முழுமூடத்தனமாகும். காவியகண்ட கணபதி சாஸ்திரியவர்கள் மனுஸ்மிருதியைப் பற்றிக் கூறும் அபிப்பிராயங்களை வைதிகர்கள் ஒப்புக்கொள்ள முன் வந்தால் ஹிந்துமதம் முன்னேற்ற மடையும்; ஜாதிப் பூசல்கள் ஒழியும்; தேச விடுதலையும் கைவல்யமாகும். நாஸ்திகத்தைக் கொல்ல ஆஸ்திக சங்கம் ஸ்தாபித்து வீண் வேலை செய்யும் அறிவாளிகளும் இதனைக் கவனிப்பார்களாக.

* *

வடநாடும் தென்னாடும் :—சமய சமூக சீர்திருத்த விஷயத்தில் வடநாடு முன்னேற்ற மடைந்திருப்பதாக ஏற்கனவே கூறியுள்ளோம். சூரத்தில் சமீபத்தில் நடைபெற்ற ஹிந்து மகாசபையின் 12-வது மகாநாட்டில் தீண்டாமை ஒழிய வேண்டும்; தீண்டப்படாதார் என்போர்களை ஆலயங்களுக்குள் விட்டும், கூட்டங்களுக்கு வர அநுமதித்தும், பாடசாலைகளிற் சேர்த்தும், பொதுக் கிணறுகளை உபயோகிக்க அநுமதித்தும், சமய உரிமையும் அந்தஸ்தும் அவர்களுக்கு வழங்கவேண்டும்" என்பன வாதிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. அயோத்தியில் உள்ள கோயில்களுக்குள் தீண்டப்படாதார் என்போரை அநுமதித்து விட்டார்கள். சென்னைக் கடற்கரையில் கூடிய ஒருகூட்டத்தில் பண்டித மாளவியா பேசும்பொழுது "தற்போது, இந்தியாவிலுள்ள பலவிடங்களிலும் தீண்டாமையை ஒழிக்கப் பலர் முயற்சிசெய்து வரும்போது, இம் மாகாணத்தில அவ் விஷயத்தைப் பற்றி பிரமாதமான வாதம் நடந்துவருவது எனக்கு மிக மன வருத்தத்தை உண்டு பண்ணுகிறது" என்றும் கூறியிருக்கிறார்.

தென்னாட்டிலும் சமய மகாநாடுகள் கூடுவதற்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப் படுவதற்கும் யாதொரு குறைவுமில்லை. ஆனால் தேவையான வழிகளில் அம் மகாநாட்டு நிர்வாகிகள் மனம் செல்லவில்லை. கடவுளுக்கு வந்த ஆபத்தைத் தடுக்கும் பொருட்டு அவதார புருஷர் வருகையை எதிர்நோக்கித் தவங்கிடக்க எண்ணுவோர் வாழும் தென்னாட்டில் சீர்திருத்தம் என்று ஏற்படுமோ? சமயம் என்று வளருமோ? மக்கள் என்று சுதந்திரம் பெறுவார்களோ?

* *

காங்கிரசிலும் வைதீகமா?:—அடுத்த தேர்தலுக்குப் பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யும் பொருட்டு காங்கிரஸ் தலைவர்கள் நாடெங்கும் சுற்றத் தொடங்கிவிட்டார்கள். சென்ற தேர்தலுக்குப் பின் காங்கிரஸ் தலைவர்கள் இப்பொழுதுதான் முதன் முதலாக திக் விஜயம் செய்யத் தொடங்கி யிருப்பதையும் தேச மக்கள் கவனிக்கவேண்டும். அங்கங்கே அவர்கள் செய்யும் பிரசங்கங்களில் அவர்கள் வைதீகத்தை ஆதரிப்பது கண்டு தேசியவாதிகள் மனம் புண்படுகிறது. சாரதா மசோதாவினால் இந்து மதமும் சமூகமும் அழிந்துவிடுமென்றும், அது நிறைவேறுகிறதாயிருந்தால் அதை மீறித் தன் புத்திரிக்கு இள வயதிலேயே விவாகம் செய்துவைக்கப் போவதாகவும் திரு. சத்தியமூர்த்தி வீரவாதம் செய்கிறார். இது வீண் வாய் வீச்சு என்று தென்னாடு அறியுமெனினும் அவரது மனப்போக்கை, விளக்குவதற்கு இது ஒரு நல்ல அறிகுறியல்லவா. தென்னாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீமாந். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவ்வளவு தூரம் ஏறிப் பேசவில்லையாயினும், அவரது மனப்போக்கும் வைதீகத்தை ஆதரிப்பதாகவே இருக்கிறது. சாரதா மசோதாவினால் ஹிந்துமதம் அழிந்துவிடுமென்று அவர் நம்பவில்லையாம். எனினும் பெண்கள் விஷயத்தில் நாம் மிகக் கருணையோடு நடந்துகொள்ள வேண்டுமென்று அவர் கூறுகிறார். ஆனால் "பெண்கள் விஷயத்தில் நாம் மிகக் கருணையோடு நடந்துகொள்ள வேண்டும்" என்ற வாக்கியத்துக்கு மயிலை ஸ்ரீமாந் என்ன பொருள் கொள்ளுகிறாரோ தெரியவில்லை. எட்டு, பத்து வயதுச் சிறுமிகளை 30, 40 வயதுப் புருஷர்களின் காமவிடாய் தீர்க்க அர்ப்பணம் செய்வதுதான் பெண்களிடத்தில் கருணையோடு நடந்துகொள்ளும் முறையா? பக்குவ வயது வந்து, விவேக முதிர்ச்சி பெற்ற பிறகுதான் விவாகம்செய்ய வேண்டுமென்று கூறுவது எவ்வாறு பெண்களைத் துன்புறுத்துவதாகும்? சாரதா மசோதாவைக் கவிழ்க்கும்பொருட்டு, இந்திய சட்டசபையில் ஸ்ரீமாந்கள். M. K. ஆச்சாரியா, M. S. சேஷய்யங்கார் போன்ற தென்னாட்டு வைதீகர்கள் எவ்வளவு சூழ்ச்சிகள் செய்து வருகிறார்கள் என்பதைத் தென்னாடு நன்கறியும். ஆகவே அடுத்த தேர்தலில் வைதீகர்கள் தேர்ந்தெடுக்கப்படாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது தென்னாட்டாரைப் பொறுத்த கடமை, காங்கிரஸ் கட்சியாராயிருப்பினும் சரி, சுயேச்சைக் கட்சியாராயிருப்பினும் சரி, ஜஸ்டிஸ் கட்சியாராயினும் சரி வைதீகர்கள் தேர்ந்தெடுக்கப் படவே கூடாது. அரசியல் சமூக வாழ்வுகளில் வைதீகர்களது ஆதிக்கம் ஒழிந்தால் தான் தேசம் விடுதலை யடையும்; க்ஷேம முறும். துருக்கி, ஜப்பான் முதலிய, தேசங்களே இதற்கு அத்தாட்சி.

காங்கிரஸின் பேரால் மயிலை ஸ்ரீமாந். கோஷ்டியார் வைதீகத்துக்கு ஆதரவு தேடுவதை "தேசியப் பத்திரிகைகள்" என்று பொக்கம் பேசும் சென்னைப் பத்திரிகைகள் கண்டிக்காம லிருப்பதுதான் விநோதமாயிருக்கிறது. திரு. ராமசாமி முதலியாரோ M. K. ஆச்சாரியாரோ, மஹாகனம் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியோ, பி. டி. ராஜனோ இவ்வாறு பிரசாரம் செய்தால் இந்த "தேசியப் பத்திரிகைகள்" எல்லாம் ஒன்று சேர்ந்துகொண்டு ஓலமிடத் தொடங்குமே. இவைகளின் தேசிய வாதம் ஆளையும் சந்தர்ப்பத்தையும் பொறுத்தது தானா?

* * *

வீண்வழக்கு வேண்டாம் :—கோலாலம்பூர் ஸ்ரீ. மாரியம்மன் கோயில் பாராமரிப்பு விஷயமாக சுப்ரீம் கோர்ட்டில் ஒரு வழக்கு நடந்து வருவதாகவும் அதனால் அங்குள்ள இந்தியர்களுக்குள் கட்சிப் பிளவு ஏற்பட்டிருப்பதாகவும் அறிகின்றோம். வயிற்றுப் பிழைப்புக்காக கடல் கடந்து அயல்நாடு சென்ற இந்திய சகோதரர்கள், தம்முள் ஒற்றுமையாக நடந்து கொள்ளாமல் ஊர்க் கோவில் பாராமரிப்பு விஷயமாக வழக்காடிப் பிரிந்து நிற்பது, மிகவும் வருந்தத் தக்கது. இத்தகைய ஊர் வழக்குகளால் கெட்டுப்போன ஊர்களும் சமூகங்களும் குடும்பங்களும் அநந்தம் என்பதை நமது இந்தியச் சகோதரர்கள் அறியாமலிருக்க இடமில்லை. எனினும் இவ் வழக்கு எவ்வாறோ தோன்றி விட்டது. கோர்ட்டுக்குப் போகாமலே கோவில் பாராமரிப்பு விஷயத்தைச் சரிப்படுத்திவிடலாம் என்ற நம்பிக்கையுள்ள ஒரு கட்சியாரும் இருப்பதாகத் தெரிகிறது. 20–4–29-ல் கோலாலம்பூரில் கூடிய ஒரு பொதுக்கூட்டத்தில் இவ் விஷயம் ஆலோசிக்கப்பட்டு ஸ்ரீமான்கள். விசுவலிங்கம், மே. சு. வடிவேல் பிள்ளை, எதிராஜலு நாயுடு, ராம. து. ராமசாமிப் பிள்ளை, பழனிசாமிப் பிள்ளை, சிங்காரம் பிள்ளை, பொ. ரா. ராமசாமி மண்டூர் முதலிய பிரபலஸ்தர்கள் அடங்கிய ஒரு பஞ்சாயத்துக் கமிட்டி நியமிக்கப் பட்டிருப்பதாகவும் அறிகின்றோம். இந்த கனவான்களின் முயற்சியால் இவ் வழக்கு சமரசமாக முடியுமாறு திருவருளை வேண்டுகின்றோம்.

* * *

புதுக்கட்சி :—மாண்ட் போர்டு சீர்திருத்தத்தின் பயனாக மூன்று மந்திரி பதவி யிருப்பதனால் புதுக் கட்சிகள் தேர்தல் தோறும் கிளைத்த வண்ணமா யிருக்கின்றன. சென்னை மாகாணத்தில் சென்ற தேர்தலின்போது சுயேச்சைக்கட்சியென ஒரு புதுக்கட்சி தோன்றிற்று. அதனை காங்கிரஸ் காரர் மறைமுகமாகவும் ஏனையோர் வெளிப்படை யாகவும் ஆதரித்தனர். அக்கட்சியார் மந்திரி சபை ஸ்தாபனம் செய்து மூன்றுவருஷம் முடியப்போகும் இத் தருணத்தில் "தேசிய வாதிகளுக்கும்" காங்கிரஸ்காரர் களுக்கும் வெறுப் புண்டாயிருப்பது மன்றி முதலிரண்டு சட்டசபை காலத்தில் மந்திரிப்பதவி வகித்த ஜஸ்டிஸ் கட்சியார் கூட "தேவலாம்" என்றும் ஆய்விட்டது. எனவே, இவ் வருஷத்திலும் மாஜி மந்திரி திவான் பகதூர் ஆரோக்கியசாமி முதலியார், மாஜி அட்வகேட் ஜெனரல் T.V. வெங்கடராம சாஸ்திரியார் முதலியோர் ஆதரவில் "தேசமே பிரதானம்" என்னும் பெயரிய ஒரு புதுக்கட்சி தோன்றி யிருக்கிறது. நம் மட்டில் எத்தனை கட்சி தோன்றினாலும், அத்தனை கட்சிகளையும் வரவேற்க தயாராக இருக்கிறோம், ஏனெனில் கட்சிகள்

தோன்றத் தோன்றத்தான் ஒவ்வொரு கட்சியின் யோக்கியதா யோக்கியதைகள் வெளியாகும். தற்காலம் தோன்றியிருக்கும் புதுக் கட்சியார் காங்கிரஸ் [illegible] ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறார்களாம். நேருயாதாஸ்தையும் ஆதரிக்கிறார்களாம். மந்திரி பதவி வகிக்க அவர்களுக்குப் பிரியமில்லையாம். காங்கிரஸ்காரர் மந்திரிபதவி வகிக்க நேர்ந்தால் அவர்களுக்கு உதவி புரியவும் தயாரா யிருக்கிறார்களாம். ஆனல் காங்கிரஸ்காரர் மந்திரி பதவி வகிக்காதிருக்கவும், வகுப்புவாதக் கட்சியார் மந்திரிபதவி வகிக்கும்படி யாகவும் நேர்ந்தால் இந்தப் புதுக்கட்சியார் மந்திரிபதவி வகிக்க முன் வருவார்களாம். ஆகவே வகுப்புவாதக் கட்சியார் எனப்படும் ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரிசபை அமைக்காமல் தடையேற்படுத்துவதுதான் இந்தப் புதுக் கட்சியின் தலைசிறந்த நோக்கம். இந்தப் புதுக்கட்சி எவ்வாறு நடக்கப்போகிற தென்று சிறிது காத்திருந்து பார்ப்போமாக!

*　　*

**உசிதமான நியமனம்:**—சென்னை நகர சபைக்கு பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் ஒரு அங்கத்தினராய் நியமனம் பெற்



றிருப்பதை அறிந்து மிகவும் சந்தோஷிக்கிறோம். பண்டிட் ஆனந்தம் அவர்களைப்பற்றிக் கேட்டிராதார் தமிழுலகத்தில் இருக்கமாட்டார்கள். தமிழர் முன்னேற்றத்துக்குப் பொதுவாகவும் மருத்துவர் முன்னேற்றத் துக்குச் சிறப்பாகவும், சித்தவைத்திய அபிவிருத்திக்காகவும் அவர் செய்துவரும் தொண்டு மிகவும் பாராட்டத் தக்கதாகும். சமீபத்தில் "மருத்துவன்" என்னும் வைத்திய பத்திரிகையும் வெளியிட்டு வெகு சிறப்பாக நடத்துகிறார். இத்தகைய பொது நல ஊழியர்களை சர்க்கார் கௌரவிப்பது சர்க்காருக்கும் கௌரவமே. அடுத்த சட்டசபையிலும் நமது பண்டிதரவர்களைத் துரைத்தனத்தார் ஒரு அங்கத்தினராக நியமனம் செய்யவேண்டு மென்று விரும்புகிறோம். பண்டிதர் மேலும் பல உயர் பதவிகள் பெற்றுப் பல்லாண்டுவாழ இறைவன் அருள் புரிக!

*　　*

**இந்திய சட்டசபையும் தென்னிந்திய வர்த்தகத் தொகுதியும்:**—அரசியல் நிருவாகத்தில் எல்லாத் துறையினரும் பிரதிநிதித்துவம் பெற வேண்டு மென்னும் நோக்கத்துடன், பொது மக்களுக்கும், நிலச்சுவான்தார்களுக்கும், வர்த்தகர்களுக்கும் தனித்தனி தேர்தல் தொகுதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆகவே அந்தந்தத் தொகுதிக்கு அவ்வத் துறையில் அமர்ந்திருப்பவர்கள் தேர்தலுக்கு முன் வருவதே சிலாக்கியமாகும். செருப்புக்குத் தக்கபடி காலைத் தறிப்பார் உலகில் ஒருவருமிலர். அடுத்த இந்தியா சட்டசபைத் தேர்தலுக்கு ஜனுப் ஜமால் முகமது சாகிப், ஒரு அபேட்சகராக முன்வந் திருப்பதாய் அறிகின்றோம். அவர் வர்த்தக உலகத்தில் முடிசூடா மன்னராய் விளங்குபவர். வருஷா வருஷம் 75,000 ரூபாய் வருமானவரி செலுத்துபவர். ஐரோப்பாவில் பல இடங்களிலும். இந்தியாவிலும் கிளை வர்த்தக ஸ்தலங்கள் உடையவர். இங்கிலாந்து, ஜர்மனி, ஜப்பான், அமெரிக்கா முதலிய இடங்களுக்குப் பிரயாணம் செய்து அந்தந்த நாட்டு வர்த்தக முறைகளை நேரிற் கண்டறிந்து அநுபவம் பெற்றவர். நாணயமாற்று விஷயத்திலும் அநுபவ ஞான முடையவர். பாரபட்சமின்றிப் பார்த்தால் அவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட வேண்டியதே ஒழுங்கு. ஆனல் அவருக்கு எதிரியாக கோவை ஸ்ரீமாந். சி. வி. வெங்கட ரமணய்யங்கார் முன்வந்திருப்பது மிக வியப்பாக இருக்கிறது. சென்ற பொதுத் தேர்தலில் குருட்டாம் போக்கில்100 ஓட்டு மிகுதி



யால் ஸ்ரீமாந். அய்யங்கார் சென்னை சட்டசபைக்கு அங்கத்தினராய்த் தேர்ந்தெடுக்கப் பட்டார். இவ்வருஷம் கோயம்புத்தூர் ஜில்லாவில் போட்டி பலமாயிருக்கக் கூடுமென்றும் தனக்கு வெற்றி கிடைப்பது அரிதென்றும் உணர்ந்துகொண்ட திரு. அய்யங்கார், சென்னை மாகாணச் சட்டசபையை விட்டுவிட்டு, இந்திய சட்டசபைக்கு ஒரே பாய்ச்சலாய் பாய எண்ணுகிறார். கோயம்பத்தூர், சேலம் தொகுதிக்கு நின்றால் திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியாரைத் தோற்கடிப்பது முடியாத காரியம். ஆகவே தென்னிந்திய வர்த்தகத் தொகுதியில் திரு. அய்யங்கார் பார்வை விழுந்திருக்கிறது. காங்கிரஸ்காரரான திரு. அய்யங்கார், காங்கிரஸ் பேரால் நிற்கவும் தைரியங் கொள்ளவில்லை. இந் நிலைமையில் சென்னை வர்த்தகத் தொகுதி வாக்காளர்கள் என்னசெய்ய வேண்டுமென்று நாம் சொல்லத் தேவையில்லை. இந்த சந்தர்ப்பத்தில் திரு. ஷண்முகம் செட்டியார் அபிப்பிராயத்தை வாக்காளர்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம். அவர் கூறுவதாவது:—ஜனுப் ஜமால் முகமதைப் போன்ற பிரபல வர்த்தகப் பிரபுவும் வர்த்தக அநுபவம் உள்ளவருந்தான் வர்த்தகத் தொகுதிக்குச் சரியான நபர். காங்கிரஸ் காரரும் அவரை ஆதரிக்கத் தயங்க வேண்டியதில்லை. இத் தொகுதியில் பெரும்பாலார் ஹிந்து ஓட்டர்கள். அவர்கள் ஜனுப் ஜமால்முகமதுவை ஆதரிப்பதன் மூலமாக முஸ்லீம்கள் மனதில் ஒரு நம்பிக்கையை உண்டு பண்ண இடமுண்டு. நாம் கலப்புத் தொகுதி கேட்பதற்கும் ஒரு நியாயம் தேடியதுபோலாகும். இந்த இருவரைத் தவிர வேறு யாரும் அத் தொகுதிக்கு நிற்காத பட்சத்தில், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை இத் தேர்தலில் சோதிக்கப் படுவதாகவே கொள்ளப்படும். எனவே, தேசீய ஒற்றுமை, வர்த்தக நன்மை இரண்டையும் உத்தேசித்து, ஜனுப் ஜமால் முகமது தேர்ந்தெடுக்கப் படுவாரென்று மனப்பூர்வமாக நம்புகிறோம்"

அதிர்ஷ்ட வசமாக தென்னாட்டில் ஹிந்து முஸ்லீம் சச்சரவில்லை. ஸ்ரீமான் அய்யங்கார் அந்த சச்சரவுக்கு வித்துப்போடத் தொடங்கி யிருப்பது மிகவும் வருந்தத் தக்கது.

*　　*　　*

**சைவப்பெரியார் மகாநாடு:**—திருநெல்வேலியிற் கூடிய சைவப் பெரியார் மகாநாடு வெறும் கூட்டமாய்க் கூடிக் கலைந்ததை யறிந்து மிகவும் வியசனிக்கின்றோம். எல்லாப் பத்திரிகைகளும் இதைப்பற்றி எழுதிவிட்டன வாகையால், நாமும் அதைக் கிண்டிக் கிளறி நாற்றமுண்டாக்க எண்ணவில்லை. கடவுளும் தேவைதான், சமயமும் தேவை தான். ஆனல் பகுத்தறிவுக்கு ஒவ்வாத ஆசாரங்களையும் அனுஷ்டானங்களையும் கடவுளோடும் சமயத்தோடும் இணைக்கும்போது தான் இடர்ப் பாடு உண்டாகிறது. இந்துக்கள் என்னப் படுவோருக் கெல்லாம் பிரவேசனமளியாத சிவாலயமோ, வைஷ்ணவாலயமோ, சிவமதமோ, வைஷ்ணவ மதமோ இக் காலத்துத் தேவையே இல்லை! சைவ மதத்தில் ஜாதியில்லையென்று வாய்ப் பேச்சளவில் மட்டும் கூறினல் போதாது. நடைமுறையிலும் அதை அநுஷ்டித்துக் காட்டவேண்டும். இனிக் கூடப் போகும் கூட்டத்திலாவது சைவப் பெரியார்கள் இவ்விஷயங்களைக் கவனிப்பார்களாக.

### பண்டித மாளவியா

தீண்டப்படாதார் எனப்படுவோரை மறக்காதீர்கள் அவர்களும் இந்தியர்கள். பிறரைப்போல் எல்லா ராஜீய விஷயங்களிலும் அவர்களுக்கு சமமாக அந்தஸ்தும் உரிமையும் உண்டு. எல்லாப் பதவிகளுக்கும், உத்தியோகங்களுக்கும் பிறரைப் போல் அவர்களும் வரவேண்டும். பள்ளிக் கூடங்கள், பொதுஸ்தலங்கள், யாவற்றிற்கும் அவர்களுக்கும் சம உரிமை யுண்டு.





ஹென்ரி போர்டு; போர்டு மோட்டார் அரசர் ஸ்ரீ. ஹென்ரி போர்டைப் பற்றி அறியாதார் இந்தியாவில் அதிகப்பேர் இருக்க மாட்டார்கள். அவர் தன் சுய முயற்சியால் உலகம் போற்றும் உத்தமரானவர். அவரது நீண்ட கால அநுபவங்கள் இந்நூலில் வெகு அழகாகக் கூறப்பட்டிருக்கின்றன. மாணுக்கர், இல்லறத்தார், விவசாயிகள், வர்த்தகர்கள், வக்கீல்கள், அரசியல் வாதிகள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், பத்திராசிரியர்கள், தொழிற்சாலை அதிகாரிகள் முதலிய சமஸ்த மக்களுக்கும் இந்நூல் ஒரு சிறந்த வழி காட்டியாயிருக்கு மென்பது நிச்சயம். இந்நூலை ஐயந்திரியறப் படித்து, அதன்படி ஒழுகினல் நமது வாழ்வு வெற்றி பெறுவதும் உறுதி. இடர்ப்பாடுண்டாகும் நேரங்களில் ஜோசியர் உதவியை விரும்பும் நம்மவர்கள் இந்நூலை ஒரு முறை படித்துப் பார்த்தால், அவர்களது இடுக்கண் களையும் ஒரு உபாயம் தோன்றுமல் போகாது. இத்தகைய ஒரு உத்தம நூலை வெகு அழகாக அச்சிட்டு வெளியிட்ட "தமிழ் நாடு" கம்பெனியாருக்குத் தமிழுலகம் நன்றி செலுத்தக்கடமைப் பட்டுள்ளது. புஸ்தகம் வெகு சிறப்பாக அச்சியற்றப் பெற்றிருப்பினும் அதில் இடம் பெற்றுள்ள ஒரு சிறு குறையை எடுத்துக்கூறுமல் இருக்க முடியவில்லை. Henry என்னும் ஆங்கில பதத்தைத் தமிழில் எழுதும் போது ஹென்ரி என்று எழுதுவதே சால்புடைத்து. ணகரத்துக்குப் பின் றகரம் வந்தால் றகரம் ணகரத்தோடு மருவி விடுமாதலால் ஹென்ரி என்ற ஒலி பிறக்காது. ஆங்கிலபதம் Henty என்று இருந்தால் தமிழில் ஹென்றி என்று எழுதுவது சரியே. Henry என்னும் பதத்தில் ணகரமும் ரகரமும் தனித் தனி ஒலித்தலால் ஹென்ரி என்று எழுதுவதே பொருத்தம். இக்குறைபாட்டை இரண்டாம் பதிப்பில் நீக்கி விடுமாறு வேண்டுகிறோம். நயம் கிளேஸ் கடிதத்தில் அச்சிடப் பெற்று அழகிய பைண்டும் 155 பக்கமும் கொண்ட இந்நூலுக்கு ஏற்படுத்தப் பட்டிருக்கும் விலை ரூ. 1-8 மிகச் சொற்பமென்றே எண்ணுகிறோம்.

வீரபாகு அல்து தங்க முக்கோணம்:— இது புதிதாக வெளி வந்திருக்கும் ஒரு தமிழ் நாவல். இந்த நாவலில் கொலை செய்த கொடும் பாபியே ஒன்று மறியாதவன் போல் மற்றவர்களோடு கலந்து கொண்டு துப்பறிபவர்களையும் போலீசார்களையும் ஏமாற்றுவதும், கொலையைப் பற்றிய துப்பும், பணம் ஒளிக்கப் பட்டிருந்த இடமும் தெரியாதவாறு அடியோடு மறைக்க முயல்வதோடு, கதா நாயகனுகிய வீரபாகுவையும் துப்பு துலக்க வந்த ராஜகேஸரியையும் கொல்லவும் ஏமாற்றவும் முயல்வதும், குற்றவாளி வேறு வேடந்தாங்கி நடிக்கும் சாமர்த்தியமும் வீரச் செயல்களும் வாசிப்போர் மனதுக்குப் பெரும் வியப்பையும் ஆனந்தத்தையும் தருவதோடு புத்தியை அதிகமாய் விசாலப்படுத்தும். இது 360 பக்கங்கள். விலை ரூ. 1-8.

சிற்றின்பவெற்றி:—இல்லற வாழ்வு வெற்றி பெறுவதற்கு இந்நூல் ஒரு சிறந்த கருவியாகும். (1) ஆணும் பெண்ணும் அபேதம் (2) மக்கட்பிறவியே மாண்புடைத்து (3) கற்புடைய மனைவியே பொற்புடையாள் (4) நன்மக்கட்பேறு. (5) நோயற்ற வாழ்வு (6) பதார்த்த குணமே யதார்த்த நலம் (7) சமைக்கும் திறமே அமைக்கும் சுவை. (9) தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது (10) காதற் சிறப்பே ஓதற்சிறப்பு எனப் பத்து அத்தியாயங்கள் அடங்கியுள்ளது. இல்லற வெற்றியடைய விரும்புவோரெல்லாம் இந்நூலை ஒரு முறையாவது படித்தே தீரவேண்டும். விலை. ரூ. 2-4.

மேலே குறிப்பிட்ட மூன்று நூல்களும், முத்தையா புக் டிப்போ, தபாற் பெட்டி 99, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதினல் கிடைக்கும்.




மாதரியக்கம்

## ஸ்ரீமதி. லதிகா போஸ் பேருரை.

ரங்கபுரம் மாதர் மகா நாட்டில் தலைமை வகித்த ஸ்ரீமதி லதிகாபோஸ் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்.

"அன்பார்ந்த சகோதரிகளே! இம்மகா நாட்டுக்குத் தலைமை வகிக்குமாறு என்னை வேண்டிக் கொண்டதற்கு மிகவும் நன்றி பாராட்டுகிறேன். இந்த உயரிய ஸ்தானம் வகிக்க எனக்குப் பிரத்தியேக யோக்கியதை எதுவுமில்லை யாயினும், இந்தியர் முன்னேற்றத்துக்காக உழைக்கும் ஒரு ஊழியன் என்ற நிலையில் நான் இன்று தலைமை வகிக்கவும் ஒப்புக் கொண்டேன்.

நாம் மிகவும் நெருக்கடியான ஒரு காலத்தில் வாழ்ந்து வருகிறோம். உலக முழுதும் புத்துயிர் பெற்று வருகிறது. சமய சமூக அரசியல் துறைகளில் உலக முழுதும் பிரதி தினமும் மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டு இருக்கின்றன. மனித வர்க்கத்தின் லக்ஷியங்களும் நாளுக்கு நாள் புத்துருப்பெற்று வருகின்றன.

### தொழிலாளர் இயக்கம்.

தொழிலாளர்களுக்குள் சுய மரியாதை உணர்ச்சி உதயமாகி விட்டது. முதலாளிகள் தொழிலாளிகளைக் கொள்ளையிட்டு வாழும் காலம் மலையேறிப் போய் விட்டது. முதலாளிகளின் நயவார்த்தைகளைக் கேட்டு, இனித் தொழில்ளர் திருப்தி யடைய மாட்டார்கள். முதலாளிகள் வழங்கும் பிச்சைக்கும் இனித் தொழிலாளர் கை நீட்ட மாட்டார்கள். தம் குறைகளை நீக்கும்படி இனித் தொழிலாளர்கள் முதலாளிகளிடம் இரந்து நிற்க மாட்டார்கள். உமது பிறப்புரிமையைப் பெறத் தொழிலாளர் உறுதி செய்து விட்டார்கள்; பெற்றே தீர்வார்கள். சுய மரியாதை யுணர்ச்சி தோன்றி சுதந்தரம் பெற முற்படுவோரை யாரால் தடுக்க முடியும்? ருஷ்யா தொழிலாளர்களின் கண்களைத் திறந்துவிட்டது. இனித் தொழிலாளர்களை ஒருவராலும் நசுக்க முடியாது.

### இளைஞர் இயக்கம்.

நாகரீகம் உதயமானது முதல் இளையோர் முதியோருக்கு அடங்கியிருக்கும்படி நிர்பந்தப் படுத்தப்பட்டு வருகிறார்கள். முதலில் குடும்பத் தலைவி தாயாக இருந்த காலத்தில் இளையோர் தாய்க்கு அடங்கி நடந்தனர். அப்பால் தந்தை குடும்பத் தலைவனான பொழுது இளையோர் தந்தைக்கு அடங்கி நடக்கத் தலைப் பட்டனர். பின்னர் கிராம வாழ்வு உருப்பெற்றதும், இளைஞர் கிராமத் தலைவருக்கு அடங்கி யிருக்கலாயினர், தற்போது தோன்றியிருக்கும் இளைஞர் இயக்கத்தின் நோக்கம், முற் கூறிய கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிவதாகும். இளைஞர் இயக்கம் இளைஞர் உணர்ச்சியையும், முதியோர் இயக்கம் முதியோர் உணர்ச்சியையும் குறிப்பிட்டு நிற்கின்றன. உயர்ந்த லக்ஷியங்களும், அதற்குரிய தியாகங்களும் அஞ்சா நெஞ்சத்துணிவும், பயனை எதிர்பாராது தொழிலாற்றும் சிறப்பும் குன்றா உற்சாகமும் இளைஞருக்கு உரியனவாகும். காலமும் இடமும் தேர்ந்து பயன் தூக்கித் தொழிலாற்றுவது முதியோர் இயல்பு. எல்லா இயக்கங்களையும் முயற்சிகளையும் அடக்கி மிதப்படுத்துவதே முதியோர் சால்பு. எனவே எக்காலத்தும் இரு திறத்தாருக்கும் போராட்டம் நிகழ்ந்து கொண்டே இருக்கும். முதியோர் எழுப்பும் தடைகளை வெல்ல இளைஞர் சதா தீவிர முயற்சி செய்து கொண்டே இருப்பர். ஆனல் முன்னேற்ற முண்டாவது இளை

ஞர் முயற்சியினாலேயே என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். புது கருத்துகளை அநுஷ்டானத்தில் கொண்டு வந்து பரிட்சை பார்க்க இளைஞர்களுக்கே மனத்துணிவு உண்டு. உலகத்தில் தோன்றியிருக்கும் சீர் திருத்தங்களுக்கெல்லாம் இந்த இளைஞர் உணர்ச்சியே காரணமாகும். எலிசபத்து மகாராணியார் காலத்தில் இளைஞர் முயற்சியினாலேயே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஸ்தாபனமாயிற்று. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடிக்கவும், ஆகாய விமானங்கள் தோன்றவும் காரணமாயிருந்ததும் இந்த இளைஞர் உணர்ச்சியே. புது சம்பிரதாயங்கள் கண்டு பிடித்து புது சமூகங்களை ஸ்தாபிப்பதே இளைஞர் இயக்கத்தின் லக்ஷியம். இத்தாலியாவில் பாஸிஸ்டு இயக்கமும், துருக்கியில் துருக்க இளைஞர் இயக்கமும், உலகை முழுதும் ஒரு நவ யுகத்தை உண்டுபண்ணி விட்டன. நமது இந்திய இளைஞர் இயக்கமும் சமூக அரசியல் துறைகளில் உழைத்து அரிய பெரிய சீர் திருத்தங்கள் செய்யுமென்று நம்புகிறேன்.

## மாதர் இயக்கம்.

தொழிலாளர், இளைஞர் இயக்கங்களைப் போல், மாதர் இயக்கமும் சுயமரியாதை உணர்ச்சியால் தோன்றியதாகும். ஆதி காலத்தில் புருஷர்கள் போர்த் தொழிலில் ஈடுபட நேர்ந்த பொழுது, குடும்ப விஷயங்களைக் கவனிக்கும் பொறுப்புப் பெண்களுக்கு ஆயிற்று. எனவே பெண்களே கிரக நாயகிகளாக இருந்து வந்தனர். ஆனால் உலக முழுதும் சமாதானம் நிலைபெற்றிருக்கும் இக்காலத்தில் பெண்கள் வீட்டுக்குள் மட்டும் அடைபட்டுக் கிடக்கவேண்டிய அவசியமே இல்லை. பழைய குடும்ப வாழ்க்கைகள் குலைந்து பெற்றோர் பொறுப்பைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் பெற்றிருக்கும் இக்காலத்தில் பெண்களுக்கு வீட்டில் அதிக வேலையில்லை. பரஸ்பர உதவியால் ஒவ்வொரு பிரஜையும் வாழ விரும்பும் இக் காலத்தில் குடும்பக் கட்டுப்பாடு சிதறுண்டு போய் விட்டது. சமூக அமைப்பில் உண்டாயிருக்கும் இந்த மாற்றம் ஆடவர் பெண்டிர் வாழ்க்கையையும் பாதிக்காமல் போகாது. மனிதர்கள் காலத்துக் கேற்றபடி தமது வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டார்கள். பெண்கள் மட்டும் மாமூல் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். புருஷன் நாகரீக வாழ்க்கையும் பெண்கள் அநாகரீக வாழ்க்கையும் நடத்துவது உதை க்ஷேமத்துக்குப் பொருந்தாது. எனவே பெண்களும் காலப் போக்குக் கேற்றபடி நாகரீகம் பெறவேண்டும். அவ்வாறு நாகரீகம் பெறுவதே தற்கால மாதர் இயக்கங்களின் தலைசிறந்த நோக்கம். எனினும் சுயநலமுடைய மனிதன் மாதர் இயக்கத்துக்குத் தடையுண்டு பண்ணுகிறான். பெண்கள் உரிமைகளை முழுமனதோடு ஒப்புக் கொள்கின்றானில்லை. ஆயினும் பெண்கள் மனந்தளராது முயற்சி செய்வார்களாக.

## சமூக ஊழியமும் தேசீயமும்.

சமூக சேவை செய்வதுதான் மாதர் கடமை என்றும் அரசியலில் மாதர்கள் பிரவேசிக்கக் கூடாதென்றும் சிலர் கூறுகிறார்கள். இது மிகவும் தப்பான ஒரு அபிப்பிராய மாகும். தேசீய அடிப்படையில்லாத சமூக ஊழியம் பயன்படவே செய்யாது. சர்க்கார் ஆதாவில் சமூக ஊழியம் செய்வதும் அடிமை லட்சணமாகும். ஆசியாக் காரரையும், ஆபிரிக்கரையும் நாகரீகப்படுத்த வெள்ளைப் பாதிரிமார் வந்ததின் பயனை நாம் அறியோமா? முதலில் பாதிரிகள் வந்தார்கள்; பின்னர் வியாபாரிகள் வந்தனர். கடைசியில் யுத்தக் கப்பல்கள் வந்தன. நாமும் அடிமைகளானோம். ஆகவே சர்க்கார் உதவி பெற்று சமூக ஊழியம் நாம் செய்யவே கூடாது. சமூக ஊழிய ஸ்தாபனங்கள் எல்லாம் தேசீய ஸ்தாபனங்களாகவே இருக்க வேண்டும். அதனால் நமக்குப் பல தடைகளும் கஷ்டங்களும் ஏற்படலாம். தேசீய உழைப்பில் ஈடுபடுவோர் பாடெல்லாம் இவ்விதமாகவே இருக்கும். இந்தக் கஷ்டங்களுக்குப் பயந்து நாம் தேசீய விஷயங்களைக் கை நழுவ விடக் கூடாது.

சமூகச் சீர்திருத்தம் ஏற்பட்ட பிறகே அரசியல் விடுதலை ஏற்படும். சமூகம் சீர் குலைந்து இருக்கையில் அரசியலில் முன்னேற முயல்வது வீண் பிரயத்தனமாகும். ஆகவே சமூகக் கேடுகளை நாம் முதன் முதலாக ஒழிக்க முற்படவேண்டும். பெண்களே இந்த ஊழியம் செய்யத் தகுதி யுடையவர்கள். இப்பொழுது நாம் குருட்டு நம்பிக்கைகளுக் கெல்லாம் உறைவிடமாக இருந்து வருகிறோம். அந் நிலைமை மாறவேண்டும். உந்த தேசீய



விஷயங்களுக்கு நாம் இருப்பிடமாக வேண்டும். பன்னூற்றுண்டுகாலமாக அடிமைப்படுகுழியில் விழுந்து தவிக்கும் தீண்டப்படாத சகோதரர்களை நீங்களே உங்களது அன்பினால் கரையேற்ற முற்பட வேண்டும். நமது தாயாகிய பூமிதேவியைப் பாருங்கள். நம்மால் இகழப்படும் தீண்டப்படாதாருக் கெல்லாம் அவள் அன்பு கூர்ந்து இட மளிக்கிறாள்; உண வளிக்கிறாள்; உடையளிக்கிறாள். தாய்மாரான நீங்கள் தீண்டப்படாத மக்களை கைவிடலாமா? வெள்ளையர் செய்யும் கொடுமைகளைக் கண்டிக்கிறீர்கள்; ஆனால் நாம் தீண்டப்படாதாருக்குச் செய்யும் கொடுமைகளை நீங்கள் கவனிக்கிறீர்களா? ஹிந்துக்களாகிய நாம் ஆத்மீக ஞானத்தில் முற்போக் கடைந்தவர்கள் என்று பெருமை பாராட்டுகிறோம்; ஆனால் தீண்டாமை அண்டாமை முதலிய, தீய வழக்கங்களை ஒழிக்க முயலாமையால் நாம் நமது மதத்தின் பெருமையை அழித்து வருவதை நாம் உணர்வதில்லை. இந்தத் தீண்டாமை யொழிந்தாலன்றி இந்தியா சுயராஜ்யம் பெறுதென்பதை நீங்கள் மனதில் பதிய வையுங்கள்.

## அரசியலும் மாதரும்.

அரசியல் ஊழியத்தில் மாதர்கள் ஈடுபட வேண்டுமா என்பதும் ஒரு வாத விஷயமாகவே இருந்து வருகிறது. சமூக ஊழியத்தில் பெண்கள் ஈடுபடலாம் என்று கூறுவோர் அரசியல் ஊழியத்தில் மாதர்களுக்கு இடமளிக்கத் தயங்குகிறார்கள். அரசியல் ஊழியத்துக்கு மாதர்கள் தகுதியுடையவர்களா அல்லவா என்பதைப்பற்றி நான் இப்போது விவாதிக்கப் போவதில்லை. இந்தியாவைப் பொறுத்த மட்டிலும் இந்த விவாதத்துக்கு இடமே இல்லை. ஏனெனில் இந்தியாவிலே தேசீய ஊழியத்தில் அரசியல் ஊழியம் அபேதமாக இணைக்கப் பட்டிருக்கிறது. புருஷர்களும் பெண்களும் சமமாக விழிப்புப் பெற்றால் மட்டுமே தேசீய விழிப்புப் பூரணமாகும். தேசீயமும் தேசத் தொண்டும் புருஷர்களுக்குத்தான் சொந்தமென்று கூற யார்தான் முன் வருவார்கள். பெண்களும் புருஷர்களும் ஒத்துழைத்தாலன்றி தேசீய விடுதலை ஏற்படாது. ஆடவர், பெண்டிர், சிறவர் சிறுமியர் முதலிய அனைவரும் தேசீய மய மாகும் போது இந்தியா சுதந்தர இந்தியா ஆவது உறுதி! உறுதி!! உறுதி!!!.

## மகாத்மா காந்தி

---

பெயரிட்டழைக்க முடியாதவரும், அறியக் கூடாதவருமான கடவுளைக் கோடிக் கணக்கான மக்கள் அழைத்து வரும் பல பெயர்களில் தரித்திர நாராயணன் என்பதும் ஒன்று. ஏழைகளின் கடவுள், ஏழைகளின் உள்ளத்திலே உறையும் கடவுள் என்பது இதன் பொருள். தேசபந்து தாஸ் தான் இம்மொழியை மிகவும் புனிதமான ஓர் வேளையில் உபயோகித்தார். என்னுடைய அனுபவத்தினின்றும் நானே ஏற்படுத்திக் கொண்ட ஒரு மொழி அல்ல இது.

# இந்தியப் பத்திரிகைகள்

## சுதேச மன்னர்கள்.

“தாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்தது” என்ற கதையாக மன்னர்கள் பாடு முடிந்தது. பிரிட்டிஷ் சர்க்காருடன் சம அந்தஸ்து உண்டென்றும், ஆகவே இந்தியாவுக்கு பொறுப்பாட்சி ஏற்பட்டுவிட்டால் தங்களை இந்திய சர்க்காருக்கு உட்படுத்த முடியாதென்றும், பொறுப்பாட்சி ஏற்பட்ட பின்பு தங்கள் சம்பந்தத்தை நேராக பிரிட்டிஷ் சர்க்காருடனேயே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், இந்திய மன்னர்கள் விண்ணப்பித்துக் கொண்டார்கள்: உடனே பட்லர் கமிட்டி என்ற கமிட்டி நியமிக்கப்பட்டது! மன்னர்கள் லட்சக் கணக்கான செலவு செய்து கொண்டு, ஏராளமான பணம் கொடுத்து சர். பெஸ்லிஸ் சாட்டை தங்களுக்கு வக்கீலாக ஏற்படுத்திக் கொண்டு சீமைக்கு க்ஷேத்திர யாத்திரை புறப்பட்டார்கள். அப்பொழுதே இந்தியத் தலைவர்கள் எச்சரிக்கை செய்தார்கள். ஆனால் மன்னர்கள் கவனிக்கவில்லை. பிரிட்டிஷ் சர்க்காருக்கு பிரதிநிதியாக இந்திய சர்க்கார் மன்னர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதாகவும், ஆகவே இந்திய சர்க்காரை இந்தியருக்குப் பொறுப்பாய் மாற்றுவதானால் பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் கடமையில் தவறியவர்கள் ஆவார்களென்றும், அப்படி மாற்றப்படும் இந்திய சர்க்காருக்கு தாங்கள் அடங்கி யிருக்க வேண்டிய அவசியம் கிடையாதென்றும் மன்னர்களும், அவர்களுடைய வக்கீல்களும் வாதித்தார்கள். இதனால் இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுக்கக் கூடாது; அப்படிக் கொடுத்தால் மன்னர்களைக் காப்பாற்ற பிரிட்டிஷ் சர்க்கார் தனியாக இந்தியாவில் ராணுவத்தையோ அதிகாரிகளையோ ஏற்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். இந்த இரண்டும் சாத்தியமில்லை. மேலும் பிரிட்டிஷ் சர்க்காருடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளுவோமென்றும், தங்கள் சொந்த ஜாதியாராகிய இந்தியருடைய தலைமை சர்க்காருடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள மாட்டோமென்றும் சொல்லுவது சுய மதிப்புக்கு பங்கமாகும். அப்படியிருந்தும் மன்னர்கள் விடவில்லை. எல்லாம் முடிந்தபின்பு கடைசி சமயத்தில், பிரிட்டிஷ் சர்க்காருடன் தாங்கள் நேரில் பேச அந்தஸ்து இருக்கும்போது, எதற்காக பட்லர் கமிட்டியுடன் பேசவேண்டுமென்று சொல்லிவிட்டு சும்மா யிருந்து விட்டார்கள். இந்த புத்தி கடைசி சமயத்தில்தான் தோன்றியது. இத்தனை குட்டிக் கரணங்கள் போடுவதற்குக் காரணமாயிருந்த பட்லர் கமிட்டியின் அறிக்கை இன்று வெளியாகிவிட்டது. அதன் சாராம்சத்தைப் படித்துப் பார்த்தால் விலங்கைவிட்டு குட்டையில் மாட்டிக்கொண்ட கதையாக மன்னர்கள் பாடு முடிந்ததைக் காணலாம்.

பிரிட்டிஷ் சர்க்காருடன் மன்னர்களுக்கு சம அந்தஸ்து என்ற பேச்சு அடியோடு போய் விட்டது. பிரிட்டிஷ் சர்க்காரே பெரிய அதிகாரிகள் என்று பட்லர் கமிட்டியார் முடிவு கூறி விட்டார்கள். இந்திய சர்க்கார் ஜனங்கள் கைக்கு மாறுவதா யிருந்தால், மன்னர்களைப் பாதுகாக்கும் பொறுப்பை ஒரு நாளும் அதன் கையில் கொடுக்கக் கூடாதாம். இதற்கு அவர்கள் ஒரு யுக்தி கண்டு பிடித்தார்கள். அதாவது வைசிராய்க்கு ராஜப் பிரதிநிதி என்ற பதவியும், கவர்னர் ஜனரல் என்ற பதவியும் உண்டு. இதில் கவர்னர் ஜெனரல் என்ற தோரணையில் நிர்வாக சபையுடன் கூடிய வைசிராய் கையில் கொடுக்கக் கூடாதென்றும், ராஜப் பிரதிநிதி என்ற தோரணையில் கொடுக்கவேண்டுமென்றும் சிபார்சு செய்திருக்கிறது. அதாவது நிர்வாக சபையைக் கலக்காமல் சுயேச்சாதிகாரமாய் ராஜப் பிரதிநிதியே முடிவுசெய்ய வேண்டியது என்று சொல்லிவிட்டது. இதைக் கண்டு மன்னர்கள் சிரிப்பார்களா அழுவார்களா என்பது நமக்குத் தெரியாது. இந்திய சர்க்காருக்கும், சமஸ்தானங் களுக்கும் சில்லரை விவகாரங்கள் வந்தால் கமிட்டிகள் நியமித்து முடிவுசெய்ய வேண்டுமென்றும், வெளிநாட்டு விஷயங்களைப்பற்றி மன்னர்களைக் கலந்த பின்பே முடிவுசெய்ய வேண்டு மென்றும், பாதுகாப்பு விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்



ருக்கே முழு அதிகாரமும் உண்டென்றும் சொல்லப் பட்டிருக்கிறது. இவை யெல்லாம் இனிமையாய்த்தா னிருக்கின்றன. கமிட்டிகளும், பஞ்சாயத்துகளும் கேட்க இனிமையா யிருக்கின்றன. ஆனால் முக்கியமான விஷயமாகிய “உள்நாட்டு விவகாரத்தில் வைசிராய் தலையிடுதலை”ப் பற்றி என்ன? அதை மட்டும் பட்லர் கமிட்டி விட்டுக்கொடுக்க வில்லை. எது எப்படி இருந்தபோதிலும் மேல் அதிகாரம் பிரிட்டிஷ் சர்க்காருக்கே உண்டென்றும், உள்நாட்டு விவகாரத்தில் ராஜப் பிரதிநிதிக்கு எப்பொழுதும் அதிகாரம் உண்டென்றும், அதிகாரம் இருந்தே தீரவேண்டுமென்றும், அதை எப்பொழுது எதற்காக உபயோகிக்க வேண்டுமென்பது ராஜப் பிரதிநிதியின் இஷ்டத்தைப் பொறுத்ததென்றும், இனியும் அவர் இஷ்டத்திற்கே விட்டுவிட வேண்டுமென்றும் பட்லர் கமிட்டி சொல்லுகிறது. ஆகவே மன்னர் சபையோ, ஒப்பந்தங்களோ லட்சியமில்லை. வைசிராய் இஷ்டப்படி எந்த ராஜாவையும் இறக்கவோ, ஏற்றவோ முடியும். இதற்கு மன்னர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

—தமிழ் நாடு

## ஸிலோன் அரசியல் திருத்தம்.

டோனமோர் கமிஷன் சிபார்சுகளின் முக்கியாம்சங்களை ஸிலோன் சட்டசபை நிராகரித்திருந்தும் அந்தக் கமிஷனின் திட்டத்தையே ஸிலோன் ஒப்புக் கொள்ளும்படி நிர்ப்பந்திப்பதென்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் முடிவு செய்திருக்கிறார்களெனத் தோன்றுகிறது. ஸிலோன் சட்டசபை பொறுப்பாட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று கோருகிறபடி செய்ய முடியாதென்று லார்டு பிளேமவுத் சொல்லி விட்டார். டோனமோர் கமிஷனுடைய திட்டத்தை ஒப்புக்கொள்ள முடியாதெனில் வேறு வழியைக் கண்டுபிடிக்க வேண்டி வருமென்றும், அந்த ஏற்பாடானது ஜவாப்தாரியான ஆட்சியை ஏற்படுத்துவதாக இருக்கமுடியாது என்ற அஸ்திவாரத்தின் மேலேயே வேறு விசாரணையைச் செய்விக்க முடியுமென்றும் அவர் சொல்லிவிட்டார். அதாவது, “உங்களுக்கு ஜவாப்தாரியான ஆட்சி கிடையாது; டோனமோர் கமிஷன் சிபார்சுகளை ஒப்புக் கொள்ளுங்கள்; அவ்விதம் செய்வதற்கு நீங்கள் இஷ்டப்படாவிட்டால் வேறு வழியைக் கண்டு பிடிக்கிறோம்” என்று அவர் சொல்லி விட்டார். டோனமோர் கமிஷன் சிபார்சுகளை ஒப்புக்கொள்ளா விட்டால் அந்த அபிவிருத்தி கூடச் சிறிது காலம் வரையில் இல்லாமற் போய்விடுமென்று பயமுறுத்துவதன் மூலமாக ஸிலோனியர் அந்த திட்டத்தை ஒப்புக் கொள்ளும்படி செய்துவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இது ஸிலோனியரை அவமதிப்பதாக இருக்கிறது. அவர்கள் சட்டசபையில் செய்த தீர்மானங்கள் மனப் பூர்வமானவைகளா யிருந்தால் பூரண ஜவாப்தாரியான ஆட்சிக்குக் குறைந்த எதையும் அவர்கள் ஒப்புக் கொள்ளுவதற்கில்லை. பூரண ஜவாப்தாரியான ஆட்சியை ஏற்படுத்த பிரிட்டிஷார் தயாராக இருக்கவில்லை. ஆகவே அவர்கள் ஜவாப்தாரியான ஆட்சியை ஏற்படுத்துவதற்குச் சம்மதிக்கும்படி நிர்ப்பந்திக்கக் கூடிய கிளர்ச்சியை ஸீலோனியர் நடத்தினாலன்றி, ஸிலோனுக்கு சமீப காலத்தில் கதிமோக்ஷத்திற்கு இடமிருப்பதாகத் தோன்றவில்லை. (சுதேசமித்திரன்)

## சைவப் பாதிரிமார்.

பாதிரிமார் என்றவுடன் பலருக்குப் பதிரென்று பயம் ஏற்படும் என்பதை அறிவோம். சைவப் பாதிரிகள் வேண்டும் என்பது எமது நோக்கமன்று. வேண்டாமென்று விளக்குவதற்காகவே இவ் வியாசம் எழுதுகின்றோம். தற்காலம் தமிழ்நாட்டில் சைவ சமய சம்பந்தமாக இருதிறப்பட்ட அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. சிலர் சைவசமயம் சகல நன்மையான முன்னேற்றங்களுக்கும் தடையா யிருப்பதால் அதை அறவே அகற்றிவிட வேண்டும் என்று கூறுகின்றனர். சைவ சமயத்தில் தவறுகள் காணப்படுவது உண்மையே. ஆனால் அத் தவறுகளை நீக்க முற்படாது, அத் தவறுகள் காரணமாக, ஆதிகால முதல் இந்நாள்வரை இருந்துவரும் சைவ சமயத்தை தள்ளிவிட வேண்டுமென்று கூறுவது தகாது என்பது மற்றோர் சாரார் அபிப்பிராயம். இவ் விரண்டாவது வகுப்பினைச் சேர்ந்தவர் “லோகோபகாரி” பத்திராதிபர். சைவசமயத்தைத் தள்ளிவிடாது சீர்திருத்தவேண்டுமென்பதே அவர் நோக்கம். ஆனால் அவர் அது சம்பந்தமாய்க் கூறுவது தான் விநோதமா யிருக்கின்றது. நாம் இங்கு அவர் கூற்றைக் குறித்து எழுத விரும்பியதற்குக் காரணம் அதன் விநோதத் தன்மை மட்டுமன்று. அவர் யோசனைப்படி நடந்தால் நாட்டின் நலத்திற்கு விரோதமாகப்

பல விபரீத விளைவுகளும் காணலாகும் என்பதும் காரணமாகும். "லோகோபகாரி" உரைக்கும் யோசனையாவது :—

"சைவ சமயத்தின் உண்மைகளைத் தற்காலத்திற் கேற்ற முறையில் நாட்டு மக்களுக்கும் ஞாலத்து மக்களுக்கும் பல வழிகளில் விளக்கும் பெரு முயற்சி தோன்றுமாயின் நாட்டிலே சைவம் புத்துயிர் பெறுவதுடன் வையமெல்லாம் சைவத்திலே சேருமென்ற உறுதியை நாம் வற்புறுத்துகிறோம். இம் முயற்சியில் நாம் கிறிஸ்தவப் பாதிரிகளின் வழிகளைப் பெரிதும் பின்பற்ற வேண்டும். கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புமாறு ஏற்பட்டுள்ள சங்கங்கள் போலத் தமிழ் நாட்டிலும் ஏற்பட வேண்டும்."

"லோகோபகாரி" கூறுவதன் சாரமென்ன ? சைவ சமயத்தை உலகமெங்கும் பரப்பவேண்டும் : உலகத்தார் அனைவரையும் சைவ சமயத்தில் கொண்டுவந்து சேர்க்க வேண்டும் ; இவ்விரண்டும் இயற்றுதற் கேற்ற வழி கிறிஸ்தவப் பாதிரிகள் கிறிஸ்தவ சங்கங்கள் இரண்டும் செய்வது போல் செய்வதே. இந்த யோசனையைச் சிறிது சிந்தித்தல் அவசியம்.

மனித வாழ்க்கையின் மகோன்னதமான லட்சியத்தை அடைவதற்குச் சமய ஞானமும் சமய ஒழுக்கமும் அத்யாவசியமே. ஆனால் தமிழ் நாட்டில் காணப்படுவதெல்லாம் சைவ சமயத் தத்துவ ஆராய்ச்சித் தர்க்கவாதச் சண்டைகளும், சைவ சமயச் சடங்குகளின் தவறான அநுஷ்டானமும், சடங்குகளே சமய சாரம் என்னும் தப்பான கொள்கையும், அதனால் விளைந்துள்ள அறவாழ்க்கைக் குறையுமே என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகையால் நாட்டின் நலத்தை நாட விரும்புவோர், சைவ சமயத் தத்துவ ஆராய்ச்சியில் ஆழ்ந்துவிடாது, சடங்குகளை விலக்கி, உண்மைச் சைவ சமய சாரத்தை அறிவுறுத்தவும் ஜனங்களை ஒழுக்க நெறியில் நிற்கச் செய்யவும் முயலுதல் கடன்.

தமிழ் நாட்டிலுள்ள சைவ சமயிகள் சமய வாழ்வைச் சீர் திருத்தி அவர்களைச் சன்மார்க்கிகளாகச் செய்வதை விட்டு விட்டு, சகல தேசங்களிலுள்ள இதர சமயிகளை எல்லாம் சைவ சமயத்திற்குக் கொண்டு வரவும் அதற்காக கிறிஸ்தவர் முறைகளைக் கையாளவும் முற்படுதல் முற்றிலும் தவறு,

நாம் மட்டில் சைவ சமயத்தை அனுஷ்டித்தால் போதாதோ ? பிற சமயிகளும் நமது சமயத்திற்குக் கொண்டு வரவும் அதற்காகக் கிறிஸ்தவர் முறைகளைக் கையாளவும் முற்படுதல் முற்றிலும் தவறு.

நாம் மட்டும் சைவ சமயத்தை அநுஷ்டித்தால் போதாதோ ? பிறசமயிகளும் நமது சமயத்திற்கு வரவேண்டிய அவசியமென்ன ? சைவ சமயத்தால் கிடைக்கும் சச்சிதானந்த வாழ்வு சைவசமயம் தவிர்த்த ஏனைய சமயங்களால் ஏற்படாதோ ?

ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல இருமுச் சமயமும்

என்ற பெரியார் வாக்குப் பிழையோ ?

எல்லோரும் சைவ சமயிகளாகவேண்டுமென்பதற்கு சமயங்களுள் ஏற்றத் தாழ்வு இயம்பும் மனப் பான்மையே காரணம், "லோகோபகாரி" போன்ற சைவ சமயிகள் 'சைவ சமயமே சமயம்' என்றும், வேறு சமயஞ் செய்தோர்கள் எல்லோரும் 'விரிவிலா அறிவினர்கள் - எரிவினாற் சொன்னார்' என்றும் இடைவிடாது கூறி வருகின்றனர். சைவப் பெரியார் தனிக் கூட்டமும் சைவ சமயம் பிறசமயங்களைச் சோபான முறையிலேயே தழுவும் என்று தீர்மானித் துள்ளது. பிற சமயங்கள் எல்லாம் உண்மையே; ஆனால் அவைகள் தாழ்ந்தவை, அவற்றை எல்லாம் படிக்கிரம முறையில் உள்ளடக்கி யுள்ள சைவ சமயமே உயர்ந்த உண்மை என்பது அப் பெரியோர் அபிப்பிராயம்.

தம் சமயமே தலை சிறந்தது, பிறசமயங்கள் எல்லாம் தாழ்ந்தவை என்னும் இத் தவறான கொள்கை சைவ சமயிகளிடம் மட்டுமே காணப்படுவதில்லை. உலகிலுள்ள ஒவ்வொரு சமயத்தைச் சார்ந்தாரிடமும் காணப்படுவதேயாகும். அதனாலேயே உலகில் ஆதிமுதல் இன்றுவரை சமத்துவமும் சகோதரத்துவமும் தழைக்காது சண்டையும் சச்சரவுகளுமே பெருகி ஜனங்களைக் கெடுத்து நிற்கின்றன. இப்பொழுது சிலகாலமாக அறிஞர் சிலர் இச் சமய ஏற்றத்தாழ்வுக் கொள்கையை இல்லாது போக்க அரும்பாடுபட்டு வருகின்றனர். சமயங்கள் எல்லாம் சம அந்தஸ் துடையன என்பதையும், சமயங்களின் சாரம் ஒன்றே என்பதையும், ஒவ்வொரு சமயத்தாரும் பிற சமயங்களின் சாரத்தை அறிந்து கொள்ளுதல் அவசியம் என்பதையும் வற்புறுத்துவதற்காகச் சமீபத்தில் பம்பாயில் சமூக சீர்திருத்த விஷயத்தில் தலை சிறந்த தலைவராகிய ஸ்ரீமாந். கே. நடராஜன் அவர்கள் தலைமையில் நடந்த சகலசமய சமத்துவ மகாநாட்டை மறவற்க.



எல்லாச் சமயங்களும் ஒரே படித்தான உயர்வுடையனவாயிருத்தலாலேயே ஒரு மதத்தினர் பிற மதத்தினரைத் தங்கள் மதத்திற்கு வரும்படி அழைத்தல் கூடாது என்று மாகாத்மா காந்தியடிகள் கூறுகின்றனர். பிற சமயிகளுக்கு நம் சமய உண்மைகளை எடுத்துரைக்கலாம். அவரை நம் சமயத்திற்கு வந்துவிடும்படி கூறமட்டும் செய்யலாகாது. பிறர்க்கு உரைக்கும் விஷயத்திலும், அடிகள் அமெரிக்கப் பிரபல அறிஞர் டாக்டர் மாட் என்பவரிடம் கூறிய மொழிகளை மறவாது பொன்னே போல் போற்றுதல் அவசியம் மகாத்மாஜியின் வாய்மொழியாவன:—

"சமய சம்பந்தமான உயர்ந்த அனுபவ உண்மைகளைப் பிறர்குரைத்தல் ஒரு பொழுதும் முடியாத காரியம். பிறர்க்குரைக்கவேண்டிய அவசியமும் கிடையாது. அவை தாமாகவே சென்று பிறர்க்குரைத்துக் கொள்ளும். பிறர்க்குரைக்கப் பெரியோர் கையாண்ட வழி உபதேசம் செய்தல் அன்று ; உண்மை வாழ்க்கை ஒழுக்கமே யாகும்.,'

ஆகையால் சைவப் பெரியார்கள் தங்கள் சமயத்தைத் தாணியெங்கும் பரப்ப முயலுமுன், சைவ சமயிகள் எல்லோரும் உண்மைச் சமய வாழ்வு வாழும்படி செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதற்குக் கிறிஸ்தவ சங்கங்களும் கிறிஸ்தவப் பாதிரிகளும் நமக்கு வழிகாட்டிகள் ஆகார்.

கிறிஸ்தவ சங்கங்கள் தங்கள் சமய நூல்களை இலவசமாகவும், எளிய விலைக்கும் விற்று நாடெங்கும் பரப்பி வருவது உண்மையே. ஆனால் சமய நூல்கள் பரவியதை வைத்துச் சமயமும் பரவி விட்டது என்று நினைப்பது தவறு. பரப்பவேண்டியது சமய நூல்களா, அல்லது சமய அறிவும் ஒழுக்கமுமா ? கிறிஸ்தவ நூல்கள்தான் பரவி யிருக்கின்றன. கிறிஸ்தவ சமய அறிவும் ஒழுக்கமும் கிஞ்சித்தேனும் பரவி விட்டதாக யாரும் துணிந்து கூற முடியாது.

தவிர, சமய நூல்களில் தவறுகளும், தற்காலத்திற்குப் பொருந்தாத கொள்கைகளும் காணப்படுவது சகஜம். ஆகையால் அந் நூல்களை அப்படியே அச்சிட்டு விற்க ஏற்பாடு செய்வதோடு, அவைகளின் தவறுகளைக் காட்டியும், உண்மைகளை எடுத்துரைத்தும் வேறு நூல்களை அச்சிட்டுக் கொடுத்தல் அவசியம்.

கிறிஸ்தவப் பாதிரிகளைப் போல் சைவப் பாதிரிகளும் தோன்றவேண்டும் என்று கூறுகிறார் "லோகோபகாரி"ப் பத்திராதிபர். அத் தோற்றம் அவசியமா ? கிறிஸ்தவப் பாதிரிகளால் நன்மை ஏற்படுவதுண்டு; ஆனால் நன்மையை விடத் தீமையே அதிகம் என்பது அறிஞர் கருத்து. அவர்களில் சிலர் பிற சமயிகளைத் தங்கள் சமயத்திற்கு இழுப்பதற்குக் கையாளும் முறைகள் எவ்வளவு ஈனமானவை என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. பாதிரிகள் நியமித்து, பிற சமயிகளைத் தம் சமயத்தில் சேர்த்தல் வேண்டும் என்று தீர்மானித்து, காரியம் செய்ய ஆரம்பித்து விட்டால், மேற்கூறிய கேவலமான முறைகள் கையாளப்படும் என்பது நிச்சயம். அப்பொழுது ஆச்சரியப் படுவதற் கொன்று மில்லை.

ஆகையால் நாம் செய்யவேண்டிய தென்ன ?

(1) ஜனங்களுக்குச் சைவசமய உண்மைகளை விளக்கி உரைத்தல் வேண்டும். சமயம் வேறு, சமய தத்துவங்களும் சடங்குகளும் வேறு என்னும் உண்மையை வற்புறுத்தல் வேண்டும். உண்மைச் சமய வாழ்விற்கு ஒழுக்கமே பிரதானம் ; தத்துவ ஆராய்ச்சியும் சடங்குகளும் அனுஷ்டானமும் அனவசியம் என்பதை ஜனங்கள் உள்ளத்தில் உறைய வைத்தல் வேண்டும்


(2) சமயங்கள் எல்லாம் உண்மையே. அவைகள் எல்லாம் சம அந்தஸ்துடையன ; அவைகளுக்குள் உயர்வு தாழ்வு கிடையா என்னும் எண்ணத்தைப் பரவச் செய்தல் வேண்டும்.

(3) அவ் வெண்ணம் வேரூன்றுவதற்காகத் தம் சமயத்தை அறிவது போலவே பிற சமய சாரத்தையும் அறியும்படி செய்தல் வேண்டும்.

(4) சமய சாரம் ஒழுக்கம் என்று அறிந்து கொண்டால் போதாது. ஒழுக்கத்திற்கு அஸ்திவாரம் பிறர் நலம் தேடுதலாகையால், பிறர் நலம் தேடுதற் கேற்ற சங்கங்கள் காணல் வேண்டும்.

இங்ஙனம் பொதுநலம் தேடும் சன்மார்க்க சமூக ஊழிய சங்கங்கள் ஏற்படுத்தி எல்லோரும் சகோதரர்கள் என்னும் அத்வைதத்தைக் கைக்கொண்டு உழைத்தால் சைவ சமயம் வெகு சீக்கிரத்தில் தழைத்தோங்கி விடும் என்பதில் சந்தேகமில்லை.

(ஆனந்தபோதினி—வாரப்பதிப்பு.)




## கிழக்கு ஆப்பிரிக்க இந்தியர்.

### காங்கிரஸ் கூட்டம்.

*தலைவர் பிரசங்கம்*

கிழக்கு ஆப்பிரிக்க இந்தியர் தேசீய காங்கிரஸ் கூட்டம் மொம்போசாவில் பண்டித ஹிருதயநாத் குன்சுரு தலைமையின்கீழ் இம்மாதம் 13-ந் தேதி நடைபெற்றது.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ. எ. பி. பட்டேல் தலைவருக்கு நன்றி கூறி தெரிவித்ததாவது :—

### ஹில்டன் யங் யாதாஸ்து.

இந்தச் சந்தர்ப்பத்தில இந்தியர் நலவுரிமையைப்பற்றி ஹில்டன் யங் கமிஷனர் செய்த சிபார்சைப்பற்றி சிறிது ஆராய வேண்டியது அவசியமே யாகும். ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர் விஷயமாய் சர்க்கார் செய்த சிபார்சுகளில் ஹில்டன் யங் யாதாஸ்து ஒரு வகையில் மேன்மையானதெனக் கூறலாம். ஆனால் சர்க்கார் அதன் சிபார்சுகளின்படி நடப்பார்களாவென்பதே கேள்வி. அவ்வறிக்கையில் இந்தியருக்கு சம ஓட்டுரிமைக் கொடுத்த போதிலும், வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஆதரிக்கிறார்கள். வகுப்புவாரி பிரதிநிதித்துவம் எவ்வித கெடுதியை உண்டுபண்ணக் கூடுமென்பதைப் பற்றிக்கூறவேண்டியதில்லை. அதை சிபார்சு செய்யாம லிருந்திருந்தால் நலமா யிருந்திருக்கும். இலங்கை சென்ற டொனமூர் கமிஷன யாவருக்கும் சம பிரதிநிதித்துவமும் சம வாக்குரிமையுங் கொடுக்க சிபார்சு செய்திருக்கிறார்கள். கேப் காலனியில் வகுப்புவாரி பிரதிநிதித்வமில்லை. ஆதலால் அப்பிரதேசத்தில் சுமார் 14,000 ஆப்பிரிக்கர் சம உரிமை பெற்று சந்தோஷமாக வாழ்ந்து வருகிறார்கள். இங்குள்ள இந்தியர்களுக்கோ உரிமை யாதும் கிடையாது. இந்தியரின் அவ்வித உரிமையை நசுக்கக் கூடிய சட்டங்களை நாம் சதா எதிர்த்துவந்தும், அவை நம்மை விட்டு ஒழிந்தபாடில்லை. நிலத்தின் மீதும், இந்தியத் தொழிலாளர் மீதுமிருக்கும் சட்டங்களை தற்போதிருப்பவைகளில் மகா கொடுமையானதாயிருக்கின்றன.

### சர். சாமுவேல் வில்சன் வருகை.

இச் சமயத்தில் இங்கு சர். சாமுவேல் வில்சன் அனுப்பப்பட்டிருப்பது விந்தையாகத் தெரிகிறது. அவர் வருகை எனக்கு சிறிது அச்சத்தைக் கொடுக்கிறது. பிரிட்டிஷார் அவரை இச் சந்தர்ப்பத்தில் இங்கு என் அனுப்பி வைத்தார்களென்பது விளங்கவில்லை. ஹில்ட்டன்-யங் யதாஸ்து வெள்ளையருக்குப் பிடிக்கவில்லை. அவ் விஷயமாய் ஏதேனும் விஷமஞ் செய்யப் புறப்பட்டு வந்திருக்கிறாரா? ஆனால் அவர் அவ்வித விஷமத் தனமான காரியத்தில் பிரவேசிக்க மாட்டாரென நம்புகிறேன். எனினும், எதற்கும் தயாராகவே இருக்க வேண்டும். நமது தாய் நாட்டின் உதவியை நாம் சதா எதிர்பார்த்திருக்க வேண்டியிருக்கிறது.

### நிலச் சட்டம்.

இங்குள்ள செழித்த நிலங்களை வெள்ளையர் கைப்பற்றுவதும், அதில் இந்தியருக்கு உ



யில்லாம லிருப்பதும் மகா கொடுமை யாகும். இச் சட்டம் நீதியற்றதென ஹில்ட்டன் யங் யாதாஸ்தில் குறிப்பிட்டிருக்கின்றனர். அது வெள்ளையருக்கு அளவில்லா கோபத்தை மூட்டிவிட்டது. அவ் விஷயமாய் சர். சாமுவேல் வில்சன் ஏதேனும் சூழ்ச்சி செய்யப் புறப்பட்டு வந்திருக்கக் கூடும். அவர் செய்வன செய்யட்டும், கமிஷன் சிபார்சுப்படி பிரிட்டிஷார் நடக்காவிட்டால் நாம் நமது தாய் நாட்டாரின் உதவியைப் பெற்று அவர்களில் சிறந்த சில தலைவர்க ளடங்கிய ஒரு கூட்டத்துடன் ஆபிரிக்காவிலுள்ள இந்திய பிரதிநிதிக் கூட்டமும் சேர்ந்து நேராக இங்கிலாந்து சென்று ஆப்பிரிக்கா இந்தியர் உரிமைக்காக வாதாடவேண்டும்.

### இந்தியர் தொல்லை.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தி லிருந்து இங்கு இந்தியருக்கு ஆபத்துக்குமேல் ஆபத்து நேரிட்ட வண்ணமாகவே யிருந்து வருகிறது. இங்குள்ள இந்தியருக்கு சரியான உரிமையில்லை. நாகரிகமடைந்த எந் நாட்டினரும் நம்மை இவ்விதக் கொடுமையுடன் நடத்த மாட்டார்கள். நாம் குடியிருக்கும் நகரத்தில் நமக்கு உரிமை யில்லை. நீதி யிலாகாவில் நமக்கு நீதி யில்லை. ஜூரி விசாரணை யில்லை; உத்தியோகமில்லை. நாம் கொடுக்கும் வரிக்குக் குறைவில்லை. ஆயினும் சிவில் இலாகாவில் நமக்கு உயர்ந்த உத்தியோக மில்லை. துப்பாக்கி முதலிய ஆயுதங்களும் வைத்திருக்கக் கூடாது. இந்தியர் கௌரவ மாஜிஸ்திரேட்டாக வர முடியாது. சட்ட சபையிலும் பொது ஸ்தாபனங்களிலும் இந்தியருக்கு சரியான உரிமையில்லை. இது போன்று இந்தியர் இங்கு அனுபவிக்கும் தொல்லைகளுக்கு எல்லையில்லை. இவற்றை பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு எத்தனையோ முறை எடுத்துக் கூறியாயிற்று. அவை யாவும் செவிடன் காதில் சங்கூதியதற்கு ஒப்பாயிற்று.

### ஒத்துழையாமை.

இவ்வித தொல்லைக்கு இலக்காயின இந்தியர் தங்கள் சுயமரியாதையைப் பாதுகாக்கும் பொருட்டு சர்க்காருடன் ஒத்துழையாமையை அனுஷ்டித்தார்கள். நாம் நகர சபைகளையும் பள்ளிக்கூடங்களையும் பகிஷ்கரிப்பது கூடாது. சர்க்காருடன் ஒத்துழைத்தே யாக வேண்டும். சர்க்காருடன் ஒத்துழைப்பதால் ஏதேனும் நன்மை ஏற்படுகிறதா வென்று பார்ப்போம். அதன் பின் நாம் வேறு முறைகளைக் கையாளுவதைப் பற்றி யோசிக்கலாம்.

### தாய் நாட்டின் உதவி.

இந்திய சர்க்காரின் உதவியும், எமது இந்திய சகோதரரின் உதவியையுமே நாங்கள் எதிர் பார்த்திருக்கிறோம். அவர்கள் உதவி எமக்கு எத்துணை அவசிய மென்பதை இக் காங்கிரஸ் மூலமாய் தெளிவாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் என முடித்தார்.

### தலைவர் பிரசங்கம்.

“ஹில்ட்டன்-யங் கமிஷன் யாதாஸ்தைப் பற்றி நாம் முதன் முதலாக நன்கு ஆராய வேண்டியதிருக்கிறது. கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியரே, பொருளாதார நிலைமையை நல்ல நிலைமைக்குக் கொண்டுவரக் காரணமென பல வெள்ளையர் அடிக்கடி கூறிவந்திருக்கிறார்கள். அவ் வுண்மை யறிந்தும் கெனியா பக்கமுள்ள இந்தியரைத் துன்புறுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு சரியான உரிமை யில்லை. ஹில்ட்டன்-யங் கமிஷனர்கள் அவ் விஷயமாய் நல்ல சிபார்சு செய்திருக்கிறார்களென்பது உண்மையே யாயினும் அவர்களும் வெள்ளையரென்பதை மறந்துவிடக் கூடாது. வெள்ளையரே இந்தியருக்கு மேலிருந்து அவர்களை ஆட்சிசெய்து அவர்கள் உரிமையை நிர்ணயிக்க வேண்டுமெனக் கமிஷனின் சிபார்சில் வெளியாகிறது. பிரிட்டிஷாருக்கு சகல உரிமையுமிருக்கவேண்டு மெனக் கூறுவதிலிருந்து அவர்கள் சிபார்சு எவ்வித போக்கி லிருக்குமென்பதை யூகித்துக் கொள்ளலாம். கெனியாவுக்குப் பொறுப்பாட்சிகொடுப்பதை கமிஷனர் மறுத்திருக்கிறார்கள். அங்கு குடியேறி யிருப்பவர்களையும், அங்குள்ள 25 லக்ஷம் சுதேசிகளையும் அடக்கியாளும் பொறுப்பு வெள்ளையருக்கே யிருந்து வரவேண்டுமாம்! பொறுப்பாட்சி கொடுப்பதற்கு சுதேசிகளை தயாரிப்பதற்கென ஒரு மார்க்கங் கூறுகிறார்கள். கெனியா, யுகாண்டா, தங்கனிகா முதலிய இடங்களைச் சேர்த்து, இவை யாவற்றிற்கும் ஒரு ஹை கமிஷனர் நியமிக்க வேண்டுமாம். இவருக்கு சில அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சுதேசிகள் விஷயத்தில் எவ்வித தகராறும் ஏற்படுமே யானால், அதைப்பற்றி விசாரிக்க இவருக்கு அதிகாரமுண்டு. ஹில்ட்டன்-யங் யாதாஸ்தில் கெனியா விஷயமாகச் செய்

திருக்கும் சிபார்சுகளை இவர் இங்கு அமுலுக்குக் கொண்டு வர முயற்சிப்பார். சுதேசிகளுக்கு உத்தியோகங்கள் கொடுக்கும் விஷயத்திலும் இவருக்கு அதிகார முண்டு. அங்கு ஒரு கவர்னர் ஜெனரலை நியமிப்பது நலமெனத் தெரியுமே யானால், கவர்னர் ஜெனரல் நியமித்து அவருக்கு ஆலோசனைக் கமிட்டியை நியமிப்பார்கள். அக் கமிட்டியில் உத்தியோகஸ்தர், உத்தியோகஸ்த ரல்லாதார் அங்கத்தினரா யிருக்கவேண்டு மென்பதே.

## சில மாறுதல்கள்.

ஹில்டன்-யங் கமிஷனர் சிபார்சில் குறிப்பிட வேண்டிய சில முக்கிய விஷயமாவது,— குடியேற்ற நாட்டு விஷயமாக சீர் திருத்தங்கள் செய்வதற்கும் பிரிட்டிஷ் சர்க்கார் என்ன செய்ய வேண்டுமெனக் கமிஷனர் ஒரு யோசனை கூறி யிருக்கிறார். குடியேற்ற நாட்டு மந்திரியின் தலைமையின் கீழ் ஒரு ஆலோசனைக் கமிட்டியமைக்க வேண்டுமெனவும், அதில் குடியேற்ற நாடுகளிலுள்ள உத்தியோகஸ்தர், உத்தியோகஸ்த ரல்லாதார் அங்கம் வகிக்க வேண்டு மெனவும், குடியேற்ற நாட்டின் விஷயமாய் தகராறு ஏதேனும் வருங் காலத்தில் மந்திரி இக் கமிட்டியாரை லண்டனுக்கு வர வழைத்து ஆலோசனை செய்து அதன்படி நடக்கவேண்டு மெனவும் ஒரு யுக்தி சொல்லி யிருக்கிறார்கள்.

## சர். எட்வர்டு ஹில்டன்-யங் கருத்து

ஹில்டன் யங் கமிஷன் தலைவரான சர். எட்வர்டு ஹில்டன் யங் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். தற்போதிருந்து வரும் சட்டசபை அமைப்பில் அவருக்கு நம்பிக்கை யில்லை. உத்தியோகஸ்த ரல்லாத அங்கத்தினர் பெரும்பான்மையா யிருக்க வேண்டு மென்பது அவரது நோக்கம், வகுப்பு துவேஷத்தைக் கிளப்புவதால் எவ்வித அரசியல் முன்னேற்றமும அடைய முடியாதெனக் கூறுகிறார். தற்போது சட்டசபையி லிருந்து வரும் 38 அங்கத்தினர்களை 35 பேர்களாகக் குறைக்கவேண்டு மெனவும், அவர்களில் 10 உத்தியோகஸ்த அங்கத்தினரும், 6 இந்தியப் பிரதிநிதிகளும் ஒரு அரபியரும், 18 ஐரோப்பியர்களு மிருக்கவேண்டு மெனத் தெரிவிக்கிறார். ஐரோப்பிய அங்கத்தினர்களில் சிலர் சுதேசிகளின் நல உரிமையைப் பாதுகாக்கக் கூடியவர்களாக விருக்கவேண்டுமாம். அவ்வாறின்றி சட்டசபை பிரதிநிதிகள் 39 பேர்களாக விருந்தால் உத்தியோகப் பற்றற்ற ஐரோப்பிய அங்கத்தினர் 20 பேர்க ளிருக்க வேண்டு மெனக் கூறுகிறார். ஆனால் இந்தியர் இவரது சிபார்சுகளை ஏற்றுக் கொள்ள மாட்டார்க ளென்பது திண்ணம். இந்தியாவிலும் இந்தியர் அவரது யோசனையை ஏற்றுக் கொள்ளுவார்க ளெனக் கூற முடியாது. இதற்கு முன் முனிசிபல் சபையில் ஐரோப்பிய பிரதிநிதிகள் பெரும்பான்மையா யிருக்கவேண்டு மென பிதாம் கமிஷன் சிபார்சு செய்ததின் எதிரொலியே சர். எட்வர்ட் யங்கின் சிபார்சு யென்பதற்குச் சந்தேக மில்லை. ஆதலால் இக் கமிஷன்களிலும், கமிட்டிகளிலும் நம்பிக்கை வைப்பது வீண் காரியம்.

## இந்தியர் கதி.

இந்தியரின் கதி எக்காலமும் அதோ கதிதான். தென்னாப்பிரிக்காவில் இந்தியர் குடியேறி எத்தனையோ நூற்றாண்டுக ளாகின்றன. இந்தியர் எத்துறையில் முன்னேறி யிருக்கிறார்கள்? அவர்களுக்கு தென்னாப்பிரிக்கா சர்க்கார் செய்திருக்கும் நன்மைதா னென்ன வெனக் கேட்கிறேன். ஹில்டன் யங் யாதாஸ்தின் சிபார்சும் வெள்ளையரின் சார்பாகவே யிருக்கிற தென பொதுப்படக் கூறலாம். அதனால் சில நன்மைகள் ஏற்படின் வெள்ளையர் சுதேசிகளை அடக்கியாளப் போதிய அதிகாரங் கொடுத்திருக்கிறது. சட்ட சபையில் வெள்ளையருக்கே பெரும்பான்மையாக ஸ்தானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்தியரின் நிலைமை பழைய குருடிதான். வெள்ளையர் ஸ்தானங்களுக்கு இந்தியர் மீது அநுதாப முள்ள சில பாதிரிகளையோ, அல்லது உத்தியோகத்திலிருந்து விலகிய ஐரோப்பியரையோ தெரிந்தெடுக்க வேண்டுமாம். அவ்வாறு எடுத்த போதினும் சுதேசிகளும், உத்தியோகஸ்த அங்கத்தினரும் சேர்ந்து வெள்ளையர் தொகையை மேற்கொள்ள முடியாது. சுதேசிகளின் பிரதிநிதிகளாக வெள்ளையரே சட்டசபைக்குச் செல்லவேண்டு மென்றால் அதன் நோக்க மென்ன வெனக் கேட்கிறேன். இந்தியர் என்றும் அடிமைகள் அவர்களைத்; தாங்கி நடத்தும் பொறுப்பு வெள்ளையருக்கே உரியதென்பதா?



## தலைவர் கருத்து.

இந்தியரின் முன்னேற்றத்தில் இந்தியரே கவலை செலுத்தி உழைக்க வேண்டும். ஹில்டன் யங் யாதாஸ்தின் சிபார்சால் எவ்வித பயனும் ஏற்படாது. இறுமாப்பும், துவேஷமும் ஒழியவேண்டும். வகுப்பு பேத மில்லாமல் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமை கொடுத்தால் இவ்வித இறுமாப்பு ஒழியு மென்பது எமது கருத்து. இந்தியரால் வெள்ளையருக்கு எக்காலத்தும் எவ்விதக் கெடுதியு மேற்பட வில்லை. அவ்வாறிருக்க வெள்ளையர் இந்தியருக்கு உரிமை யளிப்பதில் அச்சங் கொள்ளுவதில் அர்த்த மெதுவு மிருப்பதாகக் கூற முடியாது. இந்தியரின் ஒத்துழைப்பும் ஒற்றுமையு மின்றி கீழ் ஆபிரிக்கா அபிவிருத்தியடைவது முடியாத காரியம். இறுதியாக கமிஷன் சிபார்சைப் பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். கமிஷன் சிபார்சில் கவர்னர் ஜெனரல் நியமனத்தைப் பற்றியும், ஆலோசனைக் கமிட்டியைப் பற்றியும் தெரிவித்திருக்கிறார்கள். அவ்வித ஆலோசனைக் கமிட்டி நியமிப்பது நலமே யாயினும், அவர்களுக்குள் அபிப்பிராய பேதம் எழுந்த காலத்தில் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு நேராக விண்ணப்பித்துக் கொள்ளும் உரிமை யிருக்க வேண்டும். கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர் நான் மேலே கூறியது போல் தங்கள் உரிமையில் தாங்களே கவனஞ் செலுத்தி வரவேண்டும். அவர்களுக்குப் பலவாறான நெருக்கடி யேற்படு மென்பது திண்ணம். ஆனால், அவர்களுக்கு உதவி செய்ய அவர்கள் தாய்நாடும் இந்திய சகோதரர்களும் எக் காலமும் தயாராக விருக்கிறார்க ளென்பது மட்டும் நிச்சயம். இங்குள்ள இந்தியரின் உரிமை இந்தியரைப் பொறுத்த தென்பதற்குச் சந்தேகமில்லை"

(தமிழ்நாடு.)

---

## விசேஷக் குறிப்புகள்.

பம்பாயில் சென்ற வாரம் தொடங்கிய தொழிலாளர் வேலை நிறுத்தத்தை யொட்டி ஏற்பட்ட கலகத்தின் பயனாக மொத்தம் 7 பேர்கள் உயிரிழந்தார்கள். சுமார் 300 பேர்கள் காய மடைந்திருக்கிறார்கள். கவர்னர் தலையிட்டுச் சமரச முயற்சி செய்து வருகிறார்.

ராஜா அண்ணாமலை செட்டியாருக்கு ராஜாப் பட்டம் கிடைத்தது பற்றி ராஜா செட்டியார் கவர்னர் மனைவியான லேடி கோஷன் அம்மையாரிடம் பதினாயிரம் ரூபாய் கொடுத்துப் பல தர்மங்களுக்கும் விநியோகம் செய்யுமாறு வேண்டிக் கொண்டார். அவ்வாறே அவர் பல தர்மங்களுக்கும் விநியோகித்து விட்டார்.

பஞ்சாப் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான டாக்டர் சத்திய பாலரை அதிகாரிகள் சென்ற வாரத்தில் கைது செய்திருக்கிறார்கள். டாக்டர் சத்தியபால் ரோடக் மகா நாட்டில் ராஜத்துவேஷ மாகப்பேசிய தாக வழக்கு ஏற்பட்டிருக்கிறது. அவரை அதிகாரிகள் டில்லிக்குக் கொண்டு போய் விட்டார்கள். போலீசார் அவரைக் கையில் விலங்கிட்டுக் கொண்டு போனார்களாம்.

நன்றாக எழுதப் பழகாதவருக்கு நாளடைவில் குறுகிய தோள்களும், கூனும் ஏற்பட்டு

அமெரிக்காவில் மிருகங்கள் பறவைகளின் கண்கள், நகங்கள், பறவை யலகுகள் முதலியன ஏராளமாய் விற்கப்படுகின்றன வாம். இவை பொய்ப் பிராணிகள் செய்ய வேண்டப் படுகின்றன.

லண்டனில் எந்த ஸ்திரீயும் வாடகை மோட்டார் வண்டி ஓட்டும் லைஸென்ஸ் பெறவில்லையாம். இந்தத் தொழில் ஒன்றுதான் மேனாட்டு ஸ்திரீகளால் பின்பற்றப்படாததாகும்.


பியூனஸ் ஆர்ஸ் என்ற இடத்திலுள்ள ஸ்திரீகள் தான் உலகத்தில் மிக்க நல்ல உடை அணிபவர்களாம. அத்தேசத்தில் பட்டுத்துணிகள் ஏராளமாகத் திருட்டுத் தனமாய் இறக்குமதி செய்யப்படுவதால் அவர்கள் பட்டு உடைகளையே தரிக்கின்றனர்.

மதுவிலக்குப் பிரசாரஞ் செய்வதற்காகச் சென்னை அரசாங்கத்தார் ஒதுக்கிவைத்த நாலு லட்சம் ரூபாயையும் எவ்வாறு செலவு செய்வதென்று முடிவு செய்யுமாறு மந்திரிகள் நீலகிரியில் ஒரு கூட்டம் கூடி ஒரு பஞ்சாயத்தை நியமித்திருக்கிறார்கள்.

சூரிய உஷ்ணத்தி னுதவியின்றி மின்சார சக்தியினாலேயே வைக்கோலைக் காயவைக்கும்

## எங்கள் சித்திரப் பத்தி

### வைதீகர் கொடுமை.



பூஜாரி. அடே, பிரஷ்டா, தூரப்போ...கோயில் வாசலைத் தொடாதே. தீண்டாதவன் கோயிலுக்குள் போவதற்கு அதிகாரமேது? தலைவர்கள் லக்ஷம் பேர் கத்துகிறார்கள். அவர்களின் புத்தி பிரஷ்டமாகி விட்டது. எல்லாம் பிரஷ்டர்கள். கோயிலில் உன்னை விட்டு, பவித்திரத்தை குலைக்கமாட்டேன். தெரியுமா? பிரஷ்டப் பயலே.


# வீராம்ருத லேகியம்

அன்பர்களே, உடல் நலம் மிருந்து, ரத்த ஓட்ட மதிகரித்து உற்சாகமும், உள்ளக் கிளர்ச்சியும் மேலிட்டு, ஊக்க மிருந்து, உள்ளம் குளிர்ந்து எடுத்த கருமம் சலியாதுழைத்து முடிக்கவும் ஆண்மையும் அழகும் அளவின்றி பெருகி இவனே பூலோக மதன் என யாரும் உரைக்கும்படி உடலை திண்ணமாய் செய்யும்.

மெடல்களும், அத்தாக்ஷி பத்திரங்கள் பலவும் பெற்றுள்ளோம். உடனே எழுதுங்கள்.

ஒரு டின் விலை ரூபாய் இரண்டே.

---

# வெள்ளை.

நோயில் பெருத்த தொல்லை விளைத்து, பலவிதமான மஞ்சள் வெள்ளை, உதிரவெள்ளை, தந்தி வெள்ளை, நீர் சுருக்கு, மேகம், மூலம், முதலிய வியாதிகளை ஐந்தே பொழுதில் ஆச்சரியத்தக்க குணத்தைக்காட்டி அழகும் திரேகக் கட்டும் சிறந்து விளங்கச் செயயும்.

20 மாத்திரை அடங்கிய டப்பி 1க்கு ரூபாய் ஒன்றுதான்.

**கெமிகோ எர்பல் பர்மஸி,**

(சிகாமணி புத்தகம் இனம்.) 35, தங்கசாலை வீதி,

**P. T.** மதராஸ்.

**Chemico Herbal Pharmacy,**

**35, Mint St., P. T. Madras.**

# A. S.

ஒரு சிட்டிகை எடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 4.

ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4. ஷை சேர் 1-க்கு ரூ. 8


எம். ஜே. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 3.

ஷை டஜன் 1-க்கு ரூ. 2 ஷை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

**எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாய்பு,**

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201. மதராஸ்.



## ARTIFICIAL NEO-DIAMOND

### (A LATEST SUCCESS IN CHEMICAL DIAMONDS)

### நியோடைமன் : கெமிக்கல் புதுவைரம்

அழகான பூரிப்பும் பிரகாசமும் கடினமுங் கொண்டது. சீமைச் கமல வைரமே தேவையில்லை. பவுன் தங்கத்தில் கட்டிய கம்மல், மூக்குத்தி, பேசரி, மோதிரம் சகல நகைகளும் தயார். சுவிஸ் தேசத்தில் வார்ப்பிடமாகச் செய்த களங்களை வரவழைத்து இந்தியாவில் பட்டை, பிரகாசம் கொடுக்கப்பட்டது. எத்தனை வருஷமானாலும் கருக்காது, தேயாது, குறையாது, உத்திரவாத முண்டு.

சிறு சன்ன கமலம் காரட் ரூ. 7 முதல் ரூ. 10 வரை.

கேட்லாக் இனம். மத்திய சைஸ் உரு சைஸ் ரூ. 4 ,, ,, 6 ,,

நியோ டைமன் கம்பெனி,

425, சௌக்கார்பேட்டை, சென்னை.


மெடல்களும் நற்சாக்ஷி பத்திரங்களும்

பரிசுபெற்ற

நியூ ப் பிராஸஸ் (ரிஜிஸ்டர்ட்)

## எர்குஷன் ரப்பர் ஸ்டாம்புகள்



**மதராஸ் ரப்பர்ஸ்டாம்பு கம்பெனி,**

தபால் பெட்டி 74, மதராஸ்.

# மஹாலக்ஷ்மி கவசம்

முற்றும் கற்றுணர்ந்த மஹான் ஒருவரால் வேதாகம சாஸ்திரமுறை பிறழாது செய்யப்பட்டது. உண்மையான பலனை அளிக்கத் தக்கது—வாழ்வில் கஷ்டம் நீங்கி, கவலை நீங்கி, துன்பம் நீங்கி, துயரம் நீங்கி சௌக்ய சம்பன்னராய் வஜ்ரதேகத்துடனும் வசீகர முகத்துடனும் வற்றாத தேஜஸுடனும் வாழ இதைவிட அரிய சாதனம் வேறில்லை என்றே சொல்லவேண்டும். ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர் மறுமுறை ஒரு டஜனுக்கு நண்பர்களுக்கு சிபார்சு செய்கிறார் என்றால் இதன் உண்மையைப்பற்றி இன்னும் எழுத வேண்டுமா?

பல்லாயிரக்கணக்கான கவசங்கள் இதுவரை விற்கப்பட்டு விட்டன. நீங்களும் ஒன்று இன்றே வாங்குங்கள்.

தங்கக் கவசம் ரூ. 7—0—0.

வெள்ளிக் கவசம் ரூ. 2—0—0.

**மஹாலக்ஷ்மி கம்பெனி,**

தபால் பெட்டி 280, :: மதராஸ்.

## பதினெட்டாம் பாஷை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேசவும் எழுதவும் ஆரம்பித்து விடலாம். இந்த பாஷையில் வியாபார ரகசியங்களை குறித்துக் கொண்டால் இப்பாஷை தெரிந்தவர்கள் தவிர வேறு எவரும் கண்டுகொள்ள முடியாது. இப்பாஷையில் ஸ்திரீகள் தங்கள் கணவர்களுடன் குடும்ப ரகசியத்தைப் பேசினால் பக்கத்திலுள்ளவர்கள் ஒற்றுக் கேட்டு பிறரிடம் சொல்லி கோள் மூட்ட முடியாது. இது ஓர் அபூர்வ தமிழ் பரிபாஷை. சொல்ப காபிகளே கையிருப்பிலிருக்கிறது. முந்துங்கள்.

விலை அணா. 8.

அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீனமாதாந்தர ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளி வந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்கு புதியதாகவும் ஆற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்யாசமின்றி சகல மதஸ்தர்களையும் களிக்கச் செய்யும் வியாஸங்களையும் யாவரும் முன்னேற்றமடையக்கூடிய வழியையும் போதிப்பதை பிரதி மாத சஞ்சிகையிலும் காணலாம். இதில் மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்துப் பார்த்தால் பிறர் சிபாரிசு இல்லாமல் தாங்களே சந்தாதாரராவீர்களென்பது நிச்சயம். பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளி வரும். வருஷ சந்தா ரூ 1. வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி காபி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

வெளி வந்துவிட்டது! 10-ம் பதிப்பு வெளி வந்து விட்டது!

## - ஆங்கில ஆசான் -

(எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள். போலிப் புத்தகங்களால் ஏமாற வேண்டாம்)




60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளக் கூடிய விதமாய் அப்பியாசபாடங்களாக வகுத்து முன் பதிப்புகளை விட அதிக பக்கங்கள் சேர்த்து பெரிய எழுத்துக்களில் அச்சிட்டிருக்கிறது. இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான் புத்தகங்களைவிட வேறு எந்த புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாதென்பது பலரும் அறிந்த விஷயம். நமது முன் பதிப்பு புத்தகங்களை வைத்திருப்பவர்கள் கூட பத்தாம் பதிப்பை பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்கவேண்டுமென்று எண்ணுவார்கள், இதில் 1-அணா முதல் 300 ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் அச்சிட்டிருக்கிறது. 800 பக்கங்களுக்கு மேல் கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு செய்தது.

விலை ரூபா 2 0 0

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை வீதி, மதராஸ்.

80 வருஷம்
உலகப் பிரசித்தி பெற்ற

# அசல்



# ஷண்முகம்
# பட்டணம்பொடி

காரம், மணம் நிறம், குணம், வாடை உள்ளது.

அநேக மெடல்கள் நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றது.

ஏஜண்டுகள் தேவை.

முதல்தரம் 1 வீசை ரூ. 4—4—0

2-ம் தரம் 1 வீசை ரூ. 3—4—0.

ஷண்முகம் மூக்குத்தூள்

கம்பெனி, லிமிடெட்.

Post Box No. 140.

மதராஸ்.

---

## இனி கவலை வேண்டாம்.

முகப்பொலி விழுந்து, கூந்தல் உதிரும் சமயத்திலிருக்கவும், பேன் ஈறு முதலியவைகளாலும், கண் மங்கலாலும், மெழுக்கையாலும் கஷ்டப்படுவோர்களுக்குக் கஷ்டமும் மனக் கவலையும் இனி இல்லை. என்? எங்கள் —

## ரர்பா கூந்தல் தைலம்.

மேலே கண்ட எல்லா குறைகளையும் டைரக்ஷன் படி உபயோகிக்க முக அழகும், வசீகரமும், நீண்ட அழகிய கூந்தலும் உண்டாக்கும். முதல் உபயோகிப்பில் கூட கூந்தல் உதிராது. ஒரு முறை பரீட்சித்தால் பல முறை நீங்கள் வாங்குவதோடு, பலருக்குச் சிபார்சும் செய்வீர்களென்பது நிச்சயம்—நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றுள்ளோம்.

கேட்லாக் இனாம்.


புட்டி 1-க்கு விலை அணா 12.

டி. அம்மணி அன் கோ,
மவுண்ட்ரோடு (P.O.)
மதராஸ்.

---

## டார்லிங் பெயின் பாம்.

எல்லா விதமான நோய்களையும், தேள் கொட்டுவாக்கிலும் பூரான், முதலியவைகளின் விஷத்தையும்




ஒழிப்பதில் நிகரற்றது.

புட்டி 1-க்கு விலை அணா எட்டு.

ஏஜண்டுகள் தேவை! கேட்லாக் இனாம்.

விவரத்திற்கு எழுதுங்கள்.

THE DARLING PAIN BALM Co.,
Mount Road, P.o., MADRAS.

---

1,00,000 குடும்பங்களை சீர்படுத்திய நூல் எது?

## இல்வாழ்க்கையின்
### இரகசியங்கள்.

என்ற நூல்தான். ஆனால் இதைப் போலவே சிறிது பெயர் மாற்றத்துடன் அநேக போலிப் புஸ்தகங்கள் கிளம்பி யிருக்கின்றனவே? உண்மையான புஸ்தகம் எது என்று எப்படித் தெரிந்து வாங்குவது? நேயர்களே! புஸ்தகத்தில் "ஏரோப்ளேன்" (ஆகாயக் கப்பல்) டிரேட் மார்க்கு போட்டிருக்கும். இதுதான் உண்மையான ஆதிநூல். இந்த டிரேட் மார்க் உள்ள புஸ்தகம் எல்லா ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். விலை ரூ. 2-0-0

ஒரே காலத்தில் இரண்டு புஸ்தகங்கள் தருவித்தால் தபால் செலவில்லை.

வாசன் புஸ்தக சாலை,
244, தங்கசாலைவீதி, மதராஸ்.

---

## "ஆனந்தவிகடன்."

இதற்கு இப்பொழுது நான்காம் ஆண்டு நடக்கிறது.

64 பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளிவரும் உயர்ந்த பத்திரிகை. இதில் பலமேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனின் ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768 பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக் கூடாதா?

தபால்கூலி யுள்பட இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு வருஷ சந்தா ரூ. 1-0-0

அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ. 1-4-0


மாதிரிகாபி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி மதராஸ்.
தந்தி விலாசம் "விகடன்" டெலிபோன் 3311

---

ரூ. 2-14-0 ரூ. 2-14-0

## நூதன கைத் தையல் மெஷின்.



சிலகாலம் வரையில் மட்டும் மேற்கண்ட எமது அசல் விலைக்குக் கொடுக்கிறோம்.

இம் மெஷின் புதிதாகக் கண்டு பிடிக்கப் பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள் மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாகெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம், மஸ்லின் துணியிலும், மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1-க்கு ரூ. 2-14-0

திருப்தி யில்லாவிடில் பணம் வாபீஸ்.

கானடியன் வாட்சு பீபிள்,
ஸோல் ஏஜண்ட்ஸ்
ஜார்ஜ் டவன். மதராஸ்.

---

1,000 இரகசிய முறைகள் கொண்ட அருமையான நூல் வெளிவந்துவிட்டது!


### கைத் தொழில் முறைகள்.

இதில் மாதம் 100 ரூ. முதல் 500 ரூ. வரை சம்பாதிக்கத்தக்க அநேக தொழில் முறைகள் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சோப்புகள், பெப்பர்மிண்டுகள், தீக் குச்சிகள், பலவித மருந்துகள், மெழுகு வர்த்தி வர்ண தினுசுகள், வார்னிஷ், கூந்தல் தைலங்கள் இப்படி 1000 முறைகள் உண்டு. விலை ரூ. 1-8-0

வாசன் புஸ்தக சாலை,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

---

எமது விசேஷ குறைந்தவிலை விற்பனை.
22 காரட் ரோல்டு கோல்டு கைக் கடியாரங்கள்.




இதில் எம் மாதிரி வேஷப் வேண்டு மானாலும் அனுப்பப்படும். கடியாரம் உறுதியாயும் நெடுநாள் உழைக்கக்கூடிய தாயுமிருக்கும். ஒவ்வொன்றும் ரோல்டு கோல்டு அமரிக்கன் கை சங்கலியுடன் அனுப்பப்படும். சிலகாலம் வரையில் 1-க்கு விலை ரூ. 4-15-0 ஜினேன் வாட்ச் கம்பெனி,

# "ஆனந்தபோதினி"

## ஓர் செந்தமிழ் வாரப் பத்திரிகை.

"ஆனந்த போதினி" மாத சஞ்சிகையின் ஊழியம் உலகம் அறியும். அவ்வூழியத்தை மிகுதிப்படுத்தும் நோக்கத்துடன், பலருடைய வேண்டுகோளின்மேல் மாதசஞ்சிகையோடு "ஆனந்த போதினி" வாரப் பத்திரிகையும் வெளிவருகிறது. தமிழ்ப் பெரும் புலவர்களும் ஆங்கிலமறிந்த பேரறிஞர்களும் பிறரும் மகாஜன சமூக தேசிய முன்னேற்றத்தைப்பற்றி தங்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைக் கொட்டிக் குவிக்கக் கங்கணங்கட்டி யிருக்கின்றனர்.

## உங்களுக்கு என்ன வேண்டும்?

மத உண்மைகளா? சரித்திர ஆராய்ச்சிகளா? கைத்தொழில் விளக்கங்களா? வியாபார ரகசியங்களா? விஞ்ஞானமா? (Science) கிராமச் சீர்திருத்தங்களா? சமூக இயல்புகளா? வைத்திய விசேஷங்களா? தேசிய தத்துவங்களா? சிறுகதைப் பகுதிகளா? இன்னிசைப் பாட்டுகளா? விநோதங்களா?

எல்லாவற்றிற்கும் "ஆனந்தபோதினி" வாரப் பத்திரிகை பூலோக கற்பகமாக விளங்குகிறது.

உள்நாடு வருடசந்தா ரூ. 3. 6 மாதசந்தா ரூ. 1-12-0 பினாங்கு, சிங்கப்பூர், முதலிய வெளிநாடுகட்கு வருட சந்தா ரூ. 4.

## ஆனந்தபோதினி (மாதப் பதிப்பு.)

இனிய தமிழில் வெளிவரும் மாதப் பத்திரிகை; தமிழ் நாட்டில் வெளிவரும் மாதச் சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது; 20,000 சந்தாதாரர்களை யுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டுவரும் உயர்ந்த வியாசங்களைக் கொண்டு வெளிவருவது: எம் மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப் போதிப்பது; 64-பக்கங் கொண்டது; முகப்பு ... டான் படத்துடனும், லயன் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாது பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிக்க குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனாம். வருட சந்தா தபாற்கூலி யுள்பட உள்நாடுக்கு ரூ. 1. வெளிநாடுக்கு ரூ. 1-4-0.

# சுக்கில வருஷத்திய

(நேத்திர ஜீவநக்ஷத்திராதி சாந்திர செளரமான)

சர்வ முகூர்த்த "ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்"

நமது வானசாஸ்திரக் கணிதத்திலும், ஆங்கில வானசாஸ்திரக் கணிதத்திலும் திறமைவாய்ந்த, ஸ்ரீமான் C. G. இராஜன் பி.ஏ. (C. G. Rajan, B.A. Mathematics) அவர்களால் இப் பஞ்சாங்கம் கணிக்கப்பட்டது.

சிறுவர்களும், ஸ்திரீகளும், ஜோதிடர்களும் சுலபமாக அறிந்து கொள்ளும்படி திதி நக்ஷத்திரங்கள் நாழிகைபோடு, ... , நேத்திரம், ஜீவன், அமிர்தாதி யோகங்கள், விவாக சக்கரம், அகஸ் இராப்பிருப்பு, விரதாதி விசேஷதினங்கள், தசாபுக்தி, கிரக சாரங்கள், தசவிதப் பொருத்தங்கள், சகுனங்கள் நவநாயகர்கள் பலன் முதலியனவும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவ் வருஷம் விசேஷமாக ஜோதிடர்களுக்கு உபயோகமாயுள்ள நக்ஷத்திர ஓரை, சந்திர உதயம், கிரக உதயம், ... அயன சுத்த ஸ்புடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது ஜோதிடர்களுக்கு கிரக ஸ்புடம் செய்ய அதிக உபயோகமாகும்.

கடந்த வருடங்களைக்காட்டிலும் இவ்வருடப் பஞ்சாங்கத்தில் அனேக விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவ்வருடப் பஞ்சாங்கம் 92 பக்கங்கள் கொண்டது.

பஞ்சாங்கம் 1-க்கு விலை அணா 2; 6-பஞ்சாங்கங்கள் அணா 8; 12-பஞ்சாங்கங்கள் அணா 14.

தனி பஞ்சாங்கம் வேண்டுவோர் விலையோடு தபால்கூலி ½ அணா சேர்த்து தபால் ஸ்டாம்புகளாக அனுப்பவும்.

25 பஞ்சாங்கங்கள் வேண்டுவோர் ரூ. 1-10-0 முந்தி அனுப்பி தங்களுக்கு சமீபமான ரயில்வே ஸ்டேஷன் தெரிவித்தால் பார்சலாக அனுப்புவோம். ரயில் சார்ஜ் உங்களைச் சேர்ந்தது.

☞ நமது பஞ்சாங்கமும் புஸ்தகங்களும் எல்லா ஊர் புத்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

"ஆனந்தபோதினி" ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.